# வைப்பகம்

2020 சனவரி - மார்ச்சு மலர் 5 இதழ் 1 - 3

அறிவுத் தேடலின் மையம்

ரூ. 20/-

02 வேறுபட்ட இயலுமையினைக் கொண்ட பொருளாதார முகவர்களை தேசிய தொழிற்படைக்குள் பயனுறு விதத்தில் உள்வாங்கிக் கொள்ளுதல்: சவால்களும் வாய்ப்புக்களும்

08 இலங்கையின் சமத்துவமற்ற வருமானத்தின் மீதான கோவிட்-19இன் தாக்கம்

17 நிதியியல் நிறுவனங்களுக்கான இடர்நேர்வு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்

21 நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் - இலங்கைக்கான பாடம்

29 அரச பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்தல் - ஜேர்மனியின் அனுபவம்

ISSN 2513-3012
02013
9 770041 001618

இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்

# வேறுபட்ட இயலுமையினைக் கொண்ட பொருளாதார முகவர்களை தேசிய தொழிற்படைக்குள் பயனுறு விதத்தில் உள்வாங்கிக் கொள்ளுதல்: சவால்களும் வாய்ப்புக்களும்

டபிள்யு. டி. யு. எஸ். கே. வீரசிங்க, மூத்த உதவிப் பணிப்பாளர், புள்ளிவிபரவியல் திணைக்களம்

## 1. பின்னணி

தோற்றம்பெற்று வருகின்ற உலகளாவிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலில் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சி முனைப்புப் பெற்ற விடயமாக மாறியிருக்கிறது. இது வயது முதிர்ந்த குடித்தொகை, பொருளாதார ரீதியாக செயற்பாடற்ற பெண்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் இவை போன்ற விலக்கப்பட்டவர்களைத் தொழிற்படையின் பிரதான நீரோட்டத்திற்குள் உள்ளடக்குவதற்கு இது முயற்சிக்கிறது (உதயகாந்தா கே.கே.எஸ் மற்றும் பெரேரா கே.ஈ.டி; 2013). 2012இல் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட இலங்கையின் குடித்தொகை மற்றும் வீடமைப்புத் தொகைமதிப்பின்படி இலங்கையின் மொத்தக் குடித்தொகையில் (ஐந்து வயது மற்றும் அதற்குமேல்) 8.7 சதவீதத்தினர் மாற்றுத்திறனாளிகளாக (ஏறத்தாழ 1.6 மில்லியன் ஆட்கள்) காணப்பட்டனர். உடல் ஊனத்துடன் பிறந்த குடித்தொகையினருக்குப் புறம்பாக, இரண்டு இளைஞர் கிளர்ச்சிகள், 2004இன் சுனாமி சூழல், முப்பது ஆண்டுகள் நீடித்த உள்நாட்டுப் போர் என்பனவற்றின் காரணமாக இலங்கையின் தொழிற்படை அதன் முழுமையான இயலளவினை இழந்திருக்கிறது (ஐ. குமாரசுவாமி, 2017 மற்றும் தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2012). மேலும், வயது முதிர்ந்த குடித்தொகையின் முக்கிய தன்மையும் அதிகரித்து வருகின்ற விபத்துக்களும் கூட நாட்டில் உடல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட வழிவகுக்கிறது. இந்நிகழ்வுகளுக்கு நிகரான விதத்தில் அரசாங்கத்தின் சுகாதாரம் மற்றும் நலன்புரிச் செலவினங்களும் அதிகரிப்பதுடன் தொழிற்படை சுருங்க ஆரம்பித்துவிட்டது. எனவே, உடல் ஊனமுற்றவர்களை தொழிற்படையின் பிரதான நீரோட்டத்திற்குள் உள்வாங்கிக் கொள்வது அரசாங்கத்தின் நலன்புரிச் செலவினத்தினைக் குறைப்பதற்கு மட்டுமன்றி தொழிற்படையின் பங்கேற்பினை அதிகரிப்பதற்கும் உதவும்.

**உடல் ஊனமுற்ற தன்மை என்றால் என்ன?**

“உடல் ஊனம்” என்ற பதம் வேறுபட்ட நிறுவனங்களினால் வேறுபட்ட விதங்களில் வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. உலக சுகாதார அமைப்பு “உடல் ஊனங்கள் என்பது பரந்தளவு விடயங்களை உள்ளடக்கிய ஒரு சொற்பதமாகும். இது பலயீனமான பாதிக்கப்படும் தன்மை, நடவடிக்கைகளில் மட்டுப்படுத்தல்கள் மற்றும் பங்கேற்பதில் கட்டுப்பாடுகள் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. பலயீனமான பாதிக்கப்படக்கூடிய தன்மை என்பது உடற்தொழிற்பாடுகள் அல்லது உடற்கூற்றியலுடன் தொடர்பான குறைபாடாகும். நடவடிக்கையினை மட்டுப்படுத்தல் என்பது பணியினை அல்லது நடவடிக்கையினை நிறைவேற்றுவதில் தனிப்பட்ட ஒருவரினால் எதிர்நோக்கப்படும் இடர்ப்பாடாகும்; அதேவேளையில், பங்கேற்பதில் கட்டுப்பாடுகள் என்பது வாழ்க்கைச் சூழலில் ஈடுபாடு கொள்வதில் தனிப்பட்ட ஒருவரினால் அனுபவிக்கப்படும் பிரச்சனைகளாகும்” எனக் குறிப்பிடுகிறது (http://www.who.int/topics/disabilities/en/). இவ்வரைவிலக்கணமானது சுகாதார நோக்கினை அடிப்படையாகக் கொண்டதாகும் என்பதுடன் உடல் ஊனங்களும் பலயீனங்களும் ஒன்றுடனொன்று நெருங்கிய தன்மையினைக் கொண்டவையென அடையாளம் காணப்படுகின்றன.

இலங்கையில், திருத்தப்பட்டவாறான 2003ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சட்டத்தின்படி உடல் ஊனமுற்ற ஆளொருவரின் உரிமைகளை பாதுகாத்தல் சட்டம் (1996இன் 28ஆம் இலக்கம்) உடல் ஊனமென்பது பிறவியிலே ஏற்பட்ட குறைபாட்டினாலோ

அல்லது வேறேதேனும் காரணத்தினாலோ உடல் ரீதியாக அல்லது மனரீதியாக குறைபாடுகளைக் கொண்டிருப்பதன் விளைவாக அவரினால் சுயமாக முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமலிருக்கும் ஆளொருவர்" என வரைவிலக்கணம் செய்கிறது. உடல் ஊனமுற்றவர்களிடம் சில குறைபாடுகள் காணப்பட்டபோதும் அவர்களிடமும் சில ஆற்றல் வாய்ந்த தன்மைகள் காணப்படவே செய்கின்றன. இதனை அவர்களைத் தொழிற்படையில் இணைத்துக் கொள்வதன் மூலம் பயன்படுத்த முடியும். எனினும், இன்று அநேக உடல் ஊனமுற்றவர்கள் பொருளாதார ரீதியாகச் செயற்பாடற்ற வகைக்குள்ளே காணப்படுகின்றனர். இது, உடல் ஊனமுற்ற மொத்த குடித்தொகையான ஏறத்தாழ 1.6 மில்லியனில் 1.1 மில்லியனாகக் காணப்படுகின்றது (மூலம்: இலங்கையின் குடித்தொகை மற்றும் வீடமைப்பு தொகைமதிப்பு 2012, தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களம்).

## 2. தொழிற்பாடைக்குள் நுழைவதற்குக் காணப்படும் தடைகள்

மாற்றுத்திறனாளிகள் தொழிற்படைக்குள் நுழைவதிலிருந்தும் பல்வேறு தடைகள் அவர்களைத் தடைசெய்கின்றன. சில தடைகள் அவர்களது உடல் ஊனங்களுடன் தொடர்பானவையாக இருக்கின்றவிடத்து சில அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் பொதுவானவையாகக் காணப்படுகின்றன.

பொருத்தமான கல்வி போதுமானளவில் இல்லாமை மாற்றுத்திறனாளிகளிடையே காணப்படும் வேலை வாய்ப்பின்மைக்கான முக்கிய காரணமாகக் காணப்படுகின்றது. இது தற்போதைய சமூக பொருளாதாரப் பின்னணியில் உடல்ஊனமுற்றவர்களினால் எதிர்நோக்கப்படும் தடைகளுக்கான காரணமாக அமைந்திருக்கிறது. மேலும், 2004இல் உடல்ஊனமுற்றோர் தொடர்பான தேசிய கொள்கையில் அடையாளம் காணப்பட்டவாறு; சுற்றாடலை மற்றும் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வது, தொடர்பூட்டல், கலாச்சாரம், உதவிக்கான சாதனங்கள் போதுமானளவில் இல்லாமை மற்றும் சமூக ரீதியான குடும்ப எதிர்பார்ப்புக்கள் என்பன சமூகத்தின் பிரதான நீரோட்டத்தில் உடல்ஊனமுற்றவர்கள் ஈடுபாடு கொள்வதற்கான ஏனைய தடைகளாகக் காணப்படுகின்றன.

தொழிற்சந்தை தொடர்பான பிரச்சனைகளை நோக்குகையில், வேலைத்தலத்திற்குச் செல்வதும் பொதுப் போக்குவரத்தினைப் பயன்படுத்திக் கொள்வதும் உடல் ஊனமுற்றவர்களினால் எதிர்நோக்கப்படும் முக்கிய தடைகளாகும். உதாரணமாக, படிகள் மற்றும் பௌதீக தடைகளின் காரணமாக வேலைத்தலத்திற்குச் சக்கரநாற்காலிகள் மூலம் செல்வது மிகக் கடினமான காரியமாக இருக்கிறது. அதேநேரம், மட்டுப்படுத்தப்பட்ட மாற்று இருக்கை வசதிகளின் காரணமாக மாற்றுத்திறனாளிகள் பொதுப் போக்குவரத்தினையும் (உ-ம்: பேருந்து, புகைவண்டிகள்) பயன்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றனர். மேலும், அநேக வேலைத்தலங்களிலுள்ள ஆவணங்களை பார்வைக் குறைபாடுள்ள மக்களினால் பயன்படுத்திக் கொள்ளமுடிவதில்லை. ஆகவே, மாற்றுத்திறனாளிகள், குறிப்பாக, பார்வைக் குறைபாட்டினைக் கொண்ட மக்கள் வேலைத்தலங்களில் ஏராளமான தகவல் மற்றும் தொடர்பூட்டல் தடைகளை எதிர்நோக்க வேண்டியவர்களாகவுள்ளனர். மேலும், உள்ளூர் சந்தையில் தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் உதவும் கருவிகள் போதுமானளவில் இல்லாமையின் காரணமாக இப்பிரச்சனையினைக் கட்டுப்படுத்துவது இடர்ப்பாடானதாகவுள்ளது.

மேலும், உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்கு குடும்பத்திற்குள்ளே காணப்படும் கூடுதலான அல்லது குறைவான பாதுகாப்பும் அத்தகைய பிள்ளைகள் சமூக மயப்படுத்தப்படுவதனைத் தடை செய்வதாகக் காணப்படுகிறது. வேலைத்தலத்தில் மாற்றுத்திறனாளிகள் தொடர்பிலான எதிர்மறையான எண்ணங்களும் அவமானப்படுத்தும் தன்மைகளும் கூட அவர்களது தொழிற்படைப் பங்கேற்பில் அவர்களை ஊக்கம் குன்றச்செய்கின்றன. தொழில்தருநர்கள் பார்வையில், உடல் ஊனமுற்றவர்களைத் தமது நிறுவனங்களில் தொழிலுக்கு அமர்த்தினால் அது மேலதிகச் செலவுகளை ஏற்படுத்தும் என அவர்கள் எண்ணுகின்றனர். உதாரணமாக சக்கரநாற்காலிகளைப் பயன்படுத்துபவர்களை தொழிலுக்கு அமர்த்துவதற்கு முன்னர் வேலைத்தலத்தில் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கும். மறுபுறத்தில், வினைத்திறன் மீதான தப்பபிப்பிரயாங்களும் கூட தொழிற்சந்தையிலிருந்து உடல் ஊனமுற்றவர்கள் தவிர்க்கப்படுவதற்குக் காரணமாக அமைகிறது.

### இயலாத்தன்மையிலிருந்து இயலுமைத்தன்மைக்கு ஆட்களை மாற்றுதல்: தேசிய அபிவிருத்திக்கான பன்னாட்டு அனுபவங்கள்

மாற்றுத்திறனாளிகளினால் எதிர்நோக்கப்படும் சவால்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், பல்வேறு நாடுகளும் பல்வேறுபட்ட கொள்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளன. இக்கொள்கைகளைச் செயற்படா வழிமுறைகள் செயற்படும் வழிமுறைகள் என இரு பெரும் வகைகளாகப் பிரிக்க முடியும் (சிமாவும் மற்றையவர்களும் 2008) செயற்படா வழிமுறைகள் நலன்புரித் திட்டங்களையும் ஏனைய அறக்கொடை நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றன. இத்தகைய வகையிலான கொள்கைகள் ஊனமுற்றவர்கள் சுயாதீனமாக வாழ்வதிலும் பார்க்க மற்றையவர்களில் தங்கிவாழும் தன்மை அதிகரிப்பதற்கு வழிவகுக்கிறது. எனவே, அநேக நாடுகள் தமது கொள்கைகளைச் செயற்படாத்தன்மையிலிருந்து செயற்படு தன்மைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. செயற்படும் கொள்கைகளின் முக்கிய குறிக்கோள் உடல்ஊனமுற்றவர்களைச் சுயாதீனமான ஆட்களாக மாற்றுவதற்கு வலுவூட்டுவதேயாகும். மறுசொற்களில் கூறுவதாயின் இவ்வகையிலான கொள்கைகள் ஊனமுற்றவர்களை நலன்புரிகளைப் பெறுகின்ற ஆட்கள் என்ற நிலையிலிருந்து வரி செலுத்துபவர்களாக மாற்றுவதேயாகும்.

உடல்ஊனமுற்ற தன்மைக்கு ஒன்று அல்லது பல பலயீனங்கள் காரணமாக அமைகின்றன. தொழில்நுட்ப ரீதியாக உதவும் பலயீனமான உடற்பாகங்களின் தொழிற்பாடுகளுக்குப் பதிலாக தொழிலாற்றுவதில் இன்றியமையாத பங்கொன்றினை ஆற்றுகின்றன. பின்வரும் அட்டவணை இத்துறையில் நிகழ்ந்த அபிவிருத்திகளின் விபரங்களை விரித்துரைக்கின்றது.

**அட்டவணை 01 - உடல் ஊனத்தின் வகை, தடைகள் மற்றும் உதவியளிக்கின்ற தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகள்**

| உடல் ஊனத்தின் வகை | சமூக பொருளாதார மற்றும் சமூக பங்கேற்பில் காணப்படும் தடைகளுக்கான உதாரணங்கள் | பெற்றுக்கொள்ளக்கூடிய தொழில்நுட்பவியல் தீர்வுகளின் உதாரணங்கள் |
|---|---|---|
| முழுமையாக பார்வையற்ற அல்லது குறைந்தளவு பார்வையற்ற கட்புல குறைபாடு | அச்சிடப்பட்டவற்றை வாசித்தல் (உ-ம்: பாடநூல்கள், அறிவுறுத்தல்கள், ஆவணங்கள்), எழுதுதல்(உ-ம்: காசோலைகளில் சட்ட ஆவணங்களில் கையொப்பமிடல்).<br><br>அச்சிடப்பட்ட கட்புல செவிப்புல ஊடக தகவல்களைப் பயன்படுத்துதல் (உ-ம்: தொலைக்காட்சியில் காட்டப்படும் உரை வடிவிலான செய்திச்சுருள் எச்சரிக்கை, தகவல்கள்)<br><br>அனைத்து சைகைகளும் உரையிலிருக்கும் பொழுது புதிய சூழல்களை பாதைகளைக் கண்டறிதலைப் பயன்படுத்தல் | உரைகளைப் பேசுதல் மொழிபெயர்த்தல், பேச்சு/ குரல் மற்றும் வெளியீடு.<br><br>பிறெயில் முறையைக் காட்சிப்படுத்தல்<br><br>திரை மற்றும் உரையினைப் பெரிதாக்கல்<br><br>குரலைக் கண்டறிதல்<br><br>படவரைகலையின் செவிப்புல விபரணம் மற்றும் கட்புல ஊடகம்<br><br>இலத்திரனியல் செவிப்புல சைகைகள்<br><br>ஜி.பி.எஸ் வசதியுடன் பாதையினைக் கண்டறிதல்<br><br>பார்வை ரீதியான எழுத்துக்கள் அல்லது தோற்றங்களைக் கண்டறிதல்<br><br>திரையின் பிரகாசத்தினை, மாறுபட்ட வர்ணங்களை மாற்றுதல் |
| முழுமையான அல்லது பகுதியளவிலான கேட்டல் குறைபாடுகள் | பாடங்களை, எச்சரிக்கைகளை மற்றும் செவிப்புல தகவல்களை நேரடியாக அல்லது வானொலி அல்லது தொலைக்காட்சி ஊடகங்களில் கேட்டல்<br><br>ஆசிரியர்கள், அயலவர்கள் மற்றும் நண்பர்கள், வாடிக்கையாளர், முதலில் பதிலிறுப்போர், அரச ஆளணியினர் மற்றும் ஏனையவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல் | மூடப்பட்ட, திறக்கப்பட்ட தலைப்பு, காணொளி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான உபதலைப்பு<br><br>தொலைபேசி அல்லது ரெலி தொடர்பூட்டல்களுக்கான கேட்டல் கருவி (ரிரிவை/ரிடிடி). இது தொலைபேசி ஊடான செய்திகளைக் கேட்க உதவுகிறது.<br><br>தொலைத்தொடர்பூட்டல் நேரலை சேவைகள். இது தொழிற்பாட்டாளர் கருவியினூடாக பேச்சுசம்பாசணைகளுக்கு உதவுகிறது.<br><br>செவிப்புல எச்சரிக்கைகளுக்குப் பதிலாக அதிர்வு/ உரை எச்சரிக்கைகள். |
| பேச்சுக் குறைபாடுகள் | ஆசிரியர்கள், அயலவர்கள் மற்றும் நண்பர்கள், வாடிக்கையாளர், முதலில் பதிலிறுப்போர், அரச ஆளணியினர் மற்றும் ஏனையவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல் | குறுஞ்செய்தி/ உரைச் செய்திகள்<br><br>கலந்த குரல் வெளியீடு பேச்சு தொழிற்பாடுகளுக்கான உரை<br><br>பார்க்கத்தக்க பட அட்டைகளைப் பயன்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் தீர்வுகள். |

| | | |
|---|---|---|
| உடற்குறைபாடுகள், நடமாட முடியாமை, எழுதுகருவிகளைப் பயன்படுத்த முடியாமை, உடலின் சில தொழிற்பாடுகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாமை. | கட்டடங்களைப் பயன்படுத்த, வகுப்பறைகளுக்கு அல்லது ஏனைய இடங்களுக்கு நுழைய, பயணிக்க முடியாமை.<br><br>பேனை மற்றும் பென்சில், விசைப்பலகை, மவுஸ் போன்றவற்றைப் பயன்படுத்த முடியாமை. | குரல்களைக் கண்டறியும் முறைமை.<br><br>உருவாக்கப்பட்ட மற்றும் உண்மையான விசைப்பலகைகள்.<br><br>இயக்கக் கட்டுப்படுத்திகள் மற்றும் சரிசெய்யப்பட்ட மவுசுகள்.<br><br>கருவிகளைப் பயன்படுத்தி உற்றுப்பார்த்தலைப் பயன்படுத்தல் மற்றும் சமிக்ஞைகளைப் பயன்படுத்தல்.<br><br>வேலை, கல்வி மற்றும் ஏனைய பணிகளுக்காக தூரத்திலிருந்து இயங்கும் கருவிகளையும் அதேநேர வசதிகளையும் பயன்படுத்தல். |
| உணர்ந்து கொள்ளும் சக்தி குறைபாடு ஆளொருவரின் ஞாபக சக்தி, சிந்திக்கும் தன்மை, பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல், கட்புலத்தன்மை, கணிதம், வாசிக்கும் மற்றும் மொழிப்பயிற்சி, கவனம் செலுத்துதல் அல்லது அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் என்பனவற்றை உள்ளடக்கிய உணரும் குறைபாடுகள் காரணமாக மூளை தொடர்பான காயங்கள், கற்றல் குறைபாடுகள், குழப்பமான நோயின் தன்மையைக் காட்டும் அறிகுறிகள், ஆட்டிசம், மூளை சம்பந்தமான அங்கங்களின் முடக்கம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டவை | விளங்கிக் கொள்வதற்கு, நினைவுபடுத்துவதற்கு அல்லது அறிவுறுத்தல்களைப் பின்பற்ற முடியாமை.<br><br>உரைத் தகவல்களைக் கிரகிப்பதில் இடர்ப்பாடு.<br><br>பேச்சில் குறைபாடு அல்லது கையைப் பற்றிப் பிடிப்பதிலும் நகர்தல் போன்றவற்றின் ஒன்றுசேர்ந்து ஏற்படக்கூடிய தன்மை.<br><br>சிந்தனைகளையும் எண்ணங்களையும் தொடர்பூட்ட அல்லது விளங்க முடியாமை. | உரையினை பேச்சிற்கு மாற்றுதல் மற்றும் பேச்சு/ குரல் வெளியீடு<br><br>திரையினைத் தொடும் கருவிகள்.<br><br>ஆற்றலையும் மாற்று நடவடிக்கைகளையும் அதிகரிக்கச் செய்யும் தொலைபேசி அப்ஸ் மற்றும் அதேநேர வளங்கள்.<br><br>தொடர்பூட்டல் கருவிகள் (AAC), தொடர்பூட்டலுக்கான இலத்திரனியல் பட அட்டைகள்.<br><br>அதேநேரக் கணனிவழி நாட்காட்டிகள், குறிப்புக்களைக் குறிப்பெடுத்தல் மற்றும் எச்சரிக்கைகள் போன்ற அமைப்பு மற்றும் நினைவூட்டல் உதவிக்கருவிகள்.<br><br>ஜிபிஎஸ்-வசதிகள் செய்யப்பட்ட பாதை வழிகாட்டி<br><br>கிரகித்தல் பயிற்சிக்காக பல்லூடகங்களைப் பயன்படுத்துதல் உ-ம்: வீடியோ, படவரை கலை. |
| மனோதத்துவ சமூகக் குறைபாடு | நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த அட்டவணைக்கான தேவை<br><br>விளங்கிக் கொள்ள, நினைவுபடுத்திக் கொள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றிக் கொள்வதில் இடர்ப்பாடு.<br><br>பிரதிபலிப்புக்களைக் காட்டுவது, சரியான தீர்மானங்களை எடுப்பதில், தகவல்களைப் பின்பற்றுவதில் ஆற்றலின்மை<br><br>தொடர்பு கொள்வதில், சிந்தனைகளை, யோசனைகளை வெளிப்படுத்துவதில் இடர்ப்பாடு | நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த அட்டவணைப்படுத்தலின் உதவியுடன் கணனிவழி தொடர்பூட்டல், ஆவணப்படுத்தல் மற்றும் வேலைக்கான கருவிகளைப் பயன்படுத்தல்.<br><br>அதேநேரக் கணனிவழி நாட்காட்டிகள், குறிப்புக்களைக் குறிப்பெடுத்தல் மற்றும் எச்சரிக்கைகள் போன்ற அமைப்பு மற்றும் ஞாபக உதவிக்கருவிகள். |

மூலம்: ராஜா டி. எஸ். (2016)

மேலே விளக்கப்பட்டவாறு, வரையறுக்கப்பட்டளவில் காணப்படும் தொழிற்பாடுகளை வெற்றி கொள்வதற்கு தொடர்பான குறைபாட்டுத் தன்மைகளுக்குத் தீர்வு காண்பதற்குரிய தொழில்நுட்ப உதவு கருவிகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பார்வைக் குறைபாடுடைய ஆட்கள், வாசித்தல் மற்றும் எழுதும் நடவடிக்கைகளை ஆற்றுவதற்காக திரையில் வாசிக்கும் மென்பொருளைப் பயன்படுத்த முடியும். இது மாற்றுத்திறனாளிகளின் தனிப்பட்ட இயலாற்றலை அதிகரிக்க வழிவகுக்குமென்பதுடன் இதன் மூலம் மாற்றுத்திறனாளிக்களுக்கான தொழில்வாய்ப்புக்களும் அதிகரிக்கும். மேலும், சில அபிவிருத்தியடைந்த நாடுகள் உடல்ஊனமுற்றவர்களின் தொழிற்படைப் பங்கேற்பு

வீதத்தினை ஊக்குவிப்பதற்காக அனுமதிப்பங்கு முறைமை, பாரபட்சம் காட்டுவதற்கெதிரான சட்டம், தொழில் பாதுகாப்பு உரிமை மற்றும் இலக்கிடப்பட்ட செயற்படும் தொழிற்சந்தைக் கொள்கைகள் போன்ற பல்வேறு செயற்படும் கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்தியிருக்கின்றன.

இலங்கையும் கூட, பன்னாட்டு அபிவிருத்திகளிலிருந்து பாடங்களைப் பயின்று கொள்வதன் மூலம் தேசிய தொழிற்படைக்குள் உடல்ஊனமுற்றவர்களை உள்ளடக்கிக் கொள்வதற்குப் புதிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைக்கிட முடியும். முதல் நடவடிக்கையாக, உதவுகின்ற கருவிகள் மற்றும் தொடர்பான தொழில்நுட்பவியல் கருவிகளின் இறக்குமதிக்கு வரிச் சலுகைகளை அரசாங்கம் வழங்கமுடியும். மேலும், உள்நாட்டு தொழில் சந்தையினதும் உடல்ஊனமுற்ற ஆட்களினதும் தேவைகளுக்குப் பொருந்தத்தக்க இணக்கமான உதவிக்கருவிகளின் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு அபிவிருத்திகளும் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். டிஜிட்டல் தொழில் நிரம்பலை மேம்படுத்துவதற்கு டிஜிட்டல் உட்கட்டமைப்புத் தேவைகள் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். இது நடமாடும் பிரச்சனைகளைக் கொண்டுள்ள ஆட்களுக்குக் கணனிவழி அதேநேரத் தொழில்புரியும் வசதிகளை வழங்க உதவும். அதற்குப் புறம்பாக, உடல்குறைபாடுடையவர்கள் தொடர்பான தற்போதுள்ள தேசிய கல்விக் கொள்கை, பொதுப் போக்குவரத்து என்பனவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை அதிகரிப்பதில் கவனத்தினைச் செலுத்த வேண்டும். வீதி நிருமாணத்திற்காக உணரக்கூடிய நடைபாதை மேற்பரப்பு குறிகாட்டிகளைப் பயன்படுத்துவது பார்வைக் குறைபாடுடைய ஆட்கள் பௌதீகக் கட்டமைப்பினைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வசதியை மேம்படுத்துவதற்குச் சிறந்த தேர்வாகும். அனைத்து அரச ஆவணங்களையும் இலத்திரனியல் மற்றும் செவிப்புலச் சாதனம் போன்ற அணுகத்தக்க படிவங்களுக்கு மாற்றுவதன் மூலம் தகவல்களைப் பெறும் தன்மையினை மேம்படுத்த முடியும். தொழில்வழங்குநர்களுக்கும் உடல்ஊனமுற்ற ஆட்களுக்குமிடையிலான இணைப்பினை மேம்படுத்துவதற்காக மத்திய பொறிமுறையொன்று நிறுவப்படுதல் வேண்டும். மாற்றுத்திறனைக் கொண்ட ஊழியர்களுக்கு வேலைத்தலத்தில் சீராக்க வசதிகளைச் செய்து கொடுக்கும் தொழில்தருநர்களுக்கு நிதியியல் உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

அரச துறையிலும் கூட்டுத்தாபனத் துறையிலுமுள்ள வெற்றிடங்களை நிரப்பும் பொழுது தேவையான தகைமைகளைக் கொண்டுள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கு 3 சதவீத தொழில் வாய்ப்பு ஒதுக்கப்பட வேண்டுமென பொது நிருவாகச் சுற்றறிக்கை இல:27/1988 குறிப்பிடுகிறது. அரச துறை ஊழியர்களுக்கான இவ்வேற்கனவேயுள்ள அனுமதிப்பங்கினை மேலும் ஒழுங்குமுறைப்படுத்த வேண்டுமென்பதுடன் தனியார் துறைக்கு விரிவாக்குதலும் வேண்டும். எடுத்துக்காட்டாக, உடல்ஊனமுற்றவர்களின் குறைபாட்டுத்தன்மைகள் மற்றும் இயலாற்றல் என்பனவற்றின் நியதிகளுக்கேற்ப உடல்ஊனமுற்றவர்களுக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்புக்களைக் கண்டறிவதற்காக தேசிய மட்டத்திலான அளவீடுகள் நடத்தப்படல் வேண்டும். அதன் பின்னால் பொருத்தமான அனுமதிப்பங்கு முறைமை தனியார் துறைக்கு அனுமதிக்கப்படல் வேண்டும். யப்பான் அரச மற்றும் தனியார் துறை இரண்டிற்குமாக உடல்ஊனமுற்ற தொழில்வாய்ப்பு அனுமதிப்பங்கினை அறிமுகப்படுத்தியிருக்கிறது. இதன்படி, இம்முறைமைக்கு இணங்கியொழுகாத தொழில்தருநர்கள் மீது விதிக்கப்பட்ட தீர்வை உடல் ஊனமுற்றவர்களின் தொழில்நிலையினை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகிறது (வுறுக்கொவாவும் மற்றையவர்களும், 2011). இலங்கையும் அத்தகையதொரு முறைமையினை நடைமுறைப்படுத்துகின்ற சாத்தியத்தினைப் பரிசீலிக்க வேண்டுமென்பதுடன் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வரி வருமானத்தினை மாற்றுத்திறனாளிகளின் புனர்வாழ்விற்குப் பயன்படுத்துதல் வேண்டும்.

உடல் ஊனமுற்ற மக்களுக்காக அரச, தனியார் துறை பங்குடமையின் கீழ் புதிய தொழில் வாய்ப்பு மையமொன்று நிறுவப்படுதல் வேண்டும். உடல் ஊனமுற்றவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்காக இதேபோன்ற முறைமையொன்று மலேசியாவில் தொழிற்பட்டு வருகின்றது. “படிக்கல்” என்ற பெயரிலமைந்த இம்மையம் மலேசியாவிலுள்ள அரசல்லா அமைப்பான ஆசிய சமூக சேவையின் கீழ் தொழிற்பட்டு வருகின்றது. இம்மையமானது வெதுப்பகம், கைத்தறி, நூல் நிறமூட்டல், கைவினைப்பொருட்களை உருவாக்குதல், பத்திக் அச்சிடல் மற்றும் மட்கலப்பொருட்கள் போன்ற பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு தொழிலில் பயிற்சி வழங்கப்படுகின்றது. அதன் பின்னர் அவர்களது உள்ளார்ந்த ஆர்வத்திற்கும் முன்னுரிமைக்கும் ஏற்ப ஒரு பிரிவினைத் தெரிவுசெய்வதற்கு அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர் (வுறுக்கோவவும் மற்றையவர்களும் 2011). இலங்கையும் கூட, உடல் ஊனமுற்ற மக்களின் தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காக தொழில் மையமொன்றினை நிறுவும் விதத்தில் அரச தனியார் பங்குடமையின் கீழ் மாதிரியொன்றினை மேற்கொள்ள வேண்டும்.

உதவக்கூடிய தொழில்நுட்பங்கள் கிடைக்கத்தக்கதாக இருப்பது பற்றியும் தொழில் வாய்ப்புக்களின் கிடைப்பனவு பற்றியும் உடல் ஊனமுற்ற மக்களிடையேயான விழிப்புணர்வு மேம்படுத்தப்படல் வேண்டும். மாறாக, பொருளாதாரத்தில் பொதுவான உருவாக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய இயலாற்றலை உடல் ஊனமுற்ற மக்கள் கொண்டிருப்பது தொடர்பிலான விழிப்புணர்வினை உடல் ஊனமுற்ற மக்களிடையே மேம்படுத்தல் வேண்டும். உடல் ஊனமுற்ற மக்கள் தொடர்பில் காணப்படும் பாரபட்சமான தன்மையினையும் அவமானப்படுத்தும் விடயங்களையும் தவிர்த்துக்கொள்வதற்கு இவ்விருவழி விழிப்புணர்வினைச் செயற்படுத்த முடியும் என்பதுடன் அவர்களுக்கு வலுவூட்டவும் முடியும். தேசிய மட்டத்திலான பிரச்சாரங்களை மேற்கொள்வதும் கல்வி பாடவிதானத்தில்

உடல் ஊனம் தொடர்பான கற்கைகளை அறிமுகப்படுத்துவதும் சமூகத்தில் அத்தகைய விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்கு இன்னுமொரு வழியாகும்.

தற்பொழுது இலங்கையில் உடல் ஊனமுற்ற மக்களுக்காக ஒரு சில தொழிற்பயிற்சி மையங்கள் காணப்படுகின்றன. அந்நிலையங்களின் சேவைகளை கிராமப்புறங்களுக்கும் விரிவாக்க வேண்டுமென்பதுடன் சேவைகளின் தரத்தினை உயர்த்துவதற்காக சமூகவியலாளர்களும் மனோதத்துவியலாளர்களும் பணிக்கமர்த்தப்படுதல் வேண்டும்.

முடிவாக, மாற்றுத் திறனாளிகளின் தொழிற்படைப் பங்கேற்பினை மேம்படுத்துவதற்காக மேலேயுள்ள அனைத்து உபாயங்களையும் முன்மொழிய முடியும் என்பதுடன் அவை இறுதியில் மாற்றுத்திறனாளிகள் நலன்புரிகளைப் பெறுபவர்கள் என்ற நிலையிலிருந்து வரி செலுத்துபவர்கள் என்ற நிலைக்கு மாறிச்செல்ல வழிவகுக்கும். இது மாற்றுத்திறனாளிகள் சமூகத்திற்குள் உள்ளீர்த்துக் கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்களை மேம்படுத்தும் என்பதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவர்கள் காத்திரமான விதத்தில் பங்களிப்பதற்கும் அவர்களை இயலுமைப்படுத்தும்.

*[டபிள்யு. டி. யு. எஸ். கே. வீரசிங்க இலங்கை மத்திய வங்கியின் மூத்த உதவிப் பணிப்பாளராவர். இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள பார்வையும் கருத்துக்களும் கட்டுரை ஆசிரியருடையனவாகும் என்பதுடன் அவை எந்தவொரு நிறுவனத்தினதும் அலுவலர்சார் கொள்கையினை அல்லது நிலையினைப் பிரதிபலிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. கட்டுரை ஆசிரியரை upulsun@gmail.com என்ற முகவரியில் அணுகமுடியும்]*

**உசாத்துணைகள்**

Census of Population and Housing of Sri Lanka, (2012), Department of Census and Statistics, Colombo, available at http://www.who.int/topics/disabilities/en/ accessed on 18/08/2018

Coomaraswamy, I. (2017, November 20). Remarks at the United Nation Peace Building Committee, New York, available at https://www.un.int/srilanka/news/sri-lanka-shares-its-peacebuilding-experience-united-nations-peacebuilding-commission-new-york accessed on 01/12/2018

Disability in Sri Lanka (2012). Department of Census and Statistic, available at https://unstats.un.org/unsd/demographic-social/meetings/2016/bangkok--disability-measurement-and-statistics/Session-6/Sri%20Lanka.pdf accessed on 14/11/2018

Furuoka F, Lin. B., Pazim. K. H., Mahmud. R,(2011). Employment Situation of Persons with Disabilities: case studies of US, Japan and Malaysia, Journal of arts, science and commerce, international refereed research journal, volume 2, issue 4, October, 2011, available at WWW.researchersworlld.com accessed on 21/10/2018

National Policy on Disability for Sri Lanka, 2003 May, Ministry of Social Welfare, Sri Lanka, available at https://www.unicef.org/srilanka/disability_policy_(1).pdf accessed on 26/09/2018

Protection of The Rights of Persons with Disabilities Act (No. 28 of 1996) as amended by Act No. 33 of 2003 Sri Lanka, Democratic Socialist Republic of Sri Lanka, available at https://srilankalaw.lk/YearWisePdf/2003/PROTECTION_OF_THE_RIGHTS_OF_PERSONS_WITH_DISABILITIES_(AMENDMENT)_ACT,_No._33_OF_2003.pdf accessed on 11/10/2018

Public Administration Circular No.27/1988, Democratic Socialist Republic of Sri Lanka, available at http://www.pubad.gov.lk/web/eservices/circulars/1988/E/27-1988(e).pdf accessed on 17/11/2018

Raja, D. S., (2016). Bridging the Disability Divide Through Digital Technologies, Background paper for the 2016 world development report available at http://www.worldbank.org/en/publication/wdr2016.

Shima. I., Zolyomi, E. and Zaidi, A., (2008). The Labour Market Situation of People with Disabilities in Europe, policy brief February (1) 2008, European Centre.

UdayaKantha, K. K. S. and Perera, K. E. D., (2013). Accelerating Inclusive Growth Trends in Sri Lanka: Challenges and Achievements, Social Science and Humanities Review, volume 01 no-01 e-journal faculty of humanities and social science university of Ruhuna. Available at http://www.hss.ruh.ac.lk/ejournal/volume1.html accessed on 09/08/2018

World Health Organization, (2018). Health Topics/ Disability available at https://www.who.int/topics/disabilities/en/ accessed on 15/09/2018

# இலங்கையின் சமத்துவமற்ற வருமானத்தின் மீதான கொவிட்-19இன் தாக்கம்

ஐ.யு. கொலம்பகே
மூத்த உதவிப் பணிப்பாளர்
பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம்

கொவிட்-19 தொற்று அதன் கொடூர தன்மையினாலும் உலகிலுள்ள ஒவ்வொருவரையும் எல்லோரையும் செல்வம், இனம், சமயம், பால் அல்லது வேறு எந்தவித வேறுபாடும் பாராது எல்லோர் மீதும் தொற்றக்கூடிய மோசமான தன்மையொன்றினைக் கொண்டிருக்கிறது. எனினும், இத்தொற்றிலிருந்து சுகாதாரத்தின் மீது ஏற்பட்ட தாக்கமும் இத்தொற்றினை ஒழிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமான சமூக பொருளாதார அம்சங்களும் சமத்துவமானவைகளாக உணரப்படவில்லை.

பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகளை மிகக் கடுமையாகப் பாதித்த 2019 ஏப்பிறலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினால் உருவான பின்னடைவின் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் குறைந்த செயலாற்றமொன்றிற்குட்பட்டுக் காணப்பட்டது. இத்துரதிஷ்டவசமான நிகழ்விலிருந்து மீண்டு கொண்டிருந்த வேளையில், தற்பொழுது இலங்கை கொவிட்-19 தொற்றினை எதிர்நொக்கியிருக்கிறது. இது வளர்ச்சி, இறை, வெளிநாடு மற்றும் நிதித் துறைகளின் செயலாற்றத்தில் மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தி பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களையும் பாதிக்கிறது (மத்திய வங்கி 2020). அத்தகைய மோசமான தாக்கங்கள் பல்வேறுபட்ட வருமான மட்டங்களைக் கொண்ட வீட்டுத்துறையினரால் வேறுபட்ட விதத்தில் உணரப்படுமென்பதுடன் வேறுபட்ட விதத்தில் எதிர்நோக்கவும்பட்டன.

எனவே, இக்கட்டுரையானது இலங்கையில் வருமான சமத்துவமற்ற தன்மையின் மட்டங்களை அடையாளம் காண்பதனையும் கொவிட்-19, வருமான சமத்துவமற்ற தன்மையினை எவ்வாறு பாதிக்கிறது என்பதனையும் கொவிட்-19 பரவலின் தாக்கம் காரணமாக விரிவடையக்கூடிய சாத்தியத்தினைக் கொண்டுள்ள வருமான சமத்துவமின்மையின் கடுமையான தன்மையினை தவிர்ப்பதற்கான சிறந்த நடைமுறைகளையும் ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கொவிட்-19 இற்கு முன்னர் இலங்கையின் வருமான சமத்துவமின்மை

கொவிட்-19 பரவல் சமூகத்தின் வேறுபட்ட பிரிவினர்களின் மீது வேறுபட்ட தாக்கங்களைக் கொண்டிருக்கும் என்பது வெளிப்படையானதொரு விடயமாகும். குறைந்த வருமான பிரிவிலுள்ள வீட்டுத்துறையினர் முறைசாரா தொழில்நிலைகளினூடாக வருமானத்தினை ஈட்டுபவர்களாகவும் வெளிவாரி அதிர்வுகளை எதிர்நோக்கும் விதத்தில் சேமிப்புக்களையோ காப்புறுதியினையோ கொண்டிருக்காமையினால் இத்தகைய அதிர்வுகளினால் மிகக் கூடுதலானளவிற்கு பாதிக்கப்படக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர். மாறாக, உயர்ந்த வருமானத்தினை ஈட்டுவோர் நிலையான வருமான மூலங்களைக் கொண்டிருப்பதுடன், சேமிப்புப் பழக்கங்களுடன் இணைந்த சாதகமான வருமான மூலங்களை உருவாக்கக்கூடிய இயலாற்றலைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இதன் காரணமாக அத்தகைய பிரிவினர் வெளிவாரி அதிர்வுகளை எதிர்நோக்கத்தக்க விதத்தில் கூடியளவு சாதனங்களை தம்வசம் கொண்டிருப்பதுடன் அத்தகைய அதிர்வுகளின் தாக்கத்தினை தற்காலிகமானதொரு பின்னடைவாக மாத்திரம் மாற்றிக் கொள்ளக்கூடியவர்களாகமிருக்கின்றனர். ஆகவே, கொவிட்-19 பரவலுக்கு முன்னரான சமத்துவமின்மையின் ஆழத்தினை அடையாளம் காண்பது முன்னோக்கிச் செல்வதற்கான பாதையினை அடையாளம் காண்பதற்கு மிக முக்கியமானதாகும்.

துரதிஷ்டவசமாக, கொவிட்-19 இற்கு முன்னரும் கூட, இலங்கையின் வருமான சமத்துவமின்மை நேர்க்கணியமான தோற்றப்பாடொன்றினைக் காட்டுவதாக இருக்கவில்லை. இலங்கையின் கினிச் சுட்டெண்[1] 2006இன் 40.3 இலிருந்து 2009இல் 36.4 இற்கு வீழ்ச்சியடைந்ததுடன் 2012இல் 29.2 இற்கும் 2016இல் 39.8 இற்கும் அதிகரித்தது (உலக வங்கியின் தரவு வங்கி). ஆகவே, 2016இன் அளவீட்டின்படி தொடர்பான காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்திருந்த வருமான சமத்துவமின்மை பின்னர் அதிகரித்திருந்தது. மேலும்,

1. நாடொன்றின் கினிச் சுட்டெண் என்பது சமத்துவமின்மையின் அளவு முறையொன்றாகும். இது 0 இலிருந்து 100 வரையான வீச்சினைக் கொண்டது. 0 சமமான தன்மை நிறைவு செய்வதுடன் 100 சமமற்ற தன்மையினை நிறைவு செய்கிறது.

இப்பிராந்தியத்திலுள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில் பெரும்பாலான நாடுகள் இலங்கையிலும் பார்க்கக் குறைவான கினிச் சுட்டெண்ணினை (கிடைக்கத்தக்க மிகப் பிந்திய தரவு) கொண்டிருப்பது எமக்குள்ள பிரச்சனைகளின் அளவினை எடுத்துக்காட்டுகிறது (அட்டவணை 1).

வரைபடம் 1இல் தரப்பட்டுள்ள இலங்கைக்கான லோரன்ஸ் வளையி[2], இலங்கையின் வருமான சமத்துவமின்மையின் இயக்கவாற்றலை வரைபட முறையில் விளக்குகின்றது. லோரன்ஸ் வளையியின் வளைவு உயர்வாகவும் நேரத்துடன் கூடிய நிறை பங்குரிமைக் கோட்டிலிருந்தும் விலகியும் காணப்படுகின்றமை குடித்தொகையின் சதவீதத்தில் அளவிடப்பட்ட பொழுது சமத்துவமற்ற வருமானம் அதிகரித்துச் செல்வதனை எடுத்துக் காட்டுகின்றது. எடுத்துக்காட்டாக, 2016ஆம் ஆண்டில் குடித்தொகையில் 10 சதவீதத்தினர் குறைந்த வருமானத்தினைக் கொண்டிருந்ததுடன் நாட்டின் மொத்த வருமானத்தில் 2.9 சதவீதத்தினை மட்டுமே ஈட்டிக் கொள்ளக்கூடியவர்களாக இருந்தவிடத்து நாட்டின் மொத்த வருமானத்தில் 32.9 சதவீதத்தினை 10 சதவீதமாக இருந்தவர்கள் அனுபவித்தனர் (உலக வங்கியின் வோகல் இணையம்). கீழேயுள்ள 6 சதவீதத்தினர் ஒன்றுசேர்ந்து மொத்த வருமானத்தில் 32.6 சதவீதத்தினை அனுபவிப்பது இலங்கை எதிர்நோக்கும் வருமான சமத்துவமின்மையினை மிக வெளிப்படையாக அனுமானிக்கச் செய்கிறது. 2012 மற்றும் 2016ஆம் ஆண்டுகளுக்கான லோரன்ஸ் வளையியின் வளைவு ஒன்றின் மீது ஒன்றாக குவிந்து காணப்படுவதும் சரியாகச் சொல்வதானால் 2016இல் லோரன்ஸ் வளையியின் வளைவு சிறிதளவில் உயர்வாகக் காணப்படுவது வருமான சமமின்மையின் இடைவெளியினைக் குறைப்பதற்குப் போதுமான கொள்கை வழிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

**அட்டவணை 1: இப்பிராந்தியத்திலுள்ள நாடுகளின் அண்மைய கிடைக்கத்தக்கதாகவுள்ள கினிச் சுட்டெண் மற்றும் வறுமை எண்ணிக்கை விகிதம்**

| நாடு | கினிச் சுட்டெண் | வறுமை எண்ணிக்கை விகிதம் (%) |
|---|---|---|
| வங்காளதேசம் | 32.40 | 14.80 |
| பூட்டான் | 37.40 | 1.50 |
| இந்தோனேசியா | 39.00 | 4.60 |
| இந்தியா | 37.80 | 21.20 |
| மாலைதீவுகள் | 31.30 | 0.00 |
| பாகிஸ்தான் | 33.50 | 3.90 |
| பிலிப்பைன்ஸ் | 44.40 | 6.10 |
| சிறிலங்கா | 39.80 | 0.80 |

மூலம்: உலக வங்கியின் தரவு வங்கி

2. லோரன்ஸ் வளையி, குடித்தொகையின் வேறுபட்ட சதவீதங்களினால் பெறப்பட்ட வருமானத்தின் பங்கிற்கும் குடித்தொகையின் தொடர்பான சதவீதத்திற்குமிடையிலான வேறுபாட்டின் மூலம் பெறப்பட்ட பங்குகளுக்கிடையிலான தொடர்புகளைத் தருகிறது. ஆகவே, இது வருமானத்தினது பங்கீட்டின் அடையாளமாக இருப்பதுடன் 45° கோடு மிகச் சரியான சமமான வருமானப் பங்கீட்டினைத் தருகிறது (அகர்வால், 2019).

வருமான சமமின்மை அதிகரித்துள்ள போதும், அண்மைய ஆண்டுகளில் வறுமையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி அவதானிக்கப்பட்டிருக்கிறது. வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் வறிய மக்களின் சதவீதமாகக் காணப்படும் வறுமை எண்ணிக்கை விகிதத்தின் நியதிகளில் கணிக்கப்பட்ட வறுமை மட்டம் (ஐ.அ.டொலர் 1.90 - தீவிரமான வறுமை) இலங்கையில் இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்திருக்கிறது. வறுமை எண்ணிக்கை வீதம் 2012இல் 1.6 சதவீதத்திலிருந்து 2016இல் 0.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கிறது (உலக வங்கியின் தரவு வங்கி). மேலும், இலங்கையின் வறுமை மட்டம் இப்பிராந்தியத்திலுள்ள நாடுகளின் வறுமை மட்டங்களிலும் பார்க்கக் கணிசமானளவிற்குக் குறைவானது என்பதும் அவதானிக்கத்தக்கதாகும். எனினும், ஐ.அ.டொலர் 3.20 கொண்ட வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள (உலகளாவிய வறுமைக்கோடு) வறுமை எண்ணிக்கை விகிதம் இன்னமும் 10.1 சதவீதமாகக் காணப்படுகின்றது. இது, குடித்தொகையில் கணிசமான சதவீதத்தினர் தீவிரமான வறுமைக்குள் விழக்கூடிய பாதிக்கப்படும் தன்மையில் காணப்படுவதனை உணர்த்துகிறது.

**இலங்கையில் கொவிட்-19**

இலங்கையில் கொரனா தொற்றிற்கு உட்பட்ட முதலாவது ஆள் தொடர்பில் 2020 மாச்சு 10ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் இலங்கை அரசாங்கம் இத்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக கடுமையான வழிமுறைகளை மேற்கொண்டது. இச்சம்பவத்திற்கு முன்னதாக அரசாங்கம் மிகக் கூடுதலானளவிற்கு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் கொவிட்-19 தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வினையும் ஊட்டியது. இது பொதுமக்களின் நாளாந்த வாழ்க்கையில் அல்லது குடித்தொகையினரின் வாழ்வாதாரத்தில் குறிப்பிடத்தக்க பாதிப்புக்கள் எதனையும் ஏற்படுத்தவில்லை. 2020 மே 11ஆம் நாளன்று கொவிட்-19 தொற்றிற்குள்ளானவர்களின் எண்ணிக்கை 889 ஆகவும் மரணமுற்றவர்களின் எண்ணிக்கை 9 ஆகவும் அறிவிக்கப்பட்டது. 2020 மே 16ஆம் நாளிலிருந்து

**வரைபடம் 1: இலங்கைக்கான லோரன்ஸ் வளையி**




மூலம்: உலக வங்கி வோகல் இணையம்

ஊரடங்குச் சட்டத்துடன் நாடு முடக்க நிலைமையொன்றில் காணப்பட்டது. சில மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு நீக்கப்பட்டது. இன்று உள்ளவாறு (2020 மே 11) ஊரடங்குச் சட்டமும் நடமாட்டத்தின் மீது பல கட்டுப்பாடுகளும் காணப்பட்டமைக்கிடையிலும் நாளாந்த தொழிற்பாடுகள் வழமைக்குத் திரும்பின. இருப்பினும் கூட பாடசாலைகளை மீளத்திறப்பது பற்றி இன்னமும் நிச்சயிக்கப்படவில்லை.

ஆகவே, தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு இன்றியமையாததாக விளங்கிய அத்தகைய நடவடிக்கைகள் நாட்டிலுள்ள வீட்டுத்துறையினரின் வாழ்வாதாரத்தினைப் பாதித்திருக்கின்றன என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இலங்கையில் கொவிட்-19 இனால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட துறைகளாகப் பல்வேறு வெளிப்படையான காரணங்களினால் சுற்றுலாத் துறையும் இலங்கையின் முக்கிய ஆடை ஏற்றுமதி நாடுகள் பாதிக்கப்பட்டமை மற்றும் சீனாவிலிருந்து பெறப்பட்ட மூலப்பொருட்களின் பற்றாக்குறையினால் ஆடைகள் துறையும் மூலப்பொருட்களின் தட்டுப்பாடு தொழிலாளர்கள் கட்டுமான அமைவிடங்களுக்குச் செல்லமுடியாமையினால் கட்டுமானம் மற்றும் பொறியியல் துறையும் செயற்படாக் கடன்களில் ஏற்பட்ட உயர்வு மற்றும் சட்ட இசைவுத்தாமதம் என்பனவற்றின் முக்கிய காரணமாக வங்கித்தொழில் மற்றும் நிதித் துறையும் பாதிக்கப்பட்டன. அத்தகைய துறைகளின் மீதும் முழுப் பொருளாதாரத்தின் மீதும் ஏற்பட்ட மோசமான தாக்கத்தினைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கி 2020ஆம் ஆண்டிற்கான இலங்கையின் மொ.உ.உற்பத்தி வளர்ச்சி 1.5 சதவீதமாக இருக்கும் என ஊகித்தது (மத்திய வங்கி 2020). எனினும், கொவிட்-19 தொற்று நீண்ட காலத்திற்கு உலகில் நீடிக்குமாயின், இத்தொற்றின் இரண்டாவது சுற்றினால் இலங்கை பாதிக்கப்படுமாயின், உரிய நேரத்தில் போதுமான கொள்கை வழிமுறைகள் எடுக்கப்படாது போகுமாயின், பொருளாதார வளர்ச்சி ஊகிக்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவாகவே இருக்கும்.

இவற்றைக் கவனத்தில் கொண்டு, குடித்தொகையில் பின்தங்கிய துறையினருக்கு நிவாரணங்கள் சிலவற்றை வழங்குவதற்காக இலங்கையின் பல்வேறுபட்ட அதிகாரசபைகளினாலும் பல்வேறுபட்ட கொள்கை வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, கொவிட்-19 வருமான சமமின்மையினை எவ்வாறு பாதிக்கும் என்பது பற்றியும் இச்சூழ்நிலையில் வருமான சமமின்மையினைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய சிறந்த நடைமுறைகள் பற்றியும் ஆழமாக மதிப்பீடு செய்வது அவசியமானதாகும்.

### வருமான சமமின்மையின் மீது கொவிட்-19 இன் தாக்கம்

கொவிட்-19இன் தாக்கம் இரண்டு வழிகளில் ஏற்படும். அதாவது சுகாதார நெருக்கடி மற்றையது பொருளாதார நெருக்கடி (ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2020). இவ்விரண்டு நெருக்கடிகளும் தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் இது உயர் வருமானம் பெறுபவர்களைக் காட்டிலும் குறைந்த வருமானம் ஈட்டுவோரையே தொடர்ந்தும் பாதிக்கும். மேலும், இந்நெருக்கடிகளும் இந்நெருக்கடிகளுக்குச் சமாந்தரமான வேகத்தில் எடுக்கப்படும் கொள்கைகளும் வருமான சமமின்மை எதிர்காலத்தில் மேலும் விரிவடையுமா அல்லது குறுக்கமடையுமா என்பதனைத் தீர்மானிக்கும்.

***கொவிட்- 19, சுகாதாரத்தினையும் செல்வத்தினையும் பேணுவதில் குறைந்த வருமானம் ஈட்டுவோரை கடுமையாகப் பாதிக்கும் . . . . .***

### சுகாதாரத்தினைப் பேணுதல்

கினி குணகத்தின்படி, மில்லியனொன்றிற்கான கொவிட்-19 மரண எண்ணிக்கையினை தூறிசி மற்றும் டெபின்சிகி (2020) கணித்திருக்கின்றனர். இத்தொற்றின் தாக்கம் வறிய நாடுகளில் மிகக் கூடுதலாக உணரப்படும் எனவும் குறிப்பிடுகின்றனர். கிடைக்கத்தக்க தரவுகளின் அடிப்படையில், இக்கோட்பாடு ஆசியப் பிராந்தியத்திலுள்ள அநேக நாடுகளில் அப்படியே காணப்படுகின்றது (வரைபடம் 2). பிலிப்பைன்ஸ், மாலைதீவு மற்றும் யப்பான் போன்ற உயர் சமத்துவமற்ற வருமானத்தினைக் கொண்ட நாடுகள் மில்லியனொன்றிற்கு உயர்ந்தளவு எண்ணிக்கையான மரணங்களைக் கொண்டிருந்தன. இலங்கை உயர்ந்தளவு கினிச் சுட்டெண்ணினைக் கொண்டிருந்த போதும் தொற்றினைக் குறைந்த பரவலுடன் மட்டுப்படுத்துவதற்கும் தொற்றின் மூலமான மக்களின் மரணத்தினைக் குறைந்தமட்டத்திலும் பேண முடிந்தது. இதற்கான முக்கிய காரணமாக இலவச சுகாதார சேவைகள், ஆரம்பத்திலேயே கண்டறிவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தனிமைப்படுத்தல் மற்றும் உடனடிச் சிகிச்சை என்பன இருக்கக்கூடும். மக்களுக்கு அறிவூட்டுதலும் தனிமைப்படுத்தல் மற்றும் உடனடிச் சிகிச்சை என்பன இருக்கக்கூடும். மக்களுக்கு அறிவூட்டுவதிலும், கொவிட்-19 நோயாளிகளை அடையாளம் காண்பதிலும் சுயதனிமைப்படுத்தல் நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட பொது சுகாதார பரிசோதகர்கள் வலையமைப்பினை இலங்கை கொண்டிருந்தமையும் தேவையானவிடத்து நாடளாவிய ரீதியில் வைத்தியசாலையுடன் சேர்ந்து பணியாற்றக்கூடியதாக இருந்தமையும் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குப் பங்களித்தன. நலக் கவனிப்பு வசதிகளின் இயலாற்றல் கிடைப்பனவின் காரணமாக இலங்கை தொற்று வீதத்தினை கட்டுப்படுத்தத்தக்க மட்டத்தில் வைத்திருந்தமை அதிர்ஷ்டவசமானதாகும். நலக் கவனிப்பு வசதிகள் பொதுச் சேவையாக இருந்திருக்காவிடின், வருமானச் சமமின்மை இத்தொற்றின் கடுமையான தன்மையைத் தீர்மானிக்குமொன்றாக இருந்திருக்கும். குறைந்த வருமானம் ஈட்டுவோர் கல்வி புகட்டப்படாதிருக்கின்றமை அல்லது போதுமான தகவல்கள் இல்லாமை என்பனவற்றின் காரணமாக நலக் கவனிப்புப் பணிகளை அடைய முடியாதவர்களாக இருந்திருக்கலாம் என்பதுடன் சரியான நலக் கவனிப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாகவும் இருந்திருக்கலாம்.

தொற்று வீதம், இலங்கையின் நலக் கவனிப்பு பணிகளின் இயலளவினை விஞ்சி அதிகரித்திருக்குமாயின் பிரச்சனை மிகக் கடுமையானதாக இருந்திருக்குமென்பதுடன் குறைந்த வருமானத்தினை ஈட்டுவோர் பாதிக்கப்படுவது உயர்ந்தளவில்

காணப்படுவதற்கும் வாய்ப்புக்கள் அதிகம். குறைந்தளவு சுகாதார நியமங்களுடன் கூடிய மோசமான வீடமைப்பு நிலைமைகள் மற்றும் அதிகாரிகளினால் ஆலோசனை வழங்கப்பட்ட சுத்தமான வழிமுறைகளையும் சமூக இடைவெளிகளையும் நடைமுறைப்படுத்த முடியாமல் இருப்பதும் குறைந்த வருமானம் ஈட்டுவோர் தொற்றுக்குள்ளாகுவதற்கு காரணமாக இருக்கக்கூடும். நோய்த் தொற்றைத் தடுப்பதற்கு முகக் கவசங்களையும் தொற்று நீக்கிகளையும் ஏனைய பொருட்களையும் கொள்வனவு செய்வதும் குறைந்த வருமானத்தினை ஈட்டுவோருக்கு இடர்ப்பாடானதாக இருக்கும். எனவே, குறைவாகக் காணப்படுகின்றன. இத்துறைகள் அதிகாரிகளினால் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட முடக்கநிலைமை மற்றும் சமூக இடைவெளி ஒழுங்குவிதிகளினால் குறைந்தளவிற்கே பாதிக்கப்பட்டுள்ளன. இவையும் உயர் வருமானம் ஈட்டுவோரிடம் குவிந்து காணப்பட்டன. எனினும், இத்துறைகள் உற்பத்தியாக்கம் மிக்கனவாக இருக்க வேண்டுமெனில் உயர்ந்தளவிற்கு நேருக்கு நேரான பரஸ்பர தொடர்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய தொழில்கள் நடுத்தர காலப்பகுதியில் பாதுகாக்கப்பட்டிருப்பதுடன் தொற்றின் பரவல் கட்டுப்படுத்தப்பட்டதும் அவற்றினால் பழைய நிலைக்குத் திரும்ப

**வரைபடம் 2: கொவிட்-10 மில்லியன் ஒன்றிற்கான மரணம்**




மூலம்: "தரவிலுள்ள எமது உலகம்" தரவுத்தளம் மற்றும் உலக வங்கியின் தரவு வங்கி

குறைந்த வருமானம் ஈட்டுவோர் இத்தொற்றுக்குள்ளாவதற்கும் தொற்றினால் இறந்துவிடுவதற்குமான உயர் நிகழ்தகவினைக் கொண்டிருக்கின்றனர்.

### செல்வத்தினை பேணுதல்

கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான பதிலிறுப்பொன்றாக, இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட ஆரம்ப வழிமுறையொன்றாக நாடு முடக்கப்பட்டமையும் "வீட்டிலிருந்து கொண்டே பணியாற்றுதலைப்" பிரகடனம் செய்தமையும் காணப்பட்டன. "வீட்டிலிருந்து கொண்டே பணியாற்றுதல்" இற்கான இயலாற்றலின் அளவிற்கிணங்க சமூகத்திலுள்ள பொதுவான தொழில்களை வகைப்படுத்துவதற்காக வீட்டினைத் தளமாகக் கொண்ட பணிக்கான நேருக்கு நேரான பரஸ்பர தொடர்புகளின் தேவைப்பாடுகளின் அளவிற்கும் உயர்ந்த இணக்கப்பாட்டிற்குமிடையிலான இணைப்பொன்றினை அவ்விடின் மற்றும் நாயகர் தொகுத்திருக்கின்றார்கள் (2020). இவ்விணைப்புக்களின்படி, வீட்டிலிருந்து கொண்டே பணியாற்றுவதற்கான உயர்ந்தளவு இணக்கப்பாட்டுத் தன்மையும் நேருக்கு நேரான தொடர்புகள் "தகவல் மீதான தொழில்களிலும்" "தொழில்சார் மற்றும் ஆலோசனைப் பணிகள்" இலும் முடியும். இருப்பினும் கூட, "தங்குமிட வசதி மற்றும் உணவு", "சில்லறை வர்த்தகம்", "கலை", "மனமகிழ்ச்சி நிகழ்ச்சிகள்" மற்றும் பொழுதுபோக்கு போன்ற அதிகளவு நேருக்கு நேரான தொடர்புகளை அதிகளவிற்குத் தேவைப்படுத்தும் துறைகள் மீதான தொழில்களின் வகிபாகமும் வீட்டினை அடிப்படையாகக் கொண்டவற்றில் இணங்கிக் கொள்ளபடாத "வேளாண்மை", "கட்டடவாக்கம்", "தயாரிப்பு", போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் போன்ற வீட்டினை அடிப்படையாகக் கொண்டிராத தொழில்களும் வருமானத்தினை உருவாக்காத மிகப் பாதிக்கப்படக்கூடிய தொழில்களாக இருப்பதுடன் வேலை வாய்ப்பின்மைக்கும் வழிவகுக்கிறது. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பினால் அடையாளம் காணப்பட்ட கொவிட்-19 இற்குப் பின்னரான உயர் இடர்நேர்வினைக் கொண்ட துறைகள் (அதாவது தங்குமிட வசதி மற்றும் உணவு, உண்மைச் சொத்து, தயாரிப்பு, மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை) அவ்விடின் மற்றும் நாயகரினால் (2020) வலியுறுத்தப்பட்டவற்றுடன் இணங்கிச் செல்வதாகக் காணப்படுகின்றது. துரதிஷ்டவசமாக அத்தகைய இடர்நேர்வினைக் கொண்ட துறைகளில் தொழில்புரியும் மக்களில் பெரும்பாலானவர்கள் குறைவான வருமானமீட்டுவோராகவே காணப்படுகின்றனர்.

வேலையின் தன்மைக்குப் புறம்பாக, தடங்கலுறாத இணையத்தள தொடர்புகள், லப்டொப், செல்லிடத் தொலைபேசி, தாங்கிக் கொள்ளக்கூடிய தன்மை மற்றும் போதுமான கணனி அறிவு என்பன ஊழியரொருவர் வீட்டிலிருந்து கொண்டே தொழில்புரிவதனைத் தீர்மானிக்கின்ற இன்றியமையாத விடயங்களாகக் காணப்படுகின்றன. இத்தேவைப்பாடுகளை உயர் கல்வி அடைவினைக் கொண்டுள்ள உயர்வருமான வகையினராலேயே பூர்த்திசெய்ய முடிகிறது. அத்தகைய ஊழியர்கள் மட்டுமே முடக்கக் காலப்பகுதியில் பாதிக்கப்படாமல் இருப்பதுடன் இது அவர்கள் அத்தகைய காலப்பகுதியிலும் கூட வருமானத்தினைப் பெறக்கூடியதாக இருந்தமையினை உறுதிப்படுத்தியதுடன் பெருந்தொற்றின் பின்னரும் கூட, அவர்களின் தொழிலினைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியவர்களாக இருந்தனர்.

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2017இல் நடத்தப்பட்ட கணனி அறிவு அளவீட்டின்படி, 23.5 சதவீதமான இலங்கை வீட்டுத்துறையினர் மட்டுமே சொந்தமாக தனியாள் கணனியை வைத்திருக்கின்றனர். இக்குறைந்த சதவீதத்திலிருந்து தனியாள் கணனியின் பங்கீட்டினைப் பரிசீலனையில் கொள்ளும் போது இச்சூழ்நிலை மிக எச்சரிக்கை மிகுந்ததாகக் காணப்படுகிறது. நகர்ப்புற வீட்டுத்துறையினரில் 39.9 சதவீதத்தினரும் கிராமியத்துறை வீட்டுத்துறையினரில் 21.0 சதவீதத்தினரும் பெருந்தோட்டத் துறை வீட்டுத்துறையினரில் 5.1 சதவீதத்தினரும் மட்டுமே தனியாள் கணனியைச் சொந்தமாக வைத்திருக்கின்றனர். மாகாண ரீதியான கிடைப்பனவினைப் பரிசீலனையில் கொள்ளும் பொழுது இவ்வேறுபாடு மேலும் விரிவடைந்து காணப்படுகிறது. இலங்கையின் கணனி அறிவு வீதம் கணிசமானளவிற்குக் குறைவாக 28.3 சதவீதமாகக் காணப்படுகையில் டிஜிட்டல் அறிவு வீதம்[3] சிறிதளவு உயர்வாக 38.7 சதவீதமாகக் காணப்படுகிறது. இணையத்தளத்தினைப் பயன்படுத்தும் வீட்டுத்துறையினரும் மின்னஞ்சலைப் பயன்படுத்தும் வீட்டுத்துறையினரும் முறையே 21.3 சதவீதத்தினராகவும் 11.0 சதவீதத்தினராகவும் காணப்படுகின்றனர். ஆகவே, கணனி மிகக் குறைந்தளவில் கிடைக்கத்தக்கதாக இருக்கும் தன்மை, "வீட்டிலிருந்தே தொழில்புரிவதற்கான" இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கான அறிவு போதுமானளவில் இல்லாமை மற்றும் சமமற்ற பங்கீடு என்பன இலங்கையிலுள்ள குறைந்த வருமானமீட்டும் வீட்டுத்துறையினர் "வீட்டிலிருந்தே தொழில்புரியும்" நிலைமையினைப் பொறுத்தவரை பிரதிகூலமான நிலையொன்றிலேயே காணப்படுவர் என்பதனை மீண்டும் உறுதிப்படுத்துவனவாகவுள்ளன.

மேலும், குறைந்த வருமான மீட்டுவோரினால் மேற்கொள்ளப்படும் தொழில்களில் பெரும்பாலானவற்றை வீட்டிலிருந்து கொண்டே செய்யமுடியாது. பெரும்பாலானவர்கள் நாளாந்த கூலியைப் பெறுபவர்களாக இருப்பதுடன் சேமிப்புப் பழக்கத்தினையும் கொண்டிருப்பதில்லை. இலங்கையைப் பொறுத்தவரையில், 2018இல் முறைசாராத் துறையின் தொழில்நிலை 58.7 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை போன்ற சில மாவட்டங்கள் 70 சவீதத்திற்கு மேற்பட்ட தொழில்நிலை முறைசாராத் துறையில் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது (தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், 2018). குடித்தொகையில் பெரும்பான்மையானவர்கள் முறைசாராத் துறையில் தொழில்புரிவது வருமானத்தினை இழப்பது தொடர்பில் மிகக் கூடியளவு பாதிக்கப்படும் தன்மையினைக் காட்டுவதுடன் தொற்றினை இந்தளவிற்கு எதிர்நோக்குகையில் பாரிய கரிசனைக்குரியதொன்றாகவும் இருக்கும்.

ஆகவே, "வீட்டிலிருந்தே தொழில்புரிவதில்" மிகக் குறைந்த வாய்ப்பினைக் கொண்டுள்ளவர்களாகவும் முறைசாராத் துறையில் கூடுதலானளவிற்கு தொழில்புரிபவர்களாகவுமுள்ள குறைந்த வருமானத்தினை ஈட்டுவோர் சுகாதாரம், செல்வம் போன்றவற்றை மட்டுமன்றி இக்காலப்பகுதியில் அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்குக் கூட இயலாதவர்களாக இருப்பதனால் கொவிட்-19 இனால் கூடுதலாகப் பாதிக்கப்படுபவர்களாக இருப்பர்.

### கொவிட்-19, வருமானச் சமமின்மையினை மேலும் விரிவுபடுத்தும்

கொவிட்-19இன் விளைவாக வருமானச் சமமின்மையின் மோசமானதன்மை பற்றி பல்வேறு ஆய்வுகளும் மீண்டும் மீண்டும் ஊகங்களை வெளிப்படுத்தி வருகின்றன. வூசெறிவும் மற்றையவர்களும் (2020) கடந்த காலத்திலும் தொற்று நிதியியல் நெருக்கடிக்குக் காரணமாக இருந்து வருமான சமமின்மையினை அதிகரித்த வேளையில் உயர்ந்த வருமான மீட்டுவோருடன் ஒப்பிடுகையில் குடித்தொகையினரின் வறிய வகையினர் மீது இது கூடியளவு தாக்கத்தினைக் கொண்டிருக்குமென்ற கருத்தினைத் தெரிவிக்கிறார்கள். வூசெறியும் மற்றையவர்களும் (2020) புள்ளிவிபரவியல் ரீதியாக தூண்டுதல் - பதிலிறுப்பு பகுப்பாய்வினூடாக, தொற்றின் பின்னர் உயர் வருமான சதவீதத்தினரிடையே பங்கீடு செய்யப்படும் வருமானம், குறைந்த வருமானம் பெறுபவரை விட உயர்வாக இருப்பது வருமான சமமின்மையினை மேலும் மோசமடையச் செய்யும் என்பதனை நிரூபித்திருக்கின்றனர். நெருக்கடிக்குப் பின்னரான காலப்பகுதியில் தொழிலினையும் எதிர்காலத் தொழில்வாய்ப்பினையும் தக்க வைத்துக் கொள்வதில் கல்வி இன்றியமையாததொரு வகிபாகத்தினை ஆற்றும் போல தெரிகிறது (வூசெறியும் மற்றையவர்களும் 2020). உயர்ந்த கல்வி அடைவினைக் கொண்டுள்ள அதேவேளையில் உயர் வருமானத்தினை ஈட்டுவோராகவுமுள்ளவர்கள் "வீட்டிலிருந்து வேலை செய்யக்கூடியவர்களாக" இருப்பதுடன் (வெரிசிறியும் மற்றையவர்களும் 2020 மற்றும் அவிடியு மற்றும் நயர் 2020) தமது தொழில்நிலையினைத் தக்கவைத்துக் கொள்ளக்கூடியவர்களாகவும் வேலைத்தலத்திற்குப் பயணிப்பது கட்டுப்படுத்தப்படுகின்ற வேளையிலும் கூட வருமானத்தினை ஈட்டக்கூடியவர்களாகவும் இருக்கின்றனர்.

3. டிஜிட்டல் அறிவு என்பது தனியாள் கணனிக்கு மட்டுப்படுத்தப்படாமல் எந்தவொரு இலத்திரனியல் கருவியையும் பயன்படுத்தும் ஆற்றலாகும்.

மாலெரும் மற்றையவர்களும் (2020) வறுமை தரவினையும் வளர்ச்சி ஊகங்களையும் பயன்படுத்தி ஆய்வொன்றினை மேற்கொண்டு, கொவிட்-19 தொற்றின் பின்னர் அதிகரிக்கின்ற வறுமையின் தாக்கத்தினை அறிந்து கொள்வதற்காக வளர்ச்சி மதிப்பீடுகளின் மீது பல்வேறுபட்ட அழுத்த சூழ்நிலைகளை ஆய்வுசெய்தனர். இவ்வாய்வின்படி, 40-60 மில்லியன் வரையிலான மக்கள் கடுமையான வறுமைக்குள் தள்ளப்படுவார்கள் என்பதனையும் அதனைத் தொடர்ந்து வருமான சமமின்மை மேலும் அதிகரிக்கும் என்பதனையும் அவதானித்தனர்.

உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான குறைந்த கேள்வியினதும் பெறுமதிச் சங்கிலி தடங்கல்களினதும் தாக்கம் ஊழியர்களின் வேலை நேரத்தினைக் குறைத்து ஊழியர்களில் மிகையினைத் தோற்றுவிக்கும் (சிவெறஸ், 2020; அவிடு மற்றும் நாயர், 2020; பிடபிள்யு, 2020). பன்னாட்டு தொழிலாளர் அமைப்பின் ஊகங்களின்படி, வேலை நேரம் மற்றும் ஊழியர்களின் குறைப்பு என்பன ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் மிகக் கடுமையாக உணரப்படும். 2020இன் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் ஏறத்தாழ 7.2 சதவீதமான வேலை நேர இழப்பு ஏற்படும். இது 125 மில்லியன் ஊழியர்களுக்குச் சமமானதாகும். மேலும், பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு அதிகளவிற்கு முறைசாரா துறை ஊழியர்களைக் கொண்டுள்ள உயர் நடுத்தர வருமான நாடுகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் இந்நெருக்கடியினால் கூடியளவிற்குப் பாதிக்கப்படும் என ஊகிக்கிறது. துரதிஷ்டவசமாக இலங்கை, பன்னாட்டு தொழிலாளர் அமைப்பினால் தொழிலின்மை வீதம் அதிகரிக்குமென சமிக்ஞை கூறப்பட்ட இவ்வகைகளின் கீழேயே காணப்படுகிறது. குறிப்பாக, குறைந்த வருமானத் துறைகளில் ஏற்படும் இத்தொழில் இழப்பு, நாட்டின் வருமான சமத்துவமின்மையினை மேலும் பெரிதாக்கும் என்பதில் ஐயமில்லை.

சமூக மேம்பாடுகளுக்கான வாய்ப்பொன்றாகக் கருதப்படும் கல்வியும் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையைப் பொறுத்தவரையில், பாடசாலைகளே முதலில் மூடப்பட வேண்டியவையாக இருந்ததுடன் இன்றுவரை அவை (2020 மே 11) திறக்கப்படவுமில்லை. எனினும், சில பாடசாலைகள் பாடங்களை நடத்தி வருகின்றன. “வீட்டிலிருந்து கொண்டே வேலை செய்வது” போன்றே போதுமான செல்வத்தினைக் கொண்டிராதமையினாலும் தொழில்நுட்பத்தினைக் குறைந்தளவிலேயே பெற்றுக்கொள்ள முடிவதனாலும் குறைந்த வருமானம் பெறுவோர் மீண்டும் பாதிக்கப்படும் தன்மை காணப்படுகிறது. மேலும், உயர் வருமானத்தினை ஈட்டுகின்ற பெற்றோர் குறைந்த வருமானம் ஈட்டுவோரிலும் பார்க்கக் கூடுதலான வசதிகளை வீட்டிலிருந்தே கற்கின்ற பிள்ளைகளுக்குச் செய்து கொடுக்க முடியும் (த எக்கொனமிஸ்ட், 2020). இதன் காரணமாக இலங்கையில் வருமான சமமின்மை நீண்ட காலத்திலும் கூட கணிசமானளவிற்கு விரிவடையக்கூடிய சாத்தியங்களே காணப்படுகின்றன.

**கொவிட்-19 காலப்பகுதியில் வருமானச் சமமின்மையினைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளும் கொள்கைகளும்**

கொவிட்-19 வருமானச் சமமின்மையினை மேலும் விரிவுபடுத்தக்கூடிய அச்சுறுத்தலைக் கொண்டிருந்த போதிலும் கூட, சப்கா (2020) முற்றிலும் வேறுபட்ட கருத்தொன்றினை இங்கே குறிப்பிடுகிறது. சமத்துவமான எதிர்காலமொன்றினை நோக்கி இக்கொள்கைகளைச் சீர்திருத்திக் கொள்வதனூடாக வருமானச் சமமின்மையினைக் கையாள்வதற்கான வாய்ப்பொன்றாக இந்நெருக்கடியினைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என அது குறிப்பிடுகிறது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் கூட (2020) இக்கருத்தினை ஊக்குவிப்பதுடன் சமமின்மையினைக் குறைப்பதற்கு அதிர்வுகளை எதிர்த்து நிற்கக்கூடிய விதத்திலும் கொள்கைகளை மீளவரைவதற்கு இந்நெருக்கடியினை புதிய ஆரம்பமாகக் கொள்ள வேண்டுமெனக் குறிப்பிடுகிறது.

கொவிட்-19 இலிருந்து தோன்றிய சுகாதாரம் தொடர்பான கரிசனைகளைப் பாதுகாப்பதற்காக நிதிகளை ஒதுக்கியமைக்குப் புறம்பாக நாடுகளினால் எடுக்கப்பட்ட கொள்கைப் பதிலிறுப்புக்களை “வரி நிவாரணம், கொடுகடன் மற்றும் கம்பனி ஆதரவு என்பனவற்றினூடாக வியாபாரத்தின் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் நம்பிக்கையினையும் உறுதிப்படுத்தல்” மற்றும் “பிரசைகளுக்கு வருமான உதவிகளை உத்வேகப்படுத்தல்” எனப் பரந்தளவிற்கு வகைப்படுத்த முடியும் (ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2020). பன்னாட்டு தொழிலாளர் அமைப்பும் கொவிட்-19இனை ஒழிப்பதற்காக நான்கு தூண்களைக் கொண்ட கொள்கையினை விதந்துரைக்கிறது. அவையாவன: பொருளாதாரத்தினையும் தொழில் வாய்ப்பினையும் தூண்டுதல்; தொழில்முயற்சிகள்; தொழில் மற்றும் வருமானத்திற்கு ஆதரவளித்தல்; வேலைத்தலங்களில் தொழிலாளர்களைப் பாதுகாத்தல்; தீர்வுகளுக்குச் சமூக பேச்சுவார்த்தைகளில் தங்கியிருத்தல் (பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு 2020). கலந்துரையாடல்களை இலகுபடுத்திக் கொள்வதற்காக அத்தகைய கொள்கைகள் வேலை இழப்புக்களைத் தடுப்பதுடன் தொடர்பான கொள்கைகள், சமூகப் பாதுகாப்பு வலையமைப்புடன் தொடர்பான கொள்கைகள் மற்றும் ஏனைய கொள்கைகள் என வேறுவேறாகப் பிரித்துக் கொள்ளப்படுகின்றன.

**தொழில் இழப்புக்களைத் தடுப்பதுடன் தொடர்பான கொள்கைகள்**

தொழில் இழப்புக்களைக் குறைத்துக் கொள்வதற்காக எடுக்கப்பட்ட பொதுவான வழிமுறைகளாகக் கூலி உதவுதொகைகளை வழங்குதல் மற்றும் நெருக்கடிக் காலத்தின் போது அவர்களது தொழிற்படையினைத் தக்க வைத்துக் கொள்வதற்காக வரி விடுப்பு போன்ற ஊக்குவிப்புக்களை வழங்குகின்றமை என்பன காணப்பட்டன (ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2020). ஜேர்மனியும் பிரான்சும் நிறுவனங்களை வங்கி முறிவுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் சம்பளக்

கொடுப்பனவுகளை இயலுமைப்படுத்துவதற்கும் வழிமுறைகளை மேற்கொண்டிருந்தன. டென்மார்க் 75 சதவீதமான சம்பளத்தினை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளையில் ஐக்கிய இராச்சியமும் ஊழியர்களின் சம்பளத்தினை வலுப்படுத்தும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டது (சப்கா 2020). ஈரான் இக்காலப்பகுதியின் போது ஊழியர்களைத் தொழிலிருந்து நீக்காமல் அவர்களுக்கு சிறிய நடுத்தர தொழில்முயற்சிக் கடன்களை வழங்குவது தொடர்பான திட்டங்களை ஆரம்பித்தது (ஐ.நா.அ.நி., 2020).

இத்தகைய விதத்தில் தொழில்களைப் பாதுகாத்துக் கொள்வது நெருக்கடியின் பின்னர் பொருளாதாரம் மீண்டும் பழைய நிலைக்கு உத்வேகமடைவதனை இயலச்செய்யும். மக்கள் தொழிலற்றவர்களாக இருப்பார்களாயின், அது வருமானச் சமமின்மையினை விரிவடையச் செய்து, மக்கள் வறுமையில் வீழ்ந்து நெருக்கடிக்குப் பின்னரும் கூட அரசாங்கத்திற்குச் சுமையாக மாறிவிடுவர். ஆகவே, சம்பளக் குறைப்பின் மூலம் தொழில் இழப்புக்களை தடுத்துக் கொள்வதும் வருமான இழப்புக்களைத் தடுத்துக் கொள்வதும் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டிற்கு மிக முக்கியமானதாகும்.

**சமூக பாதுகாப்பு வலையமைப்புடன் தொடர்பான கொள்கைகள்**

பொருளாதாரம் விரைவாக மீட்சியடைவதற்கு தொழில்களைப் பாதுகாப்பதுடன் தொடர்பான கொள்கைகள் முக்கியமானவையாக இருந்த போதும், அத்தகைய கொள்கைகள் கொவிட்-19இற்கு முன்னர் தொழிலின்றி இருந்தவர்களுக்கும் கொவிட்-19 இன் காரணமாக ஏற்கனவே தொழிலை இழந்தவர்களுக்கும் கூட எந்தவொரு ஆதரவினையும் வழங்கவில்லை. ஆகவே, நாடுகள் வருமான ஆதரவிற்கு உதவும் விதத்திலும் தொழில் சேவைகளை வழங்கும் விதத்திலும் வேலை நேரங்களில் ஏற்பட்ட குறைப்பினை ஈடுசெய்வதற்கான இழப்பீடு உட்பட தொழிலின்மைக்கான நன்மைகளை விரிவுபடுத்தல் என்பனவற்றிற்கான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும் (ஐ.நா.அ.நி., 2020). சமூக பாதுகாப்பு வலையமைப்புக்களின் இது போன்ற விரிவாக்கமும் வங்கிகள், பின்டெக் மற்றும் தனியார் துறைகளிலிருந்து ஆதரவினைப் பெற்றுக்கொள்வதும் தமது வாழ்வாதாரங்களை இழந்துவிட்ட மக்களுக்குச் சமூக மாற்றல்களை வழங்குவதற்கு முக்கியமானவையாகும்.

கொவிட்-19 தொற்றினைத் தொடர்ந்து உலகளாவிய அடிப்படையிலான வருமானக் கொடுப்பனவு பிரபல்யமான தன்மையினைப் பெற்றிருக்கிறது. இது ஒவ்வொரு பிரசையும் தமக்கு அத்தியாவசியமான பொருட்களைப் பெறுவதற்கான நிலையான தொகையொன்றினைக் கிரமமான இடைவெளியில் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துகிறது. கனடா, இந்தியா, யப்பான், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, கொங்கொங், சிங்கப்பூர் இத்தகைய திட்டங்களைத் தற்பொழுது நடைமுறைப்படுத்தி வருகின்றன (ஐ.நா.அ.நி., 2020). குறைந்த வருமானம் பெறுவோர் தாக்குப்பிடிக்கக் கூடிய விதத்தில் நன்மைகளை வழங்குவதற்குப் புறம்பாக, உலகளாவிய அடிப்படை வருமானமானது நடுத்தர காலத்தில் கூட்டுக் கேள்வியை அதிகரிப்பதற்கும் பொருளாதாரத்தினை உத்வேகப்படுத்துவதற்கும் தூண்டுதலாக விளங்குகின்றது. மலேசியா கொவிட்-19 காலத்தில் தமது தொழில்களை இழந்த மக்களுக்கு 6 மாதங்களுக்கு நிலையான வருமானத்தினை வழங்குவதற்கான திட்டத்தினை நடைமுறைப்படுத்தியிருக்கிறது. தாய்லாந்து முறைசாரா தொழிலாளர்களுக்காக மூன்று மாதங்களுக்கு ஐ.அ.டொலர் 153 இனைச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது (அசடுல்லா மற்றும் பூலா, 2020).

சிறிய மற்றும் முறைசாரா வியாபாரங்களினால் தூண்டல் பொதி நன்மைகள் பெருமளவிற்கு வரவேற்கப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும். அத்தகைய தூண்டல் பொதிகளை கொவிட்-19 இனால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தொழில் துறைகளான பயணம், விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஏற்பாட்டு வசதி என்பனவற்றிற்கு முதலில் வழங்குதல் வேண்டும். மேலும், சில நாடுகள் மூத்த பிரசைகள், பிள்ளைகள், உடல் ஊனத்துடன் கூடிய மக்கள், பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள், தொழிலற்றோர் போன்ற குறிப்பிட்ட வகையினரை இலக்காகக் கொண்ட திட்டங்களை அறிமுகப்படுத்தியிருப்பதனையும் அவதானிக்கலாம். இதன் மூலம் அரசாங்கத்தினால் செலவிடப்படுகின்ற நிதியத்தின் உச்ச நன்மைகளைப் பின்தங்கிய சமூகத்தினர் பெற்றுக்கொள்ளும் விதத்தில் சமூக பாதுகாப்பு வலையமைப்புக்கள் நெறிப்படுத்தப்பட்டுள்ளன.

**ஏனைய கொள்கைகள்**

டிஜிட்டல் பிரிவினைகளைத் தவிர்ப்பதற்கான கொள்கைகளும் மிக முக்கியமானதொரு கொள்கை வழிமுறையாகக் காணப்படுவதுடன் உயர்ந்தளவு வருமானச் சமமின்மை, சீரற்ற தகவல்களைத் தவிர்த்தல், நிதி வசதிகளை அணுகுதல், வீட்டிலிருந்து கொண்டே தொழில்புரிதல் மற்றும் கற்றல் ஆகிய நெருக்கடிகளைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் அவற்றின் மீது கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். அத்தகைய காரணங்களின் காரணமாக “இணையத்தளம் புதிய பொதுமக்கள் பயன்படுத்தும் பொருளாகக் கருதப்படல் வேண்டும் (ஐ.நா.அ.நி., 2020). இலங்கையைப் பொறுத்தவரையில், தொழில்நுட்ப வசதிகளை அணுகுவதனை அதிகரிப்பதற்கு இணைப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் பிரச்சனைகளையும் தேவையான தொழில்நுட்பங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மையினையும் மிக நுணுக்கமாக மீளாய்வு செய்தல் வேண்டும்.

**பொருளாதாரத்தின் மீதான கொவிட்-19இன் தாக்கத்தினை ஒழித்துவிடுவதற்கும் மக்களின் நல்வாழ்க்கைக்காகவும் இலங்கையும் பல்வேறுபட்ட வழிமுறைகளை எடுத்திருக்கிறது . . . .**

தொழில் இழப்புக்களைத் தடுப்பதற்கும் பின்தங்கிய மக்களை கொவிட்-19இன் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் கொள்கை வழிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கொவிட்-19இனை ஒழித்துவிடுவதற்குப் பயன்படுத்துவதற்காக ரூ.100

மில்லியன் ஆரம்பத் தொகையுடன் "கொவிட்-19 நலக்கவனிப்பு மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம்" ஒன்று 2020 மாச்சு 23ஆம் நாள் நிறுவப்பட்டது. 2020 மாச்சு 31ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட ரூ.50 பில்லியன் கொண்ட மீள்நிதியிடல் வசதி இலங்கையினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப வழிமுறைகளிலொன்றாகும். இவ்வசதியினூடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளும் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களும் உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்களினூடாக படுகடன் சட்ட இசைவுத்தாமதம், தொழிற்படு மூலதனக் கடன்கள் மற்றும் முதலீட்டு நோக்கங்களுக்கான கடன்கள் போன்ற சலுகைகளைப் பெற்றுக்கொள்ள தகைமையுடையனவாகும். இருப்பினும் கூட, இலங்கையில், வங்கி வசதிகளல்லாத துறையிலுள்ள மக்கள் தமது நிதியியல் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்கு ஒழுங்குமுறைப்படுத்தப்படாத கொடுகடன் வழங்கும் நிறுவனங்கள் பக்கம் திரும்புவதனைத் தவிர வேறு தெரிவுகளெதனையும் கொண்டிராதவர்களாகக் காணப்படுகின்றனர். கொவிட்-19 இற்கு முன்னரும் கூட, குறைந்த வருமானத்தினை ஈட்டுகின்ற பெரும்பாலான வீட்டுத்துறையினர் அத்தகைய ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மூலங்களிலிருந்து பல்வேறு கடன்பாடுகளைப் பெற்றிருந்ததுடன் மிகப் பெரிய வட்டி வீதங்கள் உட்பட, நியாயமற்ற கொடுப்பனவு நிலைமைகளின் காரணமாக கடன் பொறிக்குள் சிக்கிக் கொண்டிருக்கின்றனர் (அறம்பேபொல மற்றும் றொமேசன், 2019). ஆகவே, அத்தகைய பின்தங்கிய மக்கள் படுகடன் சட்ட இசைவுத்தாமதம், தண்ட வீத வட்டி வீதங்களின் தள்ளுபடி மற்றும் வட்டி வீதங்களின் குறைப்பு என்பன தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்படும் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். இது அவர்களது நிதியியல் நிலைமைகளை மேலும் பாதிக்கும்.

உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவும் இலங்கை ரூபா மீதான அழுத்தத்தினைக் குறைப்பதற்காகவும் இலங்கை அரசாங்கம் அரிசி, மா, சீனி, குடிவகை போன்ற உற்பத்திகளின் மீது இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்தது. மேலும், தளபாடங்கள், மட்பாண்டப் பொருட்களைக் கொடுகடன் அடிப்படையில் இறக்குமதி செய்வதன் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இத்தகைய பொருட்களை இலங்கையினால் உற்பத்தி செய்ய முடியுமாகையால் அத்தகைய கொள்கைகள் உள்நாட்டு உற்பத்திகளுக்கு, குறிப்பாக வேளாண்மைப் பொருட்களுக்கு சந்தை வசதிகளை உருவாக்கும். இதன் மூலம் குறைந்த வருமானமுடையோருக்கு வருமான மூலங்களையும் தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்கும்.

மேலும், சமுர்த்திக் கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியுடைய மக்களுக்கு ஒரே தடவையில் ரூ.5,000/- கொண்ட கொடுப்பனவு வழங்கப்பட்டது. சமுர்த்திக் கொடுப்பனவுகள் வருமானமற்ற அல்லது குறைந்த வருமானத்தினைப் பெறும் பின்தங்கியவர்களுக்கே வழங்கப்படுவதனால், இந்நேரத்தில் அவர்களுக்கு உதவும் விதத்தில் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டமை முக்கியமானதொன்றாகும். ஆரம்பத்தில் இக்கொடுப்பனவு, சமுர்த்திக் கொடுப்பனவுகளைப் பெறும் பட்டியலிடப்பட்ட மக்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. அதன் பின்னர் கொவிட்-19இன் காரணமாக வருமானங்களை இழந்த புலம்பெயர் தொழிலாளர், ஆடைத் துறையிலுள்ளோர் போன்ற வீட்டுத்துறையினரும் உள்ளடக்கப்பட்டனர்.

**கொள்கை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பான முக்கிய அம்சங்கள்**

கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் எவ்வித தவறுகளும் இடம்பெறுவதனைத் தவிர்த்துக் கொள்வது முக்கியமானது என்பதனையும் வழங்கப்படும் நன்மைகள் அவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் அளவிடப்படுவதும் முக்கியமானது என ஐ.நா.அ.நிதியம் மீண்டும் வலியுறுத்துகிறது (2020). எடுத்துக்காட்டாக, ஊழியர்கள் வேலையிலிருந்து நீக்கப்படவில்லை என்பதிலிருந்து பெறுபேறு அளவிடப்படல் வேண்டும். தாய்லாந்தில் "ஒருவரும் தவறவிடப்படக்கூடாது" என்ற திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் இது, நிர்வாகத் தவறுகள் காரணமாக, அதன் நற்பெயரையே ஆட்டம் காணச் செய்யும் விதத்தில் வெற்றியளிக்காது போனதுடன் ஆயிரக்கணக்கானோர் வேலையிழந்து போயினர் (அசாடுல்லா மற்றும் பூலா, 2020). ஆகவே, இத்தூண்டல் பொதிகளை நடைமுறைப்படுத்தும் பொழுது தவறுகளைத் தவிர்ப்பது மிக முக்கியமானதாகும். இல்லையெனில், அத்தகைய நன்மைகள் உயர் வருமானம் பெறுவோருக்கு கசிந்துவிடும் என்பதுடன் வருமானச் சமமின்மை மேலும் விரிவடைந்து போகும்.

**முடிவாக . . . .**

கொவிட்-19 பரவலுக்கு முன்னரும் கூட, இலங்கையில் வருமானச் சமமின்மை தொடர்ந்தும் அதிகரித்துவரும் நிலையே அவதானிக்கப்பட்டிருக்கிறது. இது கொவிட்-19 உடன் பல மடங்காகும் என்பதில் சந்தேகமில்லை என்பதுடன் கொவிட்-19 தொற்றின் பரவலைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் கூட, இலங்கை இவ்வருமானச் சமமின்மையினை ஒழித்துவிடுவதற்குப் பல்வேறு வழிமுறைகளையும் ஏற்கனவே ஆரம்பித்திருக்கிறது. எனினும், அத்தகைய நிவாரணப் பொதிகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கான ஆற்றல் நாட்டின் இறை இடைவெளியிலேயே தங்கியிருக்கிறது. ஆகவே, நிவாரண வழிமுறைகளை மேற்கொள்கின்ற அதே சமகாலப்பகுதியில், இலங்கை மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளியினைக் கொண்டதொரு நாடு என்ற அடிப்படையில் வரவு செலவுத்திட்ட முன்னுரிமைகளையும் வரி விலக்கல்களையும் மீளாய்வு செய்தல் வேண்டும் என்பதுடன் வரி ஏய்ப்புக்களையும் தவிர்ப்பு சம்பவங்களையும் தடுப்பதற்கு வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

மேலும், வியாபார நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கு உறுதியானதும் வெளிப்படையானதுமான கொள்கைகளுடன் பொருளாதாரம் தூண்டப்படுகின்ற வேளையில் புதுமையானதும் தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றம் கண்டதுமான வங்கித்தொழில் வசதிகளை ஊக்குவிப்பது இக்கட்டத்தில் இன்றியமையாததொன்றாகும். மேலும், கொவிட்-19 தொற்றின் காரணமாக பல புத்தாக்கங்களும்

தொழில்முயற்சியாண்மையாளர்களும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப விடயங்களில் தோற்றம் பெற்று வருகின்றனர். இதனை பொருளாதார அபிவிருத்திக்காகப் பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும். அதேநேரம் டிஜிட்டல் பிரிப்பினை வலியுறுத்துவதிலிருந்து ஆரம்பமாகின்ற வாய்ப்புக்களின் சமத்துவத்தினை அதிகரிக்கின்ற, வருமான சமமின்மையினைத் தவிர்ப்பதற்கான மறைமுக கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது மிக முக்கியமானதாகும்.

இதன் மூலம், தொடர்ச்சியான அடிப்படையில் கசிவுகளைத் தவிர்ப்பதற்கான சிறந்த கவனத்துடன் வருமான சமமின்மையினைக் கட்டுப்படுத்துவதற்காக மிகச் சாதகமானதும் உறுதியானதுமான கொள்கைகளை உருவாக்குவது இலங்கையினால் எதிர்நோக்கப்பட்ட வருமான சமமின்மையினை குறுக்குவதனை இயலுமைப்படுத்தும் என்பதுடன் இறுதியாக கொவிட்-19 தொற்றின் பின்னர் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியை அடைந்து கொள்வதனையும் இயலுமைப்படுத்தும்.

**உசாத்துணை நூல்கள்**


Agarwal, P. [Online] "The Gini Coefficient" Available from: https://www. intelligenteconomist .com/gini-coefficient/ [Accessed 10th May 2020], 2020

Asadullah, N. and Bhula, R. [Online] "Why COVID-19 will Worsen Inequality in Thailand" Available from: https://thediplomat.com/2020/04/why-covid-19-will-worsen-inequality-in-thailand/. [Accessed 10th May 2020], 2020

Arambepola, C. and Romeshun, K. "Debt at My Doorstep: Microfinance Practices and Effects on Women in Sri Lanka", Centre for Poverty Analysis, 2019

Avidiu, B. and Nayyar, G., [Online] "When face-to-face interactions become and occupational hazard: Jobs in the time of COVID-19" Available from: https://www.brookings.edu/blog/future-development/2020/03/30/when-face-to-face-interactions-become-an-occupational-hazard-jobs-in-the-time-of-covid-19/. [Accessed 10th May 2020], 2020

Central Bank of Sri Lanka, "Annual Report – 2019", 2019

Department of Census and Statistics, Sri Lanka, "Computer Literacy Statistics – 2017 (First six months)", 2017

Department of Census and Statistics, Sri Lanka, "Sri Lanka Labour Force Survey, Annual Report – 2018", 2018

The Economist, 435(9192) pp. 8, "COVID-19 and the Classroom: Open Schools First", 2020

Furceri, D., Loungani, P., Ostry. D. and Pizzutu P., [Online] "COVID-19 will raise inequality if past pandemics are a guide" Available from: https://voxeu.org/article/covid-19-will-raise-inequality-if-past-pandemics-are-guide. [Accessed 10th May 202], 2020

International Labour Organisation, [Online] "COVID-19 Causes Devastating Losses in working Hours and Employment" Available from: https://www.ilo.org/global/about-the-ilo/newsroom/news/WCMS_740893/lang--en/index.htm [Accessed 10th May 2020], 2020

Mahler, D. G. , Lakner, C., Aguilar, R. A. C and Wu, H., [Online] "The Impact of COVID-19 (Coronavirus) on global poverty: Why Sub-Saharan Africa might be the Region Hardest Hit" Available from: https://blogs.worldbank.org/opendata/impact-covid-19-coronavirus-global-poverty-why-sub-saharan-africa-might-be-region-hardest [Accessed 9th May 2020], 2020

PriceWaterhouseCoopers, "COVID-19 Outbreak Impact on Sri Lanka and Recommendations", 2020

Sabga, P., [Online] "Could the coronavirus crisis help tackle income inequality?" Available from: https://www.aljazeera.com/ajimpact/conronavirus-crisis-remedy-income-inequality-200323031903334.html. [Accessed 10th May 2020], 2020

Schifferes, S., [Online] "The Coronavirus Pandemic is Already Increasing Inequality" Available from: https://theconversation.com/the-coronavirus-pandemic-is-already-increasing-inequality-135992 [Accessed 10th May 2020], 2020

Turrisi, G. and Debinski, G., [Online] "The Graphic Truth: Coronavirus and Income Inequality" Available from: https://www.gzeromedia.com/the-graphic-truth-coronavirus-and-income-inequality. [Accessed 10th May 2020], 2020

United Nations Development Programme [Online] "The Social and Economic Impact of COVID_19 in the Asia-Pacific Region" Available from: https://www.undp.org/content/dam/undp/library/km-qap/UNDP-RBAP-Position-Note-Social-Economic-Impact-of-COVID-19-in-Asia-Pacific-2020.pdf [Accessed 10th May 2020], 2020

# நிதியியல் நிறுவனங்களுக்கான இடர்நேர்வு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்

பி. ஏ. டி. பி. பத்மபெரும
மூத்த உதவிப் பணிப்பாளர்
வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

**நிதியியல் நிறுவனங்கள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பொதுநோக்கு**

நிதியியல் நிறுவனமென்பது வைப்புக்கள், கடன்கள், முதலீடுகள், வெளிநாட்டு நாணயங்களை மாற்றுதல் போன்ற நிதியியல் மற்றும் நாணயக் கொடுக்கல்வாங்கல்களை கையாள்கின்ற வியாபார நடவடிக்கைகளில் தொடர்புபட்டுள்ள ஒரு கம்பனியாகும். நிதியியல் நிறுவனங்கள் வங்கிகள், நிதிக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள், தரகு நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு வணிகர்கள் போன்றனவற்றை உள்ளடக்கிய நிதியியல் பணிகள் துறைக்குள் உள்ள பரந்த வீச்சிலான வியாபாரத் தொழிற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

இவ்வனைத்து நிதிக் கம்பனிகளும் வேறுபட்ட மட்டங்களிலமைந்த இடர்நேர்வுகளை எதிர்நோக்க தயாராக இருப்பதுடன் இவ்விடர்நேர்வுகள் நிதிக் கம்பனிகளுக்கான வெகுமதிகளையும் உருவாக்குகின்றன. எனினும், நிதிக் கம்பனியொன்றினால் எதிர்நோக்கப்படும் உயர் இடர்நேர்வின் இறுதிப் பெறுபேறு வியாபாரம் முறிவடைவதற்கே வழிவகுக்கும். இடர்நேர்வு முகாமைத்துவம் இடர்நேர்வுகளை ஏற்பதற்கும் அவற்றைக் குறைப்பதற்குமிடையிலான சமநிலையொன்றினை அனுமதிக்கிறது. காத்திரமான இடர்நேர்வு முகாமைத்தும் எந்தவொரு நிறுவனத்திற்குமான பெறுமதியினைக் கூட்ட முடியுமென்பதுடன் காத்திரமான இடர்நேர்வு முகாமைத்துவம் கட்டமைப்பு, வளர்ச்சிக்குத் தடையாக அமையாமல் நிறுவனத்தின் மூலதனத் தளத்தினையும் வருவாய்களையும் பாதுகாப்பதற்கு எதிர்பார்க்கிறது. மேலும், முதலீட்டாளர்கள் சிறந்த இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளைக் கொண்டுள்ள கம்பனிகளில் முதலீடுகளை மேற்கொள்ளவே கூடியளவிற்கு விரும்புவர். இது பொதுவாக குறைந்த கடன்பாட்டுச் செலவுகளையும் நிறுவனத்திற்கான மூலதனத்தினை இலகுவாக அடைவதனையும் மேம்பட்ட நீண்ட காலச் செயலாற்றத்தின் மூலம் பெறப்படுகிறது.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவமானது நிறுவனம் முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுடனும் இணைந்த அனைத்து இடர்நேர்வுகளையும் முகாமைப்படுத்துகிறது. வங்கித்தொழில் நிறுவனங்கள் அல்லது வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்களைப் பொறுத்தவரையில், இவற்றுடன் இணைந்து காணப்படும் முக்கிய இடர்நேர்வுகளாக திரவத்தன்மை இடர்நேர்வு, வட்டி வீத இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, கொடுகடன் இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பன பல்வேறுபட்ட வடிவங்களில் காணப்படுகின்றன. இவ்வனைத்து இடர்நேர்வுகளிலும் இணைந்து காணப்படும் பொதுவான காரணி நிறுவனத்தின் வருமானத்தின் மீதான அவற்றின் சாத்தியமான கீழ் நோக்கிய தாக்கமேயாகும். அனைத்து இடர்நேர்வுத் தாக்கங்களினதும் மொத்தத் தொகை அனைத்து நிறுவனங்களுக்குமான நெருக்கடி காரணியொன்றாகக் காணப்படுகிறது.

**ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவத்தின் செயன்முறை**

காத்திரமான இடர்நேர்வு முகாமைத்துவம், எந்தவொரு கம்பனியினதும் நிதியியல் உறுதிப்பாட்டிலும் உயர்ந்த செயலாற்றத்திலும் இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றுகிறது. நிறுவனத்தின் இடர்நேர்வுக் கலாச்சாரத்தில் பதிந்து காணப்படும் சிறந்த நடைமுறைகளைக் கொண்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினைப் பின்பற்றுவது நிறுவனமொன்றின் நிதியியல் எதிர்காலத்தின் மூலைக்கல்லாக விளங்கும்.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவத்தின் செயன்முறையானது உபாயம், நிறுவனம், செயன்முறை மற்றும் முறைமை என்பனவற்றை உள்ளடக்குகிறது.

1) **உபாயம்:** முக்கிய கம்பனி உபாயமொன்றாக இடர்நேர்வு முகாமைத்துவத்தினை ஒருங்கிணைப்பது

2) **நிறுவனம்:** பணிப்பாளர் சபைக்கு பொறுப்புக்கூறும் விதத்தில் முதன்மை இடர்நேர்வு அலுவலர் பதவியினை உருவாக்குதல்

3) **செயன்முறை:** ஆறு மைய இடர்நேர்வு வழிகாட்டல்களுக்கு துணை நிரப்பியாக பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளுடன் இசைந்து செல்லத்தக்க விதத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறை வழிகாட்டல்களைத் தயாரிக்க வேண்டியிருக்கும்.

அ) இடர்நேர்வினை அடையாளம் காணுதல்

ஆ) இடர்நேர்வினை அளவிடல்

இ) இடர்நேர்வினைத் தணித்தல்

ஈ) இடர்நேர்வினை அறிக்கையிடல்

உ) இடர்நேர்வினைக் கண்காணித்தல்

ஊ) இடர்நேர்வினை ஆளுகை செய்தல்

**அ) இடர்நேர்வினை அடையாளம் காணுதல்**

இடர்நேர்வுகளை அடையாளம் காணுகின்ற முதற்கட்டத்தில் கம்பனியொன்று இடர்நேர்வின் முழுத்தன்மையினையும் வரைவிலக்கணம் செய்ய வேண்டியிருக்கும். முழு இடர்நேர்வு என்பது அனைத்து சாத்தியமான இடர்நேர்வுகளினதும் எளிமையானதொரு பட்டியலாகும். உதாரணமாக இது தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வு, தொழிற்பாட்டு இடர்நேர்வு, ஒழுங்குமுறைப்படுத்தல் இடர்நேர்வு, சட்ட இடர்நேர்வு, அரசியல் இடர்நேர்வு, உபாய இடர்நேர்வு மற்றும் கொடுகடன் இடர்நேர்வு என்பனவற்றை உள்ளடக்குகிறது. அனைத்து சாத்தியமான இடர்நேர்வுகளையும் பட்டியலிட்டதன் பின்னர், கம்பனியொன்று எவ்விடர்நேர்விற்கு உட்படுகிறது என்பதனைத் தெரிவுசெய்து அவற்றை மைய மற்றும் மையமல்லா இடர்நேர்வுகள் என வகைப்படுத்தும். மைய இடர்நேர்வுகள் என்பது செயலாற்றத்தினைத் தூண்டும் பொருட்டும் நீண்ட கால வளர்ச்சியையும் கவனத்தில் கொண்டு கம்பனியினால் எடுக்கப்பட வேண்டியதொன்றாகும். மையமல்லா இடர்நேர்வுகள் பெரும்பாலும் இன்றியமையாதனவல்லாதனவாக இருப்பதுடன் அவற்றைக் குறைக்கலாம் அல்லது முற்றாக நீக்கிவிடலாம்.

**ஆ) இடர்நேர்வினை அளவிடல்**

இடர்நேர்வினை அளவிடல் ஒன்றில் குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வு வெளிப்படுத்துகையினை அல்லது கூட்டு இடர்நேர்வு வெளிப்படுத்துகையினை அளவு மீதான தகவல்களையும் அத்தகைய வெளிப்படுத்துகைகளின் காரணமாக ஏற்படுகின்ற இழப்புக்களின் நிகழ்தகவினையும் தருகின்றது. குறிப்பிட்ட இடர்நேர்வு வெளிப்படுத்துகையினை அளவிடுகின்ற போது நிறுவனத்தின் ஒட்டுமொத்த இடர்நேர்வுத் தோற்றப்பாட்டின் மீது அவ்விடர்நேர்வு கொண்டிருக்கக்கூடிய தாக்கத்தினைப் பரிசீலனையில் கொள்வது முக்கியமானதாகும். சில இடர்நேர்வுகள் பன்முகப்படுத்தப்பட்ட நன்மைகளைத் தருகின்ற வேளையில் மற்றையவை அவ்வாறு தருவதில்லை. பரிசீலனையில் கொள்ள வேண்டிய இன்னொரு முக்கியமான விடயம் வெளிப்படுத்துகையினை அளவிடுகின்ற இயலாற்றலாகும். சில இடர்நேர்வுகள் மற்றையவற்றினைக் காட்டிலும் அளவிடுவதற்கு இலகுவானவையாக இருக்கும். உதாரணமாக, சந்தை இடர்நேர்வினை அவதானிக்கப்படுகின்ற சந்தை விலைகளைப் பயன்படுத்தி அளவிட முடியும். ஆனால் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை அளவிடுவதற்கு கலை மற்றும் விஞ்ஞானம் இரண்டையும் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

**இ. இடர்நேர்வினைத் தணித்தல்**

இவ்விடர்நேர்வுகளை வகைப்படுத்தி அளவிடுகையில், கம்பனியொன்று எந்த இடர்நேர்வுகளை நீக்குதல் வேண்டும் அல்லது குறைத்தல் வேண்டும் என்பதனையும் எவ்வளவு மைய இடர்நேர்வுகளை வைத்திருத்தல் வேண்டுமென்பதனையும் தீர்மானித்தல் வேண்டும். இப்பெறுபேறுகளின் அடிப்படையில் இடர்நேர்வினை முகாமைப்படுத்தல் மற்றும் இடர்நேர்வினைத் தணிப்பதற்குத் தேவையான முறைமைகளை அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

இடர்நேர்வின் பாரிய பன்முகத்தன்மையின் காரணமாக, அனைத்திற்குமாக தொழிற்படுகின்ற விதத்தில் விபரிக்கப்படுகின்ற தனியொரு இடர்நேர்வு முகாமைத்துவ முறைமை காணப்படவில்லை. நிதியியல் நிறுவனம் ஒவ்வொன்றும் அதன் தேவைக்கும் சூழ்நிலைக்குமேற்ப இடர்நேர்வு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தினைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். இடர்நேர்வு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தினைக் கவனத்திற் கொள்ளாமல், ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டமும் இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், அளவிடல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கி கட்டமைக்கப்பட்ட வழிமுறையொன்றினை வழங்குதல் வேண்டும். இதற்காக, பின்வரும் மூலங்கள் தொடர்பில் ஆற்றல் வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். செயற்படுகின்ற சபை மற்றும் மூத்த முகாமைத்துவ மேற்பார்வை:

**i. நிறுவன ரீதியான அமைப்பு:**

ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் மூலமான பணிப்பாளர் சபை நிதியியல் நிறுவனத்தின் முழு இடர்நேர்வுகளுக்கும் பொறுப்பான உச்ச சபையாகும். இடர்நேர்வுகள் தனித்தனியாகக் காணப்படுவதில்லை என்பதுடன் ஒருங்கிணைக்கப்பட்ட முறையொன்றில் உச்சமட்டத்தில் முகாமைப்படுத்தப்படுகின்றன.

**ii. கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்:**

இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தொடர்பான கொள்கைகளும் நடைமுறைகளும் ஒன்று மற்றொன்றுடன் ஒத்துச்செல்வதனையும் உபாயக் குறிக்கோள்களைப் பொருத்தமான விதத்தில் பிரதிபலிப்பதனையும் நிதியியல் நிறுவனத்தின் ஒட்டுமொத்த இடர்நேர்வினை ஏற்கும் தன்மையினையும் உறுதிப்படுத்துகின்ற விதத்தில் உச்சியிலிருந்து பாதம் வரையிலான அணுகுமுறையினைப் பயன்படுத்தி உருவாக்கப்படுதல் வேண்டும். நிதியியல் நிறுவனங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது நிதியியல் நிறுவனங்கள்

அவற்றின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிற்காக பன்னாட்டு ரீதியில் சந்தை நடைமுறைகளுக்கு இணையான மேம்பட்ட கொள்கைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றுவதில் அவற்றை ஈடுபடுத்துவதற்காகவே தயாரிக்கப்படுகிறது. இந்நோக்கத்திற்காக, கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, தொழிற்பாட்டு இடர்நேர்வு, இணங்கியொழுகும் இடர்நேர்வு, உபாய இடர்நேர்வு, கீர்த்தி இடர்நேர்வு, சூழல் இடர்நேர்வு மற்றும் பணம் தூயதாக்கல் இடர்நேர்வு என்பனவற்றை உள்ளடக்கிய அனைத்து நிகழ்தகவான இடர்நேர்வுகளையும் இவ்வழிகாட்டல்கள் உள்ளடக்குகின்றன.

**iii. ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு வரையறைகள்:**

ஒரு "சிறந்த நடைமுறைகள்" வரையறை அமைப்பு, நிறுவனம் முழுவதிலுமுள்ள இடர்நேர்வு நாட்டத்தினை தொடர்பூட்டி, ஒட்டுமொத்த வெளிப்படுத்துகைகளையும் ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டங்களில் பேணுவதற்கு உதவுவதுடன் அதிகார ஒப்படைப்பினையும் இயலச்செய்கிறது. இது அனைத்து இடர்நேர்வு வகைகள் முழுவதினதும் இடர்நேர்வு கணியம்சார் முறையியலினூடாக அனைத்து இடர்நேர்வு வகைகள் இடர்நேர்வு முழுவதினதும் பொதுவான தன்மையினைப் பின்பற்றுவதுடனும் தொடர்புபட்டிருக்கிறது.

**ஈ) இடர்நேர்வு அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்பு**

ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றில், உயர் முகாமைத்துவம், அனைத்து இடர்நேர்வுகள் தொடர்பிலும் ஒரு முழுமையான பார்வையினைக் கொண்டிருத்தல் வேண்டும். உதாரணமாக, கொடுகடன் இடர்நேர்வு அறிக்கைகள் வெளிநின்ற இணைத்தரப்பு வரையறைகளைப் போன்று, திறைசேரி மற்றும் கொடுகடன் திணைக்களங்களின் அனைத்து வெளிநின்ற வரையறைகளையும் உள்ளடக்குதல் வேண்டும். நிதியியல் நிறுவனங்களின் பரந்த இடர்நேர்வு அறிக்கைக்கான நிதியியல் நிறுவனங்களிடையேயான இடர்நேர்வு மூலங்களைக் கணிப்பதற்கும் நிதியியல் சந்தைகளுக்கான மொத்த வெளிப்படுத்துகைகளை மதிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

மேலும், உத்தம அளவிலுள்ள இடர்நேர்வு மட்டங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு குறித்துரைக்கப்பட்ட மற்றும் கூட்டு இடர்நேர்வு அளவு முறைகள் தொடர்பில் கிரமமாக அறிக்கையிடுவது முக்கியமானதாகும். நாளாந்த வர்த்தகத்தினை மேற்கொள்ளும் நிதியியல் நிறுவனங்கள் நாளாந்த இடர்நேர்வு அறிக்கைகளைத் தயாரித்தல் வேண்டும். மற்றைய நிறுவனங்கள் குறைந்தளவு கால இடைவெளிகளில் அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படலாம். இடர்நேர்வு அறிக்கைகளை, இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளைச் சீர்ப்படுத்தக்கூடிய (அல்லது சீர்ப்படுத்துமாறு மற்றையவர்களுக்கு அறிவுறுத்தல்களை விடுக்கக்கூடிய) இடர்நேர்வு ஆளணியினருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**உ) இடர்நேர்வு ஆளுகை**

இடர்நேர்வு ஆளுகை என்பது அனைத்துக் கம்பனி ஊழியர்களும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிற்கிணங்க தமது கடமைகளை ஆற்றுவதனை உறுதிப்படுத்துகின்ற ஒரு செயன்முறையாகும். இடர்நேர்வு ஆளுகையானது அனைத்து ஊழியர்களினதும் வகிபாகத்தினை வரைவிலக்கணம் செய்தல், கடமைகளை வெவ்வேறாகப் பிரித்தல் மற்றும் தனிப்பட்டவர்களுக்கும் குடிமக்களுக்கும் அதிகாரங்களை ஒப்படைத்தல் மற்றும் மைய இடர்நேர்வுகள், இடர்நேர்வு வரையறைகள், வரையறைகளுக்கான விதிவிலக்குகள் மற்றும் இடர்நேர்வு அறிக்கைகளுக்கான சபைகள் மற்றும் பொதுவான மேற்பார்வை என்பனவற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது.

புதிய இடர்நேர்வு முகாமைத்துவக் கலாச்சாரத்தில் நிதியியல் நிறுவனங்களின் ஒவ்வொரு ஊழியரும் நிறுவன ரீதியான இடர்நேர்வு நாட்டங்களைப் புரிந்து கொண்டு, இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான தெளிவான ஆளுகை அமைப்பின் பக்கபலத்துடன் "மூன்றடுக்குப் பாதுகாப்பான" வியாபார அலகாகத் தொழிற்படும் முதலாவது பாதுகாப்பு அடுக்கு, சுயாதீனமான இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடாக விளங்கும் இரண்டாவது பாதுகாப்பு அடுக்கு, உள்ளகக் கணக்காய்வென்ற மூன்றாவது பாதுகாப்பு அடுக்கு என்பனவற்றை உள்ளடக்கி தாங்கள் ஒவ்வொருவரும் ஒரு இடர்நேர்வு முகாமையாளராகப் பாவனை செய்து கொள்ளுதல் வேண்டும்.

4) **முறைமைகள்:** இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையானது, ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் தகவல்களை மற்றும் பகுப்பாய்வுக் கருவிகளை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். மேலும், அத்தகைய ஒருங்கிணைப்புடன் இசைந்து செல்லக்கூடிய தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பொன்றினால் ஆதரவளிக்கப்படக்கூடிய ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்று அவசியமாகும்.

**நிதியியல் நிறுவனங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்:**

இடர்நேர்வு முகாமைத்துவம் என்பது எந்தவொரு அளவினையும் கொண்ட நிதியியல் நிறுவனங்களுக்கும் அடிப்படைத் தேவையாக இருப்பதுடன் அவற்றின் வெற்றி மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மை என்பனவற்றின் இறுதி மையமாகவும் காணப்படுகிறது. இது, நியமப்படுத்தப்பட்ட இடர்நேர்வு நிபந்தனைகளையும் அளவியல்களையும் பிரயோகிப்பதன் மூலமாக நிறுவனமொன்றின் உள்ளக மற்றும் வெளிப்புற வியாபாரச் செயன்முறைகளை ஒருங்கிணைப்பதுடன் உத்தம இடர்நேர்வு/ வருவாய் தீர்மானங்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் அறிக்கையளிக்கின்றது.

இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறை மேற்பார்வை செய்கின்ற இடர்நேர்வு வெளிப்படுத்துகைச் செயன்முறையினை மையப்படுத்துவதனால் நிறுவனமானது அளவுமுறைகளை அடையாளம் காணவும்

அனைத்து வியாபார அலகுகளிடையேயுமான இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்குமான நியம வரைவிலக்கணங்களையும் முறைகளையும் தேவைப்படுத்துகின்ற, அதன் தற்போது இடம்பெற்றுவரும் செயன்முறையிலுள்ள இடர்நேர்வினை ஈர்த்துக் கொள்ளல், மட்டுப்படுத்தல் அல்லது மாற்றுவதில் எது சிறந்தது என்பதனை வரைவிலக்கணம் செய்து கொள்ள முடியும். பின்னர் இத்தகவல்களை அவற்றின் பரஸ்பர தொடர்பு, தங்கியிருக்கும் தன்மை மற்றும் எதிரீடு செய்து கொள்ளல் என்பனவற்றை உள்ளடக்கிய நிறுவன ரீதியான இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளின் ஒட்டுமொத்த தன்மையினைத் தீர்மானிப்பதற்குப் பகுப்பாய்வு செய்து கொள்ள முடியும்.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு அப்பால் செல்ல முடியும் என்பதுடன் சாத்தியமான இடர்நேர்வினை அநுகூலங்களைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வழிவகைகளைக் கண்டறிவதற்கும் உண்மையில் உதவுகிறது. எனினும், அதனைச் செய்வதற்கு, நிறுவனங்கள் இடர்நேர்வுகளைப் பிடித்துவைத்துக் கொள்வதற்கு, நிதியிடுவதற்கு அல்லது மாற்றல் செய்துகொள்வது தொடர்பில் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு, இடர்நேர்வுச் செயன்முறைகளைப் பூரணமாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இத்தீர்மானங்கள் தரப்படுத்தப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறைகளையும் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடலையும் தேவைப்படுத்துகின்றன. இதன் மூலம் நிறுவனம் அதன் வெளிப்படுத்துகை பற்றி தொடர்ச்சியானதும் சரியான நேரத்திலுமான பார்வையொன்றினை எப்பொழுதும் வைத்திருக்க முடியும்.

**சரியான விதத்தில் நடைமுறைப்படுத்தப்படும் பொழுது ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம்:**

1. நாளாந்த தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் இடர்நேர்வினை உபாய அம்சங்கள் அணிப்படுத்தப்படுகின்றன.
2. முதலீட்டாளர்களுக்கும் ஒழுங்குமுறைப்படுத்துநர்களுக்கும் பெருமளவு வெளிப்படைத்தன்மை வசதிகள் கிடைக்கின்றன.
3. வருமானம் அதிகரிக்கிறது மற்றும் வருவாய் வளர்ச்சியடைகிறது.
4. கீழ் நோக்கிய இடர்நேர்வுச் சாத்தியங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

**ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவத்தின் நன்மைகள்:**

1. வாய்ப்புக்களின் வீச்சு அதிகரிக்கிறது: அனைத்து சாத்தியங்களையும் பரிசீலனையில் கொள்ளும் போது இடர்நேர்வின் நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய அம்சங்கள் இரண்டையும் - முகாமைத்துவம் நிதியியல் நிறுவனங்கள் புதிய வாய்ப்புக்கள் மற்றும் நடைமுறை வாய்ப்புக்களில் இணைந்து காணப்படும் சவால்கள் என்பனவற்றை அடையாளம் காண முடியும்.
2. எதிர்பாராத இழப்புக்களை அடையாளம் காணுதல் மற்றும் கட்டுப்படுத்தல்: நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு அவர்களது இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளில் உண்மையான மட்டத்துடன் தொடர்பான அவற்றின் மூலதன ஒதுக்குகளை அடையாளம் காண உதவுகிறது. வியாபாரங்களின் வகை மற்றும் அடுக்குகளின் கூட்டுத்தொகை மற்றும் பகுப்பாய்வுகளின் மூலம் எதிர்பாராத இழப்புக்களை ஈர்த்துக் கொள்வதற்குத் தேவையான மூலதனத் தொகையினை அவர்கள் கணிக்கக்கூடியதாக இருப்பர்.
3. நிறுவனங்களின் அடிப்படையில் இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு முகாமைப்படுத்தல்: இடர்நேர்வுகள் நிதியியல் நிறுவனங்களின் பல்வேறு அங்கங்களையும் பாதிக்கக்கூடிய ஒன்றாகும். சிலநேரங்களில், இடர்நேர்வு, வியாபாரத்தின் ஒரு பகுதியிலிருந்து தோற்றம் பெற்றிருக்குமெனினும் மற்றொரு பகுதியைப் பாதிக்கக்கூடும். இதன் விளைவாக, முகாமைத்துவமானது தாக்குப்பிடிக்கச் செய்வதற்காகவும் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்காகவும் நிறுவன அடிப்படையிலான இடர்நேர்வுகளை அடையாளம் செய்து முகாமைப்படுத்துகிறது.
4. எதிர்மறையான ஆச்சரியங்களைக் குறைத்து வருமானங்களை உத்வேகப்படுத்தல்: ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் நிதியியல் நிறுவனங்கள் இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு பொருத்தமான பதிலிறுப்புக்களை நிறுவுவதற்கும் ஆச்சரியங்களையும் தொடர்பான நிதியியல் இழப்புக்களைக் குறைப்பதற்கும், அநுகூலமான அபிவிருத்திகளிலிருந்து இலாபங்களைப் பெறுவதற்கு அவர்களை அனுமதிப்பதற்குமான அவற்றின் இயலாற்றலை மேம்படுத்த அனுமதிக்கிறது.
5. மேலும், மிகக் கூடுதலான வெளிப்படையான இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைகளைக் கொண்டிருக்கும் நிறுவனங்கள், இடர்நேர்வு விழிப்புணர்வு அடிப்படைத் தீர்மானங்களை எடுத்தல் மற்றும் உபாயத் திட்டமிடல் என்பனவற்றின் விளைவாக ஆளுகையினை மேம்படுத்தக் கூடியனவாகவுள்ளன.

**உசாத்துணை நூல்கள்**


1. Inspection Manual for Deposit-Taking Institutions, Financial Services Agency, June 2014
2. Risk Management Guidelines, January 2013
3. Integrated Risk Management Guidelines for Financial Institution, Department of Financial Institutions and Markets, Bangladesh Bank January 2016
4. Advancing Integrated Risk Management, Bank of Japan, September 2005

# நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் ~ இலங்கைக்கான பாடம்

தரங்க ஏ.டி. விஜய கூன்
மூத்த உதவிப் பணிப்பாளர்
வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

## அறிமுகம்

உலக வங்கியின்படி, நிதியியல் வசதிக்குட்படுத்துதல் என்பதன் பொருள் தனிப்பட்டவர்களும் வியாபாரங்களும் தமது தேவைகளை - பொறுப்புமிக்கதும் வலுவானதுமான வழிகளில் வழங்கப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள், கொடுப்பனவுகள், சேமிப்புக்கள், கொடுகடன் மற்றும் காப்புறுதி - பூர்த்தி செய்வதற்காகப் பயன்மிக்கதும் தாங்கிக் கொள்ளக்கூடியதுமான நிதியியல் சாதனங்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்வதாகும்[1].

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணம் நிதியியல் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல், பயன்படுத்தல் மற்றும் அதன் தரம் என்பனவற்றின் கூறுகளை உள்ளடக்குகிறது. பெற்றுக்கொள்வதற்கான வசதி நாடொன்றின் அனைத்துத் தனிப்பட்டவர்களும் வியாபாரங்களும் நிதியியல் சாதனங்களையும் பணிகளையும் அணுகுவதற்கான வசதியைக் கொண்டிருப்பதாகும். நிதியியல் சாதனங்களையும் பணிகளையும் தொடர்பான ஆட்கள் பயன்படுத்தும் பொழுது அவர்களது வாழ்வாதாரத்தில் சாதகமான அபிவிருத்திகளை ஏற்படுத்துகின்றதன் மூலம் பயன்பாடு அடைந்து கொள்ளப்படுகின்றது. தரம் என்பதன் பொருள் நிதியியல் சாதனங்களும் சேவைகளும் வழங்குபவைகள் வாடிக்கையாளருக்கு பயன்மிக்கதாகவும் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும் அவர்களினால் தாங்கிக் கொள்ளக்கூடியதாகவும் இருப்பதாகும். தரமும் பொறுப்புக்கள் சாதனங்களும் பணிகளும் நீடித்துநிலைத்திருக்கும் விதத்தில் வழங்கப்படுவது என்பனவற்றின் கூறுகளை உள்ளடக்குகிறது.

## நிதியியல் வசதிக்குட்படுத்தலை அளவிடல்

நிதியியல் வசதிக்குட்படுத்தலை அளவிடுவதற்கு உலகளாவிய முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியொரு அளவிடல் முறை எதுவுமில்லை. "முறைசார்ந்த நிதியியல் நிறுவனங்களில் கணக்குகளைச் சொந்தமாக வைத்திருத்தல்" என்பது நிதியியல் வசதிக்குட்படுத்தலின் அடிப்படை அளவு முறையாகக் கருதப்படுகிறது[2]. எனினும், இது முறைசார்ந்த நிதியியல் பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கான அடையாளத்தினை மட்டுமே தருவதனால் இது ஒரு முழுமையான அளவு முறையல்ல. கொடுப்பனவு முறைமைகளின் பயன்பாடு, இணையத்தளம் மற்றும் தன்னியக்கக் கூற்றுப் பொறி போன்ற தொழில்நுட்பங்களின் பயன்பாடு மற்றும் கணக்குகளின்

அட்டவணை 1

| | நைஜீரியா | இலங்கை | பிலிப்பைன்ஸ் | தாய்லாந்து | மலேசியா |
|---|---|---|---|---|---|
| முறைசார்ந்த நிதியியல் நிறுவனமொன்றில் கணக்கொன்றை வைத்திருத்தல் (%) | 40 | 74 | 34 | 82 | 85 |
| முறைசார்ந்த நிதியியல் நிறுவனமொன்றில் பெண்கள் கணக்குகளை வைத்திருத்தல் (%) | 27 | 73 | 39 | 80 | 82 |
| கடந்த ஓராண்டு காலப்பகுதியில் எடுப்பனவு செய்யப்பட்டவை (%) | 79 | 48 | 72 | 70 | 70 |
| பட்டியல்களைச் செலுத்துவதற்கு இணையத்தளத்தின் பயன்பாடு (%) | - | 5 | 3 | 10 | 18 |
| பற்று அட்டைகளைச் சொந்தமாக வைத்திருப்பவர்கள் (%) | 4 | 32 | 21 | 61 | 74 |

எண்தொகைகள்: பின்டெக்ஸ் குளோபல் டேட்டா பேஸ் 2017

1. http://www.worldbank.org/en/topic/financialinclusion

2. குளோபல் பின்டெக்ஸ் தரவுத்தளம் 2017இல் கிடைக்கும்
3. https://globalfindex.worldbank.org/

பயன்பாடு போன்ற மற்றைய பல அளவு முறைகளையும் நிதியியல் வசதிக்குட்படுத்தலின் வேறுபட்ட அம்சங்களை அளவிடுவதற்குப் பரிசீலனையில் கொள்ளமுடியும். இலங்கை தொடர்பான நிதியியல் வசதிக்குட்படுத்தல் தரவுகள் நைஜீரியா மற்றும் சில பிராந்திய நாடுகளுடன் ஒப்பீட்டு அடிப்படையில் அட்டவணை 1[3]இல் தரப்பட்டுள்ளது.

வறியோருக்கு உதவுகின்ற ஆலோசனைக் குழுவின் படி, 2 பில்லியன் வயது வந்தோர் முறைசார்ந்த நிதியியல் நிறுவனமெதிலும்[4] கணக்கொன்றினை வைத்திருக்கவில்லை என மதிப்பிடப்பட்டிருக்கிறது. அனைத்து மக்களும் அவர்களது வருமானத்தினைக் கவனத்தில் கொள்ளாது நிதியியல் வசதிகளை அணுகத்தக்கதாக இருத்தல் வேண்டும் என்பது உலகளாவியரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேற்குறிப்பிட்ட 2 பில்லியன் மக்களும் முறைசாராத நிதியியல் பணிகளை வழங்குவோரின் நிதி மற்றும் பணிகளின் முறைசாரா மூலங்களை மாத்திரமே அணுகக்கூடியவர்களாக இருப்பது போதுமான தன்மையினைக் கொண்டிராததுடன் இடர்நேர்வுமிக்கதாகவும் செலவும் ஊகிக்க முடியாத தன்மைகளைக் கொண்டதாகவும் காணப்படுகிறது.

### நிதியியல் வசதிக்குட்படுத்தலின் நன்மைகள்

நிதியியல் முறைமையில் நிதியியல் ரீதியாக வெளியேயுள்ளவர்களை உள்ளடக்குவது உட்பட, பல்வேறு நன்மைகளும் காணப்படுகின்றன. முறையியல் சார்ந்த நிதியினை அணுகக்கூடியதாக இருப்பது, பாதுகாப்பாக வைத்திருப்பது தொடர்பான பிரச்சனைகளை நீக்கியிருப்பதுடன் வைப்பாளர்களுக்கான ஊக்குவிப்பொன்றாக வட்டியும் வழங்கப்படுகிறது. இது முறையியல் சார்ந்த நிதியியல் முறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பணத்தின் அளவினை அதிகரித்திருப்பதுடன் அதிகரித்த சேமிப்புகளுக்கும் முதலீடு மற்றும் நுகர்விற்கும் வழியமைத்திருக்கிறது. முறையியல் சார்ந்த நிதியியல் முறைமையின் அதிகரித்த பங்கேற்பு சேமிப்புக்கள், முதலீடுகள் மற்றும் நுகர்வு என்பனவற்றின் அதிகரித்த செல்வாக்கினூடாக நாணயக் கொள்கை சிறந்த முறையில் ஊடுகடத்தப்படுவதனை இயலுமைப்படுத்தும். மேலும், நிதியியல் வசதிக்குட்படுத்தல் பொருளாதாரச் செயலாற்றத்தினை மிகத் துல்லியமான முறையில் அளவிடுவதற்கு வழிவகுத்த சிறந்த பொருளாதாரத் தீர்மானங்களை இயலுமைப்படுத்துகின்றது. இவை இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டுக் கொள்கையுடன் ஒத்ததாகக் காணப்படுகிறது. மேலும், காசைக் குறைக்கின்ற கொடுக்கல்வாங்கல்களை ஊக்குவிப்பது காசு முகாமைத்துவத்தின் செலவினையும் நாணயத்தினை வெளியிடும் செலவினையும் குறைக்க வழிவகுக்கும்.

சிறிய வியாபாரங்களுக்கும் நுண்பாக தொழில்முயற்சிகளுக்கும் முறைசார்ந்த நிதியியல் அணுகுமுறையின் கிடைப்பனவு பொருளாதார நடவடிக்கைகளை, குறிப்பாக, கிராமிய பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்கிறது. வாடிக்கையாளரின் பக்கத்திலிருந்து நோக்குகையில், முறைசார்ந்த நிதியியல் கிடைப்பனவு நுகர்வினைச் சுமுகப்படுத்துவதற்கு வழிவகுப்பதுடன் நிதியியல் அதிர்வுகளின் தாக்கத்தினையும் தணிக்கிறது. மேலும், நிதியியல் வசதிக்குட்படுத்தல் வாடிக்கையாளர்கள் அவர்களது குடும்பங்களின் கல்வி மற்றும் நலத்தில் சிறந்த முதலீடுகளை மேற்கொள்ள இயலுமைப்படுத்துவதனால் அவை செலவினைக் குறைக்கிறது. இவ்வனைத்து நன்மைகளும் கிராமிய பொருளாதாரத்தின் எழுச்சிக்குப் பங்களித்து நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

### தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் முக்கியத்துவம்

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயங்களை உலக வங்கி "நடவடிக்கைகளின் வழிகாட்டல், தேசிய அல்லது துணைத் தேசிய மட்டங்களில் வரைவிலக்கணம் செய்கிறது. இதன், ஆர்வலர்கள் நிதியியல் வசதிக்குட்படுத்தல் குறிக்கோளினை எய்துவதற்கு முயற்சிப்பர்" என வரைவிலக்கணம் செய்கிறது[5].

தெளிவான உபாயங்களையும் இலக்குகளையும் வழங்குவதன் மூலம் நிதியியல் வசதிக்குட்படுத்தலை அதிகரிப்பதற்காகவும் இலக்குகளை அடைந்து கொள்வதில் ஒவ்வொரு ஆர்வலர்களினதும் பொறுப்புக்களைத் தெளிவாக வரையறுத்துக் கொள்வதற்காகவும் அதிகரிக்கின்ற நிதியியல் வசதிக்குட்படுத்தலையும் வேறுபட்ட ஆர்வலர்களின் நடவடிக்கைகளையும் இணைத்துக் கொள்வதற்கு தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் பயன்மிக்கதாக இருக்கும். தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் வரையறுக்கப்பட்டளவில் காணப்படும் வளங்களை முன்னுரிமைப்படுத்துவதற்கு உதவும். மேலும், தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் நிதியியல் வசதிக்குட்படுத்துவதனை அதிகரிப்பதில் அரச நிறுவனங்களுக்கும் தனியார் துறைக்குமிடையிலான ஒத்துழைப்பிற்கு வசதியளிக்கும்.

### நைஜீரியா தொடர்பான விபரங்கள்

நைஜீரியா ஆறு (6) சமஷ்டி அரசுகளை உள்ளடக்கி 923,768 சதுர கிலோமீற்றர் கொண்ட பரந்த நிலப்பரப்பினைக் கொண்டிருக்கிறது. தற்பொழுது இது ஆபிரிக்காவில் பாரிய பொருளாதாரத்தினைக் கொண்டிருப்பதுடன் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஏறத்தாழ ஐ.அ.டொலர் 405 பில்லியனாகவும் காணப்படுகின்றது[6]. எனினும், இதன் தலைக்குரிய வருமானம் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1969[7] ஆகக் காணப்படுகிறது. நைஜீரியாவின் பொருளாதாரம் பெருமளவிற்கு எண்ணெயில் தங்கியிருப்பதனால் உலகளாவிய எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 2015 இலிருந்து மொ.உ.உற்பத்தி கணிசமாக வீழ்ச்சியடைந்ததுடன் 2016இல் எதிர்க்கணியமான பொருளாதார வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2010இல் நைஜீரியா அதன் நிதியியல் வசதிக்குட்படுத்தல்

4. CGAP

5. http://www.worldbank.org/en/topic/financialinclusion/brief/national-financial-inclusion-strategies
6. https://data.worldbank.org/country/nigeria 2016இல் உள்ளவாறு
7. 2017, https://data.worldbank.org/indicator/NY.GDP.PCAP.CD

உபாயத்தினை வடிவமைக்கத் தொடங்கியது. வயது வந்த குடித்தொகையினரில் 64 சதவீதத்தினர் நிதியியல் ரீதியாக அதற்கு வெளியில் காணப்படுகின்றனர்[8].

**நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்**

நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் 2012இல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பிரதான குறிக்கோள் நிதியியல் வசதிகளுக்கு வெளியே இருப்பவர்களின் சதவீதத்தினை 2020 அளவில் முற்சொல்லப்பட்ட 2010இன் 64 சதவீதத்திலிருந்து 30 சதவீதத்திற்குக் குறைப்பதாகும். குறிப்பாக, நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் நிதியியலுக்கு வெளியே இருப்பதற்கான கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் காரணங்களைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சிக்கிறது.

அ) குறைந்த வருமானம்

ஆ) அணுகும் மையங்களுக்கான நீண்ட தூரம்

இ) நிதியியல் பணிகள் தொடர்பான போதுமான அறிவின்மை

ஈ) நிதியியல் பணிகளைப் பயன்படுத்துவதில் காணப்படும் தொந்தரவான தேவைப்பாடுகள்

நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் நிதியியல் வசதிக்குட்படுத்தலைப் பின்வருமாறு வரைவிலக்கணம் செய்கிறது "வயது வந்தவர்களின் தேவைக்கிணங்க வடிவமைக்கப்பட்ட பரந்தளவிலான நிதியியல் சாதனங்களை தாங்கக்கூடிய செலவுகளில் அவர்கள் அடைந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் பொழுதே நிதியியல் வசதிக்குட்படுத்தல் அடையப்படுகிறது. இச்சாதனங்கள் கொடுப்பனவுகள், சேமிப்புக்கள், கொடுகடன், காப்புறுதி மற்றும் ஓய்வூதியம் என்பனவற்றை உள்ளடக்குகிறது."

நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் கொடுப்பனவுகள், சேமிப்புக்கள், கொடுகடன், காப்புறுதி மற்றும் ஓய்வூதியம் போன்ற அடையாளம் காணப்பட்ட பிரதான சாதனங்களின் நுழைவினை அதிகரிப்பதற்கான வெள்ளை அறிக்கையொன்றினை வழங்கியுள்ளது. குறிப்பாக, இது பின்வருவனவற்றை அதிகரிப்பதற்கான உபாயத்தினை வழங்குகின்றது.

அ) முறைசார்ந்த நிதியியல் நிறுவனங்களில் சேமிப்புக்கள்

ஆ) கொடுப்பனவுப் பணிகளைப் பயன்படுத்துதல்

இ) முறைசார்ந்த நிதியியல் நிறுவனங்களிலிருந்து கொடுகடன்களைப் பெற்றுக்கொள்ளல்

ஈ) காப்புறுதியின் நுழைவு

உ) ஓய்வூதியங்களின் நுழைவு

ஊ) வங்கிக் கிளைகள் மற்றும் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் நுழைவு

எ) விற்பனை மைய எந்திரங்களின் நுழைவு

ஏ) செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் முகவர்கள்

மேலும், நைஜீரிய தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம், அனைத்தையுமுள்ளடக்கிய வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினையும் தேசிய நிதியியல் அறிவுக் கட்டமைப்பொன்றினையும் உருவாக்குவதற்கு எதிர்பார்க்கிறது. மேலும், இது உங்கள் வாடிக்கையாளர்களைச் சிறந்த முறையில் தெரிந்து கொள்வதனை இயலுமைப்படுத்துவதற்காக அனைத்து வயது வந்தவர்களுக்கும் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது.

இலங்கை, உலக வங்கிக் குழுமத்தின் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை வடிவமைக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதனால் நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதில் நைஜீரியாவின் உபாயம் பயன்மிக்கதாக இருக்கும்.

**நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை**

நைஜீரியா டிஜிட்டல் நிதியியல் பணிகளை பயன்படுத்துவதனை ஊக்குவிக்கின்ற கொள்கையொன்றினை நடைமுறைப்படுத்துகின்றது. நைஜீரியாவில் டிஜிட்டல் நிதியியல் பணிகளைப் பயன்படுத்துகின்ற முக்கிய மார்க்கமாக முகவர் வங்கித்தொழில் விளங்குகிறது. நைஜீரியா தற்பொழுது வங்கிகளினால் வழிநடத்தப்படும் மாதிரியொன்றினைப் பின்பற்றுகின்றது. டிஜிட்டல் நிதியியல் பணிகளின் பயன்பாட்டினை ஊக்குவிக்கின்ற இவ்வணுகுமுறையுடன் ஒத்துச்செல்கின்ற விதத்தில் நைஜீரிய மத்திய வங்கி காசில்லா கொள்கையொன்றினைப் பின்பற்றி வருகிறது.

காசில்லா கொள்கையின் காரணமாக தோன்றக்கூடிய தனிப்பட்ட தகவல் இரகசியத்தன்மைகள் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக, நைஜீரியா இலத்திரனியல் மோசடி அமைப்பு ஒன்றினை உருவாக்கியிருக்கிறது. இவ்வமைப்பினூடாக நிதியியல் நிறுவனங்கள் மோசடியினால் ஏற்படும் இழப்புக்களைத் தடுப்பதற்கும் அத்துடன்/ அல்லது மட்டுப்படுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதனை இயலுமைப்படுத்துகின்ற விதத்தில், வங்கிகள் மற்றும் பணிகளை வழங்குவோரிடையே மோசடி தரவுகளை/ தகவல்களை முன்கூட்டியே பகிர்ந்து கொள்கின்றன. மேலும், இந்த அமைப்பு பல்வேறுபட்ட இலத்திரனியல் மோசடி பிரச்சனைகள் மற்றும் போக்குகள் பற்றி (உள்நாட்டு ரீதியாகவும் உலகளாவிய ரீதியாகவும்) அனைத்து வங்கிகள் மற்றும் ஆர்வலர்களுக்கு அறிவூட்டவும் தகவலளிப்பதற்கும் உதவுகிறது. உபாய ரீதியாக அமைப்பானது இசைவானதும் காத்திரமானதுமான மோசடி மற்றும் இடர்நேர்வு முகாமைத்து உபாயங்களை வடிவமைப்பதில் உதவுவதுடன் தொழில் துறையின் சார்பில் இ-கொடுப்பனவு பாதுகாப்பு தொடர்பில் முக்கியமான தேவைப்பாடுகளையும் வரைவிலக்கணம் செய்கிறது.

8. https://www.cbn.gov.ng/Out/2012/publications/reports/dfd/CBN-Summary%20Report%20of-Financial%20Inclusion%20in%20Nigeria-final.pdf

நைஜீரிய மத்திய வங்கி அடுக்குமுறைப்படுத்தப்பட்ட உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் தேவைப்பாட்டினை அறிமுகப்படுத்தியது. இதில் தொந்தரவுகள் குறைவான உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளும் தேவைப்பாடுகள் அடுக்கு 1 மற்றும் அடுக்கு 2 வாடிக்கையாளர்களுக்காகக் கட்டுப்பாடுகளுடன் கூடிய விதத்தில் விதிக்கப்பட்டன. இது உச்சப்படுத்தப்பட்ட நிலுவைகள், கொடுக்கல்வாங்கல்களின் ஒன்றுசேர்ந்த பெறுமதி, அத்துடன்/ அல்லது நிதியினை அணுகுவதற்கான மார்க்கங்கள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

நைஜீரியா தேசிய நிதியியல் அறிவூட்டல் கட்டமைப்பொன்றினை பின்பற்றுகின்றது. நைஜீரியா தேசிய நிதியியல் அறிவூட்டல் கட்டமைப்பு, பல்வேறுபட்ட வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு நிதியியல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்காக பல் ஆர்வலர் அணுகுமுறையொன்றினைத் தெளிவுபடுத்துகிறது. தேசிய நிதியியல் அறிவூட்டல் கட்டமைப்பின் கீழ், நுகர்வோர் விழிப்புணர்வு கல்வியறிவு, வெளியீடுகள், நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், வாடிக்கையாளர் உரிமைகள், மசோதாவின் சட்டவாக்கம், வேளாண்மையாளர், பெண்கள் போன்ற பிரிவினருக்கான இலக்கிடப்பட்ட நிதியியல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பள்ளிக்கூடப் பாடவிதானத்தில் நிதியியல் கல்வியை உள்ளடக்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான உபாயத்தினை உருவாக்குவதற்காக 2016இல் நைஜீரிய மத்திய வங்கி வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்றினை நிறுவியது. குறிப்பாக, இது, வாடிக்கையாளர்களை மோசடி மற்றும் தொந்தரவுகளிலிருந்து பாதுகாத்தல், முறைப்பாடுகளைக் கையாள்வதனையும் பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதனையும் மேம்படுத்துதல், நிதியியல் நிறுவனங்களிடையேயான வாடிக்கையாளர் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை அதிகரித்தல், சிறந்த நிதியியல் தீர்மானங்களை எடுப்பதற்கு வாடிக்கையாளர்களுக்கு வலுவளித்தல் மற்றும் வாடிக்கையாளர்களின் உரிமைகளையும் பொறுப்புக்களையும் வலுப்படுத்தல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்டிருந்தது.

நைஜீரியா நுண்பாக காப்புறுதி, செல்லிடத் தொலைபேசி காப்புறுதி மற்றும் வங்கி உத்தரவாதம் என்பனவற்றினை ஊக்குவிப்பதனூடாகக் காப்புறுதித் துறையின் நுழைவினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

நுண்பாக, காப்புறுதி சமூகத்தில் குறைந்த வருமானமுடைய மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரிடையே காப்புறுதி நுழைவினை அதிகரிப்பதற்கு உதவுகின்ற வேளையில், செல்லிடக் காப்புறுதியானது காப்புறுதிச் சாதனங்கள் சிறந்த முறையில் அணுகுவதனை இயலுமைப்படுத்துகிறது. “வங்கி உத்தரவாதம்” என்பது காப்புறுதிக் கம்பனிகள் அவற்றின் காப்புறுதிச் சாதனங்களை விற்பதற்கு வங்கிகளுடன் பங்கேற்றுக் கொள்வதாகும். நைஜீரியாவில் வங்கித்தொழில் வலையமைப்பு காப்புறுதி வலையமைப்பிலும் பார்க்கப் பரந்தளவில் காணப்படுகின்றது. ஆகவே, “வங்கி உத்தரவாதத்தின்” நோக்கம் யாதெனில் தற்பொழுதுள்ள வங்கித்தொழில் வலையமைப்பினை காப்புறுதிச் சாதனங்களுக்காக, காப்புறுதியை அணுகத்தக்க வசதிகளை அதிகரிப்பதற்குப் பயன்படுத்திக் கொள்வதேயாகும்.

மேலும், நைஜீரியா மெலின்டா அன்ட் கேட் பவுண்டேசனின் உதவியுடன் அணுகும் மையங்களின் பரம்பலைக் காட்டுகின்ற அணுகும் மையங்களின் புவியியல் பரப்பு தேசப்படத்தினைத் தயாரிப்பது தொடர்பில் ஈடுபட்டது. இது நைஜீரியா குறைந்த அல்லது அணுகுமையங்கள் இல்லாத பிரதேசங்களை

அட்டவணை 2

| அளவிடல் | அளவிடல் அலகு | 2010 அடிப்படை | 2020 இலக்கு | 2016 உண்மை |
|---|---|---|---|---|
| வயது வந்த குடித்தொகையினரின் சதவீதம் (%) | முறைசார்ந்த நிதியியல் நிறுவனங்களில் கணக்குகளை வைத்திருப்பது | 36 | 70 | 48 |
| | முறைசார்ந்த நிதியியல் நிறுவனங்களில் சேமித்தல் | 24 | 60 | 28 |
| | ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களிலிருந்து கடன்படுதலை மீண்டும் செலுத்துதல் | 2 | 40 | 1.8 |
| | ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட காப்புறுதிப் பூட்கைகளினால் பாதுகாக்கப்பட்டவை | 1 | 40 | 1.8 |
| | ஒழுங்குமுறைப்படுத்தப் ஓய்வூய்தித் திட்டத்துடன் பதிவுசெய்யப்பட்டவை | 5 | 40 | 8 |
| | தேசிய அடையாள இலக்கமொன்றினை வைத்திருப்பவை | 0 | 100 | 15.1 |
| ஒவ்வொரு 100,000 வயது வந்தவர்களுக்குமான அலகு | வர்த்தக வங்கிக் கிளைகள் | 6.8 | 7.6 | 5.6 |
| | தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் | 11.8 | 59.6 | 18 |
| | விற்பனை மைய சாதனங்கள் | 13.2 | 381.7 | 116.3 |
| | செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் முகவர் | 0 | 62 | 18.8 |

நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை நடைமுறைப்படுத்தும் ஆண்டறிக்கை 2016 இன்படி வழங்கப்பட்ட தரவுகள், சில தரவுகள் மேலேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள பின்டெக்ஸ் 2017 எண்தொகைகளிலிருந்து வேறுபட்ட போதும் தொடர்ச்சியான தன்மையினைப் பேணுவதற்காக ஆண்டறிக்கையிலுள்ள தரவுகள் பயன்படுத்தப்பட்டன.

அடையாளம் காண்பதனை இயலுமைப்படுத்தியதுடன் அத்தகைய பிரதேசங்களின் அணுகும் தன்மையினை அதிகரிப்பதற்கும் இயலுமைப்படுத்தியது. மேலும், ஒவ்வொரு அணுகுமையங்களினதும் செயற்பாடுகளும் அளவிடப்படுகின்றன.

**தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடைமுறைப்படுத்தலில் காணப்பட்ட முன்னேற்றம்**

2016இல் உள்ளவாறு, இதன் நிதியியல் வசதிக்குட்படுத்தல் இலக்குகளில் அடையப்பட்ட முன்னேற்றம் மேலேயுள்ள அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளது.

நைஜீரியா 2016 இற்கான நிர்ணயிக்கப்பட்ட பெரும்பாலான இலக்குகளை எய்துவதில் மிகப் பின்தங்கிய நிலையில் காணப்படுவதுடன் இது 2020 இற்கான இலக்குகளை எய்துவதில் காணப்படும் சவால்களை வெளிப்படையாகக் காட்டுகிறது. இது நைஜீரியா அதன் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை மீளாய்வு செய்வதற்கு தூண்டியது[9].

**நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினைக் கண்காணித்தல் மற்றும் இணைத்தல்**

நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினைக் கண்காணிப்பதும் இணைப்புச் செய்வதும் நைஜீரிய மத்திய வங்கியின் நிதியியல் வசதிக்குட்படுத்தல் செயலகத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. இது நைஜீரிய மத்திய வங்கியின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. நிதியியல் வசதிக்குட்படுத்தல் செயலகத்திடம் ஆர்வலர்களின் நடவடிக்கைகளை இணைத்தல், இலக்குகளை விரைவுபடுத்தல் மற்றும் சாதனைகளைக் கண்காணித்தல் தரவுகளை ஒன்றுதிரட்டிப் பேணுதல், ஆண்டறிக்கைகளை வெளியிடுதல், ஆர்வலர்களின் இயலளவினைக் கட்டியெழுப்புதல் மற்றும் கீழே விபரிக்கப்பட்டுள்ள குழுக்களுக்குச் செயலாளராகத் தொழிற்படுதல் ஆகிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் வழிகாட்டல் குழு**

இக்குழுவானது நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள உயர்ந்ததொரு குழுவாகும். இது தேசிய மட்டத்தில் நைஜீரியா தேசிய பொருளாதார ஆணைக்குழுவிற்கு அறிக்கையளிக்கிறது. குழுவிற்கு நைஜீரிய மத்திய வங்கியின் ஆளுநர் தலைமை வகிப்பதுடன் தொடர்பான முகவர்கள் ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மற்றும் கைத்தொழில் சங்கங்களின் தலைவர்களை உள்ளடக்கியிருக்கும்.

குழுவானது ஆண்டிற்கு இரு தடவைகள் கூடுவதுடன், இதனிடம், கொள்கைத் தீர்மானங்களை எடுத்தல், அனைத்து தொடர்பான ஆர்வலர்களிடமிருந்தும் உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்ளல், நிதியியல் வசதிக்குட்படுத்தலை அதிகரிக்கும் விதத்தில் கட்டமைப்புக்களை மேலோட்டமாகத் தயாரித்தல் மற்றும் செயற்றிட்டத்திற்கு உயர்ந்தளவிலான வலுவான கடப்பாடுகளைக் கொண்டிருத்தல் என்பன உட்பட நிதியியல் தொழில் துறைக்காக நிதியியல் வசதிக்குட்படுத்தல் கொள்கைப் பணிப்புரைகளை வழங்குவதற்கான பொறுப்பாணை வழங்கப்பட்டிருக்கிறது.

**தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் தொழில்நுட்பக் குழு**

தொழில்நுட்பக் குழு, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது. இக்குழுவிற்கு நைஜீரிய மத்திய வங்கியின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்குப் பொறுப்பான துணை ஆளுநர் தலைமை தாங்குவதுடன் நைஜீரிய மத்திய வங்கியின் தொடர்பான திணைக்களத்தின் பணிப்பாளர்களும் அதேபோன்று பணிப்பாளர்கள்/ சமமானவர்கள் தொடர்பான முகவர்கள்/ ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மற்றும் கைத்தொழில் சங்கங்களிலுள்ள அதற்கு இணையாளர்களும் உள்ளடங்கியிருப்பர்.

குழுவானது காலாண்டு அடிப்படையில் கூடுவதுடன் கொள்கைத் தீர்மானங்கள் தொடர்பில் வழிகாட்டல் குழுவிற்கு மதியுரைச் சபையாகவும் பணியாற்றுகிறது. மேலும், வழிகாட்டல் குழுவின் கொள்கைத் தீர்மானங்களுக்கு ஆதரவளிப்பதற்காக நடைமுறைப்படுத்தல் நிலைமை தொடர்பில் வழிகாட்டல் குழுவிற்கு அறிக்கை வழங்குவதற்கும் பொறுப்பானதாகும்.

**தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் தொழிற்பாட்டுக் குழுமங்கள்**

மேற்குறிப்பிட்ட இரண்டு குழுக்களுக்குப் புறம்பாக, குறிப்பிட்ட முக்கிய துறைகளிலுள்ள தலையீடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக நான்கு (4) தொழிற்பாட்டுக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அ) வழிப்படுத்துகின்ற தொழிற்பாட்டுக் குழு - நிதியியல் அணுகும் மையங்கள் மற்றும் நாடு முழுவதிலும் அவை பரவியுள்ள தன்மை தொடர்பான நடைமுறைப்படுத்தல் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துதல்

ஆ) நிதியியல் அறிவு தொடர்பான தொழிற்பாட்டுக் குழுமம் - நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளுடன் இணைந்து காணப்படும் கோட்பாடுகளையும் இடர்நேர்வுகளையும் வாடிக்கையாளர் விளங்கிக் கொள்வதனை மேம்படுத்தும் பொருட்டு அவர்களின் நிதியியல் இயலாற்றலை வலியுறுத்துதல்.

இ) சாதனங்கள் தொழிற்பாட்டுக் குழுமம் - நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளின் நடைமுறைப்படுத்தல் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தல்.

ஈ) சிறப்பு தலையீட்டுத் தொழிற்பாட்டுக் குழுமம் - நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளை பெண்கள், இளைஞர் மற்றும் உடல் ஊனமுற்றவர்கள் பெற்றுக்கொள்வதனை அதிகரிக்கும் பொருட்டு அவர்கள் தொடர்பான நடைமுறைப்படுத்தல் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துதல்

தொழிற்பாட்டுக் குழுமம் விசேட ஈடுபாடு கொண்ட துறைகள் தொடர்பில் தொழில்நுட்பக் குழுவிற்கு காலாண்டு அறிக்கைகளை அளிக்கும்.

9. https://independent.ng/financial-inclusion-cbn-begins-review-of-nfis/

**தேசிய நிதியியல் வசதிகளுக்குட்படுத்தல் உபாயத்திலிருந்து கற்றுக்கொள்ளப்படவுள்ள பாடங்கள்**

1. **யதார்த்தமானதும் அடைந்து கொள்ளக்கூடியதுமான இலக்குகளை நிர்ணயித்தல்**

நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தில் நிர்ணயிக்கப்படுகின்ற இலக்குகள் மிகுந்த பேரார்வம் கொண்டனவாகவும் 2020இல் அடைய முடியாதனவாகவும் இருக்கக்கூடும். தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் இலக்குகள் நடைமுறை நிதியியல் வசதிக்குட்படுத்தல் நிலைமையின் அனைத்தையுமுள்ளடக்கிய அடிப்படை அளவீட்டினையும் சூழ்நிலையினை மேம்படுத்துவதற்கான தொடர்பான ஆர்வலர்களின் இயலாற்றலையும் மூலவளங்களையும் எப்பொழுதும் அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். ஆகவே அனைத்துத் தொடர்பான ஆர்வலர்களுடனுமான ஆர்வம்மிக்க ஆலோசனைச் செயன்முறைகளின் பின்னர் மாத்திரமே இலக்குகள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். மேலும், எந்தவொரு தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய இலக்குகளும் காலக் கட்டமைப்புடன் கூடியனவாகவும் யதார்த்தமானவையாகவும் அடைந்து கொள்ளக்கூடியனவாகவும் இருத்தல் வேண்டும்.

2. **நிதியியல் வசதிக்குட்படுத்தல்/ பயன்படுத்தலை அதிகரிப்பதற்காக, டிஜிட்டல் நிதி/ காசில்லா நிதிகளின் பயன்பாட்டிற்கு முன்னுரிமை வழங்கல்**

அட்டவணை 1இல் கிடைக்கத்தக்கதாகவுள்ள தரவுகளின்படி, நைஜீரியா இலங்கை ஏற்கனவே அடைந்து கொண்ட 74 சதவீதம் கொண்ட கணக்கு உடமைக்கு மாறாக 40 சதவீதமான கணக்குடமையினையே கொண்டிருந்தது. எனினும், இலங்கை சில நிதியியல் சேவைத் துறைகளில் குறைந்த பயன்பாட்டினைக் காட்டியதுடன் அத்துறைகளில் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு தொடர்பில் காணப்பட்ட பிரச்சனைகள் அப்பணிகளின் தரத்தினைப் பாதித்தன. எனவே, இலங்கையில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை அதிகரிப்பதற்கான உந்துதல் பயன்பாட்டினையும் தரத்தினையும் அதிகரிப்பதன் மீது இருத்தல் வேண்டும். அதேவேளையில், கணக்கு உடமையினை (தற்பொழுது 26 சதவீதத்தினர் வெளியே இருக்கின்றனர்) மேலும் அதிகரிப்பதற்கு முயற்சித்தல் வேண்டும்.

இது நிதியியல் வசதிக்குட்படுத்தல், நிதியியல் வசதிக்கு வெளியில் இருத்தல், (நிதியியல் ரீதியாக 18 சதவீதத்தினர் வெளியில் இருக்கும் தன்மை) குறைந்த பயன்பாடு, நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேலும் அதிகரிப்பதற்குப் பொருத்தமான முறைகளை மேம்படுத்துதல், பயன்பாட்டினை அதிகரித்தல் ஆகியவற்றிற்கான காரணங்களைக் கண்டறிவதற்காகப் பொருத்தமான காரணி நிர்ணய அளவீடொன்றினை நடத்துதல் வேண்டுமென விதந்துரைக்கப்படுகிறது. மேலும், கடுமையான நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் அதிகரித்த வாடிக்கையாளர் விழிப்புணர்வு என்பனவற்றினூடாக நிதியியல் பணிகளின் தரத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும்.

3. **நைஜீரியாவின் கண்காணிப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் கட்டமைப்பினைப் பின்பற்றுதல்**

நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் மிகவும் வரவேற்கத்தக்க கூறு யாதெனில் அதன் நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு கட்டமைப்பேயாகும். நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினூடாக நைஜீரிய மத்திய வங்கி கண்காணிப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் செய்முறையினை முனைப்புடன் மேற்கொண்டு வருகின்றது. நடைமுறைப்படுத்தல் செயன்முறை வழிகாட்டல் குழுவினூடாகவும் தொழில்நுட்பக் குழுவினூடாகவும் தொடர்ச்சியாக மதிப்பிடப்படுகின்ற வேளையில் விசேட கவனம் தேவைப்படும் துறைகளை தொழிற்பாட்டுக் குழுக்கள் கவனித்துக் கொள்கின்றன.

இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்திற்கும் இதே போன்ற நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்புக் கட்டமைப்பொன்றினைப் பின்பற்ற வேண்டுமென ஆலோசனை வழங்கப்படுகிறது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கண்காணிப்பினை இலங்கை மத்திய வங்கியினால் நிறுவப்படும் பிரத்தியேகமான அலகொன்றினூடாக மேற்கொள்ளுதல் வேண்டும். தொடர்பான ஆர்வலர்களை உள்ளடக்குவதன் மூலம் வழிகாட்டல் குழு, தொழில்நுட்பக் குழு மற்றும் தொழிற்பாட்டுக் குழுக் கட்டமைப்பு பின்பற்றப்படுதல் வேண்டும்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் வழிகாட்டல் குழுவின் தலைவராக இருத்தல் வேண்டும். தொழில்நுட்பக் குழு மற்றும் தொழிற்பாட்டுக் குழுக்களின் கூட்டங்களுக்கு இலங்கை மத்திய வங்கியிலிருந்தான பிரதிநிதிகள் தலைமை தாங்குதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கி நிகழ்ச்சிநிரல்களையும் கூட்டக் குறிப்புக்களையும் தயாரித்தல் வேண்டும். கூட்டத்திலும் பொறுப்பான தரப்பினர்களினாலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கூட்டங்களில் பதிவுசெய்யப்பட்டு அலகினால் பின்பற்றப்படுதல் வேண்டும். வழமையான அஞ்சல் தொடர்பூட்டல்களை நாடாமல் ஆர்வலர்களைத் தொடர்பு கொள்வதற்கு மின்னஞ்சல் போன்ற விரைவான தொடர்பூட்டல் முறைகளைப் பின்பற்ற வேண்டுமென யோசனை தெரிவிக்கப்படுகிறது.

நைஜீரிய நடைமுறைப்படுத்தல் கட்டமைப்பிலுள்ள ஒரு குறைபாடு யாதெனில் ஒரே பிரதிநிதிகள் தொழில்நுட்பக் குழு மற்றும் தொழிற்பாட்டுக் குழுக்களின் அனைத்துக் கூட்டங்களிலும் பங்கேற்காமையாகும். ஆகவே, இலங்கையிலுள்ள ஒவ்வொரு பங்குடமையாளரும் நிரந்தர பிரதிநிதிகளையும் மாற்றுப் பிரதிநிதிகளையும் நியமிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படல் வேண்டும். இது ஒரே ஆள்/ ஆட்கள் தொடர்ச்சியாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதனை உறுதிப்படுத்தும்.

4. **ஒவ்வொரு ஒழுங்குமுறைப்படுத்துநரும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய நடவடிக்கைகளில் அவற்றின் சொந்த உபாயங்களின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டுமென்பதுடன் இதற்காக வரவு செலவுத்திட்ட ஒதுக்குகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்**

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினைப் பின்பற்றுவதற்கு ஆர்வலர்கள் இணங்குவது மட்டும்

போதாது. அவர்கள், அவர்களது உபாயத் திட்டங்களின் கீழ் தொடர்பான நடவடிக்கைகளை உள்ளடக்கிக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அதற்குத் தேவையான வரவு செலவுத்திட்ட ஒதுக்குகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். நைஜீரியா இச்செயன்முறையினைப் பின்பற்றுகின்ற போதும் அங்கு ஆர்வலர்கள் வரவு செலவுத்திட்டத் தடைகளை எதிர்நோக்குகின்றனர். நைஜீரியாவில் ஒவ்வொரு ஒழுங்குமுறைப்படுத்துநரினதும் உபாயத்திட்டங்களும் வரவு செலவுத்திட்ட ஒதுக்குகளும் இறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னதாக வழிகாட்டல் குழு மட்டத்தில் ஆராயப்படுகின்றன.

ஆகவே, இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினைப் பின்பற்றும் பொழுது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தில் ஒவ்வொரு ஆர்வலர்களும் இதன் உபாயத் திட்டங்களின் கீழ் அதன் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய நடவடிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதையும் அத்தகைய நடவடிக்கைகளுக்காக ஒவ்வோராண்டும் போதுமான வரவு செலவுத்திட்ட ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினையும் உறுதிப்படுத்துவதற்காகப் பொறிமுறையொன்று உருவாக்கப்படுதல் வேண்டும்.

### 5. தொடர்பான தரவுத் தளத்துடன் அணுகும் மையங்களின் டிஜிட்டல் தேசப்படமொன்றினைத் தயாரித்தல்

இலங்கை அணுகும் மையங்களின் டிஜிட்டல் தேசப்படமொன்றினைத் தயாரிப்பதற்கு விதந்துரைக்கப்படுகிறது. ஆராய்ச்சியாளர்களினூடாகத் தெளிவான தகவல்களைப் பெறக்கூடியதாக இருக்குமிடத்து ஒன்றுடனொன்று செயற்படும் தரவுத் தளமொன்றினை இணைப்பதன் மூலம் இலங்கை தேசப்படத்தினை மேலும் அபிவிருத்தி செய்யலாம். இது நிதியியல் பணிகளுக்கான அதிகரித்த அணுகு மையங்களும் டிஜிட்டல் நிதியியல் சாதனங்களும் தேவைப்படும் பிரதேசங்களை விரைவாக அடையாளம் காணுவதனை இயலச்செய்யும். மேலும், தரவுத் தளத்தினை தொடர்ச்சியாக இற்றைப்படுத்துவதற்குப் பொறிமுறையொன்றும் நிறுவப்படுதல் வேண்டும்.

### 6. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான நிதியமொன்றினை நிறுவுதல்

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை நடைமுறைப்படுத்தும் பொழுது நைஜீரியாவினால் எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகளிலொன்று நிதியிடல் போதுமானளவில் இல்லாதிருந்தமையாகும். நைஜீரியா, நைஜீரிய மத்திய வங்கியின் கீழ் நிதியமொன்றினை நிறுவியிருப்பதுடன் இதனூடாகத் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடவடிக்கைகள் சிலவற்றிற்கு நிதியிடுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் கீழ் இதே போன்ற நிதியமொன்று நிறுவப்பட வேண்டுமென விதந்துரைக்கப்படுகிறது. இந்நிதியமானது அரசாங்கம், கொடையாளர்களின் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பனவற்றிடமிருந்து பெறப்பட்ட நிதிகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இது அரச நிதியிடல்களைப் பெறாத உதாரணமாக கல்வி பாடவிதானத்தில் நிதியியல் அறிவுக் கல்வியை உள்ளடக்குதல் தொடர்பில் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கீழ் குறிப்பிட்ட சிறப்பு நடவடிக்கைகளுக்கு நிதியிடுவதனை இயலச்செய்யும். மேலும், இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக விரைந்த நடவடிக்கைகள் தேவைப்படும் பொழுது அவசரகால நிதியினை வழங்குவதற்கு இந்நிதியம் மத்திய வங்கியை இயலச்செய்யும்.

### 7. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்துவதற்கான ஆண்டு இலக்குகளை நிர்ணயித்தல்

நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தும் உபாயம் தொடர்பில் ஆண்டு இலக்குகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆண்டு இலக்குகளை நிர்ணயிக்காமல், இறுதி இலக்குகளை எய்துவதனை நோக்கி முன்னேறுவதனைச் சரியான முறையில் கண்காணிக்க முடியாது. இது விரும்பத்தக்க இலக்குகளிலிருந்து விலகுகின்ற சந்தர்ப்பத்தில் எடுக்கப்படுகின்ற பொருத்தமான சரியான நடவடிக்கைகளைத் தடுத்துவிடும். நிதியியல் வசதிக்குட்படுத்துவதில் 70 சதவீதமான நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நோக்கிப் பயணித்தல் கணிசமான முன்னேற்றத்தினைத் தவறவிட்டமைக்கான காரணங்களிலொன்றாக இதனைக் கருதமுடியும்

ஆகவே, இலங்கைக்கு நிதியியல் வசதிக்குட்படுத்துவதனை அளவிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு அளவிடல் அலகிற்குமான ஆண்டு இலக்குகளை நிர்ணயிப்பதற்கும் தொடர்பான ஆர்வலர்கள் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எய்துவதனை உறுதிப்படுத்துவதற்கும் வழிகாட்டல் குழுவொன்றினை ஏற்படுத்துவதற்கும் விதந்துரைக்கப்பட்டுள்ளது. இலக்குகளை எய்துவது தொடர்பில் முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்கு வலுவான செயன்முறையொன்று இருத்தல் வேண்டும்.

### 8. நிதியியல் அறிவுக் கட்டமைப்பொன்றினை உருவாக்குதல் மற்றும் பாடசாலை பாடவிதானத்தில் நிதியியல் கல்வியை உள்ளடக்குதல்

தற்பொழுது, இலங்கை மத்திய வங்கி, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதிச் சபை போன்ற வேறுபட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் சபைகள் பல்வேறுபட்ட நிதியியல் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. இலங்கை தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் ஒரு பகுதியாக இலங்கை தேசிய நிதியியல் கல்வியறிவுக் கட்டமைப்பு நிறுவப்படுதல் வேண்டும். இதன் கீழ், ஒவ்வொரு ஆர்வலர்களும் அவர்களது சொந்த நிதியியல் கல்வி அறிவு நிகழ்ச்சித்திட்டத்தினை உருவாக்கிக் கொள்ள முடியும். நைஜீரியாவில் மேற்கொள்ளப்பட்டதனைப் போன்று பல்கலைக்கழகங்களின் மாணவர்கள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்பயிற்சி நிறுவனங்கள் என்பனவற்றிற்கு நிதியியல் கல்வியில் வளவாளர்களாகுவதற்கு பயிற்சியளிக்கப்படுதல் வேண்டும்.

நிதியியல் விழிப்புணர்வில் அவதானிக்கப்பட்ட மற்றொரு விடயம் யாதெனில் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களின் தாக்கம்

அளவிடப்படுதல் வேண்டுமென்பதாகும். இதனை நிதியியல் விழிப்புணர்வு/ கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் தாக்கத்தினைக் காலாந்தர அடிப்படையில் மதிப்பிடுவதனூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

நிதியியல் கல்வி, பள்ளிக்கூடப் பாடவிதானத்தின் ஒரு பகுதியாக்கப்படுதல் வேண்டும். ஏற்கனவேயுள்ள பாடங்களுடன் நிதியியல் கல்வி அறிவு தொடர்பான விடயங்களை உள்ளடக்குவதற்கு நைஜீரியா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதையொத்த நிதியியல் கல்வி முறையினை தற்போதுள்ள பாடங்களுடன் ஆரம்ப மற்றும் இரண்டாந்தரக் கல்வி மட்டங்களில் உள்ளடக்கப்பட வேண்டும் என விதந்துரைக்கப்படுகிறது.

**9. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் ஒரு பகுதியாக அனைத்தையுமுள்ளடக்கிய வாடிக்கையாளர் பாதுகாப்புச் சட்டத்தினை உருவாக்குதல்**

தற்பொழுது இலங்கையில், ஒவ்வொரு ஒழுங்குமுறைப்படுத்துநரும் தத்தமது ஒழுங்குமுறைப்படுத்தல் செயற்பரப்பிற்குள் நிதியியல் வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பது தொடர்பில் ஒழுங்குவிதிகளை விடுப்பதற்கு, வேறுபட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளையும் இயலுமைப்படுத்தும் விதத்தில் பல்வேறு சட்டங்கள் காணப்படுகின்றன. எனினும் முன்மதியல்லா ஒழுங்குவிதிகள் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பில் நேரடியான பொறுப்பாணைகள் போதுமானளவில் இல்லாமை என்பனவற்றிலும் பார்க்க முன்மதியுடை ஒழுங்குவிதிகள் போன்ற காரணங்களில் கவனம் செலுத்தப்படுவது ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பில் பலயீனமான தன்மையினைக் கொண்டிருப்பதற்கு வழிவகுத்திருக்கிறது. ஆகேவ, நிதியியல் வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்குத் தெளிவான பொறுப்பாணையுடனும் அனைத்தையுமுள்ளடக்கிய அதிகாரத்துடனும் கூடிய விதத்தில் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பினை இயலுமைப்படுத்தும் வலுவூட்டப்பட்ட அர்ப்பணிப்பினைக் கொண்ட அதிகாரசபையொன்றினை ஏற்படுத்தும் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புச் சட்டமொன்று அவசியமானதாகும்.

**10. காப்புறுதிச் சாதனங்களை அதிகரித்தளவில் அணுகுவதில் நைஜீரியாவின் உபாயங்களைப் பின்பற்றுதல்**

தற்பொழுது, இலங்கையில் கட்டாயமற்ற காப்புறுதிகளின் பயன்பாடு குறைவாகும். ஆகவே, காப்புறுதியின் பயன்பாட்டினை அதிகரிப்பதற்கு நைஜீரியாவினால் பயன்படுத்தப்பட்ட மார்க்கங்களைப் பயன்படுத்துவதற்கு விதந்துரைக்கப்படுகின்றது. அவற்றுள் ஒரு அணுகுமுறை வேளாண்மையாளர் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற முகவர்களினூடாக நுண்பாக காப்புறுதிகளைப் பரவலாக்குவதாகும். இன்னொரு முறை காப்புறுதியை அதிகரிப்பதற்குத் தற்பொழுதுள்ள வங்கி வலையமைப்பினை (வங்கி - உத்தரவாதம்) பயன்படுத்துவதாகும்.

**11. தரவுகளைப் பாதுகாப்பதற்காக அமைப்பொன்றினை நிறுவுவதற்கு முயற்சியெடுத்தல்**

டிஜிட்டல் மார்க்கங்களின் அதிகரித்த பயன்பாட்டின் காரணமாக தரவும் வாடிக்கையாளர் பாதுகாப்பும் முன்னுரிமைக்குரிய விடயங்களாக மாறியுள்ளன. தரவுப் பாதுகாப்பு தொடர்பில், தற்பொழுது, நிதியியல் துறையில் தொடர்பான ஆர்வலர்களினால் ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. தரவுத்தளப் பாதுகாப்புத் தொடர்பான துறையின் எதிர்கால அச்சுறுத்தல், தொழிற்பாடுகள் மற்றும் உபாய நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடுவதற்காக நைஜீரியாவின் இலத்திரனியல் மோசடி அமைப்பினைப் போன்ற அமைப்பினை இலங்கை மத்திய வங்கி, ஏனைய தொடர்பன ஒழுங்குமுறைப்படுத்துநர்கள், நிதியியல் நிறுவனங்கள், பொலிஸ், தரவுப் பாதுகாப்பில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு முகவர்கள் போன்ற தரப்பினரின் பங்களிப்புடன் நிறுவுவதற்கு விதந்துரைக்கப்படுகிறது.

**முடிவுரை**

நைஜீரியாவின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் பேரார்வம் மிக்க இலக்குகளுடன் மேற்கொள்ளப்பட்ட போதும் அதனால் அவற்றை அடையமுடியாமல் போனமைக்கு மேலே விளக்கப்பட்ட குறைபாடுகளே காரணங்களாக அமைந்தன. இலங்கை அதன் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை மேற்கொள்ளும் போது அத்தகைய குறைபாடுகள் தவிர்க்கப்படுதல் வேண்டும். இலங்கை முன்னேற்றங்கள் தேவைப்படும் துறைகளை அடையாளம் காண்பதன் மூலம் இலங்கை யதார்த்த பூர்வமானதும் எய்தப்படக்கூடியதுமான இலக்குகளையே அடையாளம் கண்டுகொள்ளுதல் வேண்டும். நிதியியல் பணிகளின் தரத்தினை மேம்படுத்துவதன் மீதும் அதேவேளையில் இலங்கை முறைசார்ந்த நிதியியல் பணிகளின் கணக்கு வைத்திருப்பவர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். நாட்டில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதற்கு இலங்கை டிஜிட்டல் நிதி, காப்புறுதி நுழைவினை அதிகரித்தல், அனைத்தையுமுள்ளடக்கிய வாடிக்கையாளர் பாதுகாப்புப் பொறிமுறைகளை நடைமுறைக்கிடல், பாடசாலை பாடவிதானத்தில் நிதியியல் கல்வியைச் சேர்த்துக் கொள்ளுதல் என்பனவற்றின் மீது கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். இறுதி இலக்குகளுடன் சேர்ந்த விதத்தில் இலங்கை தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் வருடாந்த இலக்குகளுடன் நடவடிக்கைத் திட்டத்தினையும் ஒவ்வொரு ஆர்வலர்களிடமிருந்துமான தேவையான வரவு செலவுத்திட்ட ஒதுக்குகளையும் உள்ளடக்குதல் வேண்டும். போதுமான நிதியினைக் கொண்டிராத ஆர்வலர்களுக்கு உதவும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியானது உதவு நிதியினை நிறுவிக் கொள்ளலாம். இறுதியாக நைஜீரியாவின் நடைமுறைப்படுத்தல் பொறிமுறையினைப் பின்பற்றி முறைசார்ந்த கண்காணிப்பினையும் நடைமுறைப்படுத்தல் பொறிமுறையினையும் பின்பற்றுவது முக்கியமானதாகும்.

# அரச பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்தல் - ஜேர்மனியின் அனுபவம்

என். வை. டி. சி. வீரசிங்க
மேலதிகக் கண்காணிப்பாளர்
பொதுப்படுகடன் திணைக்களம்

உள்நாட்டு நிதியியல் சந்தைகளை, முக்கியமாக, அரச படுகடனுக்கான சந்தைகளை அபிவிருத்தி செய்வது பொருளாதார அபிவிருத்திக்கும் நாட்டின் உறுதிப்பாட்டிற்கும் பரந்தளவு நன்மைகளை வழங்கும். அபிவிருத்தியடைந்த நிதியியல் சந்தைகள் வங்கித்தொழில் துறையினூடாக பாரம்பரிய நிதியிடல்களுக்கு மாற்று வழிமுறைகளை ஊக்குவிக்குமென்பதனால் மூலவள ஒதுக்குகளை மேம்படுத்தி இடர்நேர்வுகளைப் பன்முகப்படுத்துகிறது. உள்நாட்டு நிதியியல் சந்தைகளின் அபிவிருத்தி, பணவீக்கத்தினைக் குறைத்து சேமிப்பினையும் வளர்ச்சியையும் அதிகரிப்பதன் மூலம் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை அதிகரிக்கிறது. மேலும், உள்நாட்டு நிதியியல் சந்தைகளின் (முக்கியமாக பணச் சந்தை மற்றும் அரச முறிகளுக்கான சந்தை) தொழிற்பாடுகள் வட்டி வீத வழிகாட்டல் அணுகுமுறையொன்றின் கீழ், நாணயக் கொள்கையினைச் சுமுகமாக ஊடுகடத்துவதற்கும் சந்தையினை அடிப்படையாகக் கொண்ட நாணயக் கொள்கையைக் காத்திரமான முறையில் பயன்படுத்துவதற்கும் இன்றியமையாதனவாகும்.

உள்நாட்டு நிதியியல் சந்தையில் தவிர்க்க முடியாததொரு பாகமாக விளங்கும் அரச பிணையங்கள் சந்தையின் அபிவிருத்தி இயக்கவாற்றல் மிக்க செய்முறையொன்றாக நோக்கப்படல் வேண்டும். இதில் சந்தையின் வினைத்திறனைக் கட்டியெழுப்புவதற்கும் படுகடன் பிணையங்களை வழங்குபவர் என்ற ரீதியில் அரசாங்கத்தின் நம்பகத்தன்மையினை நிறுவிக் கொள்வதற்கும் தொடர்ச்சியான பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் துறை உறுதிப்பாடு இன்றியமையாதனவாகும். காத்திரமான அரச உள்நாட்டு நாணயப் பிணையங்கள் சந்தையை நிறுவுவதற்கான முற்தேவைப்பாடுகள் நம்பகத்தன்மையும் உறுதியும் கொண்ட அரசாங்கம், ஆற்றல்மிக்க இறை மற்றும் நாணயக் கொள்கைகள், காத்திரமான சட்டம், வரி, ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு, சுமுகமானதும் பாதுகாப்பானதுமான தீர்ப்பனவு ஒழுங்குகள் மற்றும் தகுதிவாய்ந்த இடையேற்பாட்டாளர்களுடன் கூடிய தாராளமயமாக்கப்பட்ட நிதியியல் முறைமை என்பனவற்றை உள்ளடக்குகிறது.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் உறுதியற்ற பலயீனமான சந்தையிலிருந்து படிப்படியாக பரிணாம வளர்ச்சியைக் கண்ட ஜேர்மனியின் அரச பிணையங்கள் சந்தை மிக வலுவானதும் உறுதி வாய்ந்ததுமான சந்தையாக வளர்ச்சியடைந்து இன்று சந்தை அபிவிருத்திகளுக்கான முக்கிய ஆலோசனைகளை வழங்குமொன்றாகக் காணப்படுகின்றது. கடந்த காலத்தில், ஜேர்மன் முறிச் சந்தை, அநேகமான அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் பொதுவாக அவதானிக்கப்படுவது போன்று பெருமளவு வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய தளம்பல்களைத் தொடர்ந்து மிக உறுதியற்ற தன்மையினைக் கொண்டிருந்தது. காலப்போக்கில் இது படிப்படியாக இன்றைய நிலைக்கு பிரமாண்டமான முறையில் அபிவிருத்தியடைந்து, உலகில் நாட்டிற்கான படுகடனுக்கான மிகப் பாரியதும் மிகுந்த திரவத்தன்மை கொண்ட சந்தையாகவும் காணப்படுகிறது.

தற்பொழுது பெடரல் பிணையங்கள் மிகப் பரந்த முதலீட்டாளர் தளத்தினைக் கொண்டிருக்கின்றனர். ஜேர்மன் அரச பிணையங்களுக்கான கேள்வி ஜேர்மனிக்கும் உள்ளேயும் வெளியேயுமான அனைத்துத் துறைகளிலிருந்தும் வருகிறது. யூரோ பிரதேசத்திற்குள், டியூச் மாக்கில் பிணையங்களை

வெளியிடுவதில் காணப்படும் நாணய ரீதியான அநுகூலங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினால் ஜேர்மன் அரச துறை வழங்கல்கள் யூரோ பிரதேசத்திலுள்ள பங்காளர் நாடுகளின் அரச துறை கடன்பாட்டாளர்களுடன் நேரடியாகப் போட்டியிடும் தேவையை ஏற்படுத்தியது. எனினும், அவர்களது உயர்ந்த கொடுகடன் தரமும் திரவத்தன்மையும் அவர்களின் அடிப்படை அளவுக் குறியீட்டின் அந்தஸ்து நிலை மூலம் நன்மைகளைப் பெற்றதுடன் ஜேர்மன் அரச பிணையங்கள் தொடர்ந்தும் உயர்ந்த இடத்தினைப் பெற்றிருந்ததுடன் பன்னாட்டு, குறிப்பாக ஐரோப்பியரல்லாத முதலீட்டாளர்களைக் கவருகின்ற முதலீடுகளாகவும் காணப்பட்டன. பெடரல் பிணையங்கள் வெளிநாட்டு மத்திய வங்கிகளின் ஒதுக்குச் சொத்துக்களுக்கான முக்கிய வகிபாகத்தினையும் தொடர்ந்தும் ஆற்றின.

ஜேர்மனியில் பெடரல் நிதி அமைச்சு, பெடரல் அரசாங்கத்தின் படுகடன் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாக இருக்கிறது. எனினும், பெடரல் அரச கடன்பாடுகளையும் திரவத்தன்மையினையும் முகாமை செய்யும் பணி பெடரல் நிதி அமைச்சினால் ஏக முறையில் வைத்திருக்கப்படும் "நிதி முகவரிடம்" ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நிதி முகவரின் முக்கிய பணி, குறிப்பாக முதலாந்தரச் சந்தையில் பிணையங்களின் ஆரம்ப வழங்கலூடாக பெடரல் அரசாங்கத்திற்கான சரியான நேரத்தில் செலவுச் சிக்கனமான மற்றும் இடர்நேர்வு குறைந்த படுகடன் முகாமைத்துவப் பணிகளை வழங்குவதேயாகும். அதேநேரம் நிதி முகவரின் பணி யாதெனில் ஜேர்மன் பெடரல் அரசாங்கத்தின் அந்தஸ்தினை யூரோப் பிரதேசத்தின் அடித்தள அளவுக் குறியீட்டினை வழங்குமொருவராக வலிமைப்படுத்தி அதனை விரிவுபடுத்துவதேயாகும்.

அதேவேளை, அரசாங்கத்தின் இறைமுகவர் என்ற ரீதியில் புண்டஸ் பாங் பெடரல் அரசாங்கத்திற்காக தொழில்நுட்பப் படுகடன் முகாமைத்துவ கடமைகளை ஆற்றுவதுடன் பெடரல் பிணையங்களின் ஏலங்களையும் நடத்துகிறது. ஜேர்மன் பங்கு பரிவர்த்தனை, சந்தை முகாமைத்துவத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதுடன் பெடரல் அரசாங்கத்தின் பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்களையும் தீர்ப்பனவு செய்கிறது. இப்பணிகள் நிதி முகவரின் இணைப்புடன் பெடரல் அரசாங்கத்தின் சார்பில் மற்றும் அதன் பேரில் நிறைவு செய்யப்படுகின்றன. பெடரல் அரசாங்கத்தின் இறை முகவர் என்ற ரீதியில் புண்டஸ் பாங் வழங்குகின்ற வங்கித்தொழில் பணிகள், நாணய மற்றும் வெளிநாட்டு செலாவணிக் கொள்கை இலக்குகளிலிருந்தும் கடுமையான முறையில் வேறாக்கப்படுதல் வேண்டும் என்பதனைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். புண்டஸ் வங்கி, முதலாந்தரச் சந்தையில் பெடரல் பிணையங்களை ஏலமிடும் பொழுது கடன்களை வழங்காது என்பதுடன் பெடரல் பிணையங்களை அதன் சொந்த சொத்துப்பட்டியலிலும் சேர்த்துக் கொள்ளாது. இதன் இறை முகவர் வகிபாகத்தினைக் கணக்கில் கொள்கையில் இது இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் ஏற்புடைத்தாயிருக்கும்.

அநேக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளினாலும் அபிவிருத்தியடைந்த நாடுகளினாலும் பின்பற்றப்படுகின்றவாறான முதலாந்தர வணிகர்களூடாக வழங்கப்படுகின்ற பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் மாதிரிகளுக்கு மாறாக முதலாந்தர ஏலங்களை நடத்துகின்ற நியதிகளில் ஜேர்மனி விதிவிலக்கான முறைகளைப் பின்பற்றுகிறது. சிறப்பியல்பு வாய்ந்த இடையேற்பாட்டாளர்களைக் கொண்ட சிறியதொரு தொகுதியினருக்கு நேரடி விலைக்குறிப்பீடுகளுக்கான சிறப்புரிமை அணுகுவசதிகளை வழங்குதல் (அதாவது முதலாந்தர வணிகர்கள்) பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதும் புதிதாக வழங்கப்பட்ட பிணையங்களை ஈர்த்துக் கொள்வது அத்தகைய பிணையங்களை இறுதி முதலீட்டாளர்களுக்கு விநியோகித்தல் மற்றும் இரண்டு வழிகளில் விலைகளை வழங்குவதன் மூலம் (அதாவது பிணையங்களுக்கான வாங்குதல் மற்றும் விற்றல் விலைகள்) சந்தை உருவாக்குநர்களாக நடந்து கொள்ளுதல் என்பன அதிகரித்த வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறன் என்பனவற்றுடன் கூடிய சந்தை அபிவிருத்திகளை ஏற்படுத்தும். ஆர்வமூட்டும் விடயம் யாதெனில் மேற்குறிப்பிட்ட நிறுவப்பட்ட நடைமுறைக்கு மாறாக ஜேர்மனியில் முதலாந்தர வணிகர் முறைமை காணப்படாமையேயாகும். முதனிலை வணிகர் முறைக்கு சாதகமற்ற விதத்தில் ஜேர்மனி அதிகாரிகளினால் தெரிவிக்கப்படுகின்ற முக்கிய வாதம் யாதெனில் நிதியியல் நிறுவனங்களின் சிறிய தொகுதியினராக விளங்குகின்ற முதனிலை வணிகர்களினால் விலைச் சூழ்ச்சிகளின் மூலம் இடர்நேர்வு சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படலாம் என்பதேயாகும். ஜேர்மனியில் இந்நிலைமை கண்டறியப்பட்டமையினால், நிதி முகவரினால் ஒப்புதலளிக்கப்பட்ட முறி வழங்கும் ஏலக் குழுமம் பெடரல் அரசாங்கத்தின் ஏலங்களில் விலைக்குறிப்பீட்டினைச் செய்யும். தற்பொழுது இக்குழுமமானது ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளில் நிறுவப்பட்டிருக்கும் 36 கொடுகடன் நிறுவனங்களையும் முதலீட்டு நிறுவனங்களையும் உள்ளடக்கியுள்ளது. ஜேர்மன் அதிகாரிகளின்படி, முதலாந்தர ஏலங்களில் அத்தகைய பெரும் எண்ணிக்கையான விலைக்குறிப்பீட்டாளர்கள் கலந்து கொள்வது விலைக்குறிப்பீட்டாளர்களின் சதி முயற்சிகளைத் தடுத்து அதன் மூலம் ஏலங்களில் பெருமளவு போட்டித்தன்மையினை உருவாக்கி மேம்பட்ட வினைத்திறனுக்கு வழிவகுக்கும். இலங்கையிலும் கூட, கடந்த அண்மைக் காலத்தில் வெளிச்சத்திற்கு வந்த குறிப்பிட்ட முதனிலை வணிகர்களின்

குற்றஞ்சாட்டப்பட்ட மோசடி நடத்தைகளைச் சரியான நேரத்தில் காணக்கூடியதாக இருந்தது. ஜேர்மனியில், ஏலக் குழுமத்தில் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு, எந்தவொரு கலண்டர் ஆண்டிலும் இடம்பெறும் ஏலங்களின் முதிர்ச்சிகளின்படியான நிறைவேற்றலில் ஒதுக்கப்பட்ட மொத்த வழங்கலில் குறைந்தபட்சம் 0.05 சதவீதத்தினை உதவுதல் வேண்டும். இங்கு குறைந்தபட்ச பங்கினைச் சந்தாவாகச் செலுத்தத் தவறுகின்ற உறுப்பினர் நிறுவனங்கள் ஆண்டின் இறுதியில் குழுமத்திலிருந்து விலகுமாறு கேட்டுக்கொள்ளப்படும். குறைந்தபட்ச பங்குகளைச் செலுத்தும் தேவைப்பாட்டிற்குப் புறம்பாக, உறுப்பினர்கள் மேலதிகக் கடப்பாடுகள் எதனையும் கொண்டிருக்கமாட்டார்கள். எடுத்துக்காட்டாக, அவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் சந்தைகளை உருவாக்குகின்ற எந்தவொரு பணியினையும் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படமாட்டார்கள். பெடரல் பிணையங்களுக்காக விலைக்குறிப்பீடு மற்றும் விலைகளைக் கேட்டல், அல்லது கட்டாய அறிக்கையிடல் மற்றும் வழங்கலுக்கான ஆலோசனைப் பணிகள் என்பன அதாவது முதனிலை வணிகர்களின் வகிபாகத்திலிருந்தான முக்கிய விலகலாகக் காணப்படுகின்ற ஒவ்வொரு முறி வழங்கல் ஏலத்தினதும் தீவிரமான ஈடுபாடு முதலாந்தர வழங்கல்களிலுள்ள குழு உறுப்பினர்கள், சதவீத அளவுகளைக் குறிப்பீடு செய்யாமல் ஒதுக்கப்பட்ட நிறையேற்றப்பட்ட பங்குகளின் வழங்கல்களின் அளவின் அடிப்படையில் ஒவ்வொரு உறுப்பினர்களினதும் தர வரிசையினை வெளியிடுவதன் மூலம் நிதி முகவரினால் அங்கீகரிக்கப்படுகிறது.

ஜேர்மனி முறி வழங்கல் அதிகாரிகளினால் வழங்கல் திட்டமிடல் மிக முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. சந்தைப் பங்கேற்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர் பெறுமதி. அத்தகைய திட்டமிடலானது இறுதியில் சாதகமான கடன்பாட்டு நிலைமைகளின் தன்மையில் கடன்பாட்டாளர்களுக்குக் கொடுத்துத் தீர்ப்பனவு செய்யப்படும். ஆகவே, கலண்டர் ஆண்டொன்றின் போது பெடரல் அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்ட பெடரல் பிணையங்களின் ஏலங்கள் வருடாந்த வழங்கல் கலண்டரொன்றில் முன்னைய ஆண்டின் இறுதியில் நிதி முகவரினால் அறிவிக்கப்படுகிறது. வருடாந்த முன்னோடிப் பார்வையானது விற்பனைக்காக வைக்கப்படுகின்ற பெடரல் பிணையங்கள் தொடர்பான ஏலத் திகதி, திட்டமிடப்பட்ட வழங்கல் அளவு மற்றும் சரியான முதிர்ச்சித் திகதி போன்ற சரியான விபரங்களை உள்ளடக்கியிருக்கும். இவற்றிற்குப் புறம்பாக, காலாண்டு ரீதியான வழங்கல் கலண்டரும் வெளியிடப்படுகிறது. இது வருடாந்த முன்னோடிப் பார்வையிலிருந்தான விலகல்களை உள்ளடக்கியிருக்கும். வழங்குநரொருவர் என்ற முறையில் பெடரல் அரசாங்கம், வெளியிடப்பட்ட அதன் அட்டவணைகளுக்கிணங்க அதன் அறிவிக்கப்பட்ட ஏலங்களை நடத்துவதற்கு அயராது முயற்சிக்கும். எனினும், இத்திட்டங்களெல்லாம், கடன்பாட்டுத் தேவைப்பாடுகள், பெடரல் அரசாங்கத்தின் திரவத்தன்மை நிலைமை அல்லது மூலதனச் சந்தை நிலைமைகள் என்பன எல்லாம் ஒன்றுசேர்ந்து ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைத் தோற்றுவிக்குமாயின் சீராக்கி அமைக்க வேண்டிய தேவை ஏற்படும்.

ஜேர்மன் அதிகாரிகளினால் அங்கீகரிக்கப்பட்டவாறு அரச பிணையங்கள் சந்தையின் அபிவிருத்திக்கான முக்கியமானதொரு விடயம் யாதெனில் வேறுபட்ட கால இலக்குகளைக் கொண்ட முதலீட்டாளர் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வேறுபட்ட பிணையங்களின் கிடைப்பனவேயாகும். பெடரல் அரசாங்கம் பொதுவாக சமநிலைப்படுத்தப்பட்ட முதிர்ச்சித் தோற்றப்பாட்டுடன் கூடிய பெடரல் பிணையங்கள் கிரமமான முறையிலும் வழங்கப்படுவதனை பேணிக் கொள்வதற்கு பெடரல் அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. இது ஏலங்களில் பரந்தளவிலான பங்கேற்பினை உறுதிப்படுத்தும். அந்நோக்கத்திற்காக, நீண்ட கால முதிர்ச்சிப் பிரிவு வழங்கலில் காணப்படும் கடன்பாடுகளின் நிச்சயமான தன்மைக்கெதிராக சுழல்கின்ற குறுங்காலப் படுகடனின் பொதுவான குறைந்த கடன்பாட்டுச் செலவுகளைக் கணித்துக் கொள்வதேயாகும். புண்டஸ் வங்கியின் கிரமமான ஏலங்களின்படி, வேறுபட்ட முதிர்ச்சிகளைக் கொண்ட பிணையங்கள் அதாவது, பணச் சந்தைப் பிரிவில் ஆறு மாத திறைசேரி கழிவிடல் பத்திரம் (புவில்ஸ்), மூலதனச் சந்தைப் பிரிவில் இரண்டாண்டு பெடரல் திறைசேரி சான்றிதழ்கள் (ஸ்சட்ஸ்) ஐந்தாண்டு பெடரல் சான்றிதழ்கள் (போபில்ஸ்) மற்றும் முக்கியமாகப் பத்தாண்டு மற்றும் முப்பதாண்டு பெடரல் முறிகள் (புண்டஸ்) என்பன காணப்படுகின்றன. பணவீக்கத்துடன் இணைக்கப்பட்ட பெடரல் பிணையங்களும் (புண்ட் - லிங்கர்) கிரமமான அடிப்படையில் ஏலங்களுக்கு விடப்படுகின்றன.

பெடரல் அரசாங்க முறிகளின் முதலாந்தர வழங்கல்கள் முறிகளின் விலைக்குறிப்பீட்டு முறைமை தொடர்பில் ஏலங்கள் இடம்பெறுகின்ற இடம், ஏலங்களை அறிவித்தல் மற்றும் விலைக்குறிப்பீடுகளுக்கான அழைப்பு என்பனவற்றை உள்ளடக்கிய ஏலச் செயன்முறையின் தொழில்நுட்ப நடைமுறைப்படுத்தலுக்குப் பொறுப்பாக இருக்கும் புண்டஸ் பாங்கினால் வழங்கப்படும் இலத்திரனியல் ஏலத்தளம் ஏலம் இடம்பெற்ற நாளன்று கண்காணிப்பு விலைக்குறிப்பீட்டாளர்களின் சமர்ப்பிப்புக்கள் மற்றும் ஏலப் பெறுபேறுகளை வெளியிடுதல் என்பன தொடர்பில் பூரணமான வெளிப்படைத்தன்மையினைக்

கொண்டிருக்கிறது. நிதி முகவர் மற்றும் பெடரல் நிதி அமைச்சு ஆகிய இரண்டும் முறி விலைக்குறிப்பீட்டு முறைமையுடன் நேரடி இணைப்புக்களைக் கொண்டிருப்பதுடன் அவை பொருளாதார தீர்மானங்களையும் மேற்கொள்கின்றன (அதாவது ஏல நாளன்று ஒதுக்கு விலைகள் மற்றும் அளவுகள் போன்ற ஒதுக்கு நிலைமைகளை அவர்கள் தீர்மானிக்கின்றனர்) விலைக்குறிப்பீட்டிற்கான இறுதித் திகதி முடிவடைந்ததும் பொதுவாக ஒதுக்குத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் ஏலப் பெறுபேறுகள் முறி விலைக்குறிப்பீட்டு முறை மற்றும் நிதியியல் தகவல் வழங்குநர்களூடாக இரண்டு நிமிட இடைவெளியில் அறிவிக்கப்படுகிறது.

இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகளுக்காக பெடரல் அரசாங்கத்தின் சொத்துடமையாக ஒவ்வொரு ஏலங்களின் போதும் வழங்கப்பட்ட பங்குகளைத் தனியாக ஒதுக்கி வைக்கிறது. இத்தொகையானது முற்பணத்தில் வரைவிலக்கணம் செய்யப்படாததுடன் ஒரு ஏலத்திலிருந்து மற்றொரு ஏலத்திற்கு வேறுபடுகின்றது. சராசரியாக, வழங்கப்பட்ட அளவில் ஏறத்தாழ 20 சதவீதம் நோக்கத்திற்காகத் தனியாக வைக்கப்படுகிறது. ஏலத்தினைத் தொடர்ந்து இப்பிணையங்கள், இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகளின் பின்னணியில் நிதி முகவரினால் சந்தைக்குள் படிப்படியாக உள்ளீடு செய்யப்படுகின்றன. இதன் விளைவாக, இணைத்தரப்பினர்கள், முதலாந்தரச் சந்தையில் பெடரல் பிணையங்கள் வழங்கப்பட்ட பின்னரும் கூட வழங்குநர்களிடமிருந்து அப்பிணையங்களைக் கொள்வனவு செய்கின்றனர். மேலும், வழங்குநர் தொடர்பான காலப்பகுதியில் இதன் கடன்பாடுகளை அமுல்படுத்துவதற்கான நன்மைகளையும் கண்டறிய முடியும். எனினும் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகளும் கூட ஜேர்மன் பங்குப் பரிவர்த்தனை தொடர்பான இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகளை உள்ளடக்குகின்றன. இது பெடரல் அரச கணக்குகளுக்கான பட்டியலிடப்பட்ட பெடரல் பிணையங்களின் புண்டஸ் வங்கியின் வாங்குகின்ற மற்றும் விற்கின்ற நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கின்றது. இத்தொழிற்பாடுகள் வேறுபட்ட சந்தைப் பங்கேற்பாளர்களுக்கும் குறைந்த விலைக் கேள்வி வீச்சுடன் கூடிய திரவ வர்த்தகப்படுத்தல் பேணுதலுக்குமிடையில் பாரபட்சங்களைத் தோற்றுவிக்காத நியாயமான விலைகளை எய்துவதனைத் இத்தொழிற்பாடுகள் நோக்கமாகக் கொண்டுள்ளன. புண்டஸ் பாங் ஒவ்வொரு வர்த்தகப்படுத்தல் நாள் தொடர்பிலும் ஒவ்வொரு பட்டியலிடப்பட்ட பெடரல் பிணையத்திற்குமான பிராங்போட் பங்குப் பரிவர்த்தனை மீதான புண்டஸ் பாங் தொடர்பான விலையொன்றினை நிர்ணயிப்பதில் உதவுகிறது. இது முக்கியமாக அடித்தள அளவுக்குறியீட்டினை, முக்கியமாக சில்லறை வியாபாரங்களுக்காக வழங்குகிறது. இந்நிறுவன ரீதியான கட்டமைப்பு, சந்தையின் ஒவ்வொரு வர்த்தகப்படுத்தல் நாளுடனும் இசைந்து செல்கின்ற உத்வேகம் மிக்க விலைகளில் வர்த்தகப்படுத்தத்தக்க பெடரல் நிதியங்களை உறுதிப்படுத்துவதில் ஓரளவு பங்காற்றுகிறது. பெடரல் அரசாங்கத்தின் சொத்துடமைகளை, நிதி முகவர் பிணையங்களின் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளுக்கும் வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களுக்கும் பிணையமாகப் பயன்படுத்த முடியும். அதேபோன்று பிணையங்களின் கடன்வழங்கலுக்கும் பெடரல் அரசாங்கத்தின் பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்கள் புண்டஸ் வங்கியில் பேணப்படுகின்ற காசு மற்றும் பாதுகாப்புக் கட்டுக்காப்புக் கணக்குகளினூடாகத் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

ஜேர்மன் அனுபவம், போதுமான அடிப்படைகளைக் கொண்டிராத அல்லது பலயீனமான அடிப்படைகளைக் கொண்டிருக்கும் பொருளாதாரங்கள் அரச பிணையங்கள் சந்தையின் அபிவிருத்திகளுக்கெதிராக உறுதியானதும் நம்பகத்தன்மை கொண்டதுமான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைக் கட்டமைப்பிற்கு முன்னுரிமையளித்த வேளையில் நிதியியல் துறையினைச் சீர்திருத்துவதும் தாராளமயப்படுத்துவதும் கடுமை நிறைந்ததாக இருந்த போதும் இடைக்காலத்தில் சாத்தியமாகலாம்.

*இராஜகிரிய, சிறி ஜெயவர்த்தனபுர மாவத்தை, இல. 58இல் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கி அச்சகத்தில் அச்சிடப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் தொடர்பூட்டல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது.*